3931

T03931
R001I07

ஸ்ரீ ஹரதத்தசிவாச்சார்யாரின் கஞ்சனூர் சிவஹரதத்தரின்
மூன்ருவது சிஷ்யரான

# ஸ்ரீ அனந்த பத்மநாப குருஸ்வாமிகளின் சரித்திரம்.



திருவைய்யாறு கணேச சிரௌதிகள் அவர்களால் எழுதப்பட்டு
ஷி யார் குமாரர் குருஸ்வாமி சிரௌதிகளால் வெளியிடப்பட்டது.

3931

பிர்மானந்த பிரஸ், திருவையாறு.

விலை 10 அணா.

26024
1971
3931
MAHARAJA SERFOJI'S SARASVATHI ... TANJORE.
RECEIVED
JUL 1971



உ

குருகிருபை

ஸ்ரீ சிவாய பரப்பிர்ம்மணே நம:

திருப்பூந்துருத்தி

ஸ்ரீமத் அனந்தபத்மநாப நாராயண குருஸ்வாமி,

# சரித்திரத்தின் பூர்வ பீடிகா.

விநாயகர் பிரார்த்தனை

மவத் பர்வதத்தை மாதாமஹராக உள்ளவராயும் மஹானுக போதிலும் பிதாமஹர் இல்லாதவராயும் ஜகத்துக்கு காரண பூதராயும் கழுத்துக்குமேல்பட்டு யானைமுகத்தை ராயுமிருக்கிற சித்தி விநாயகரின் பொருட்டு நமஸ்கரிக்

ஸ்ரீ சிவாய குருவே நம:

குருப் யோ நம: கம் கணபதயே நம: தும் துர்க்காயை நம:

ம் க்ஷேத்திரபாலகஸ்வாமி நே நம: ஸம் ஸரஸ்வத்யை நம:

பம் பரமாத்மநே நம:

ஸ்ரீமத் அனந்த பத்மநாபநாராயண குருஸ்வாமிநே நம:

மேலத்திருப்பூந்துருத்தியில் காவிரியின் தென்பால்

அமர்ந்திருக்கிற

# ஸ்ரீ அனந்தபத்மநாப நாராயண குருஸ்வாமிகள் சரித்திரம்.

THE TANJORE ... HAL LIBRARY * TANJORE

## அத்தியாயம் 1.

ஒருசமயத்தில் சாரதாநவராத்திரியின் முடிவான ஸரஸ்வதிபூஜையன்று ராத்திரி விஜயதசமியன்று விடியற்காலத்தில் உலகத்திலுள்ள ஸமஸ்தமான ஜனங்களுடைய ஆதி வியாதியின் ஸமஸ்தபீடைகளுடைய நிவிருத்தியின்பொருட்டும் சரீரத்தில் ரோகமில்லாதவர்களாயும் திருடசரீரமுள்ளவர்களாயும், புத்திர பௌத்திர மித்திர களத்திரபந்துஜனங்களோடுகூட சுகஜீவிகளாகவுமிருக்கவேண்டியதின்பொருட்டும் பிரும்ம, க்ஷத்திரிய, வைச்ய, சூத்ரர்கள் முதலானவர்களுக்கு ஒருவருக்கொருவர் அஸூயையும் விரோதபாவமும் உண்டாகாமலிருந்துகொண்டு ஒருவருக்கொருவர் ஸிநேகத்தினால் வருணாச்ரம தர்மங்களுக்கு நழுவகவில்லாமல் எப்பொழுதும் ஒன்றாகவே சேர்ந்திருப்பதின் பொருட்டும் ஸர்வஜனங்களுக்கும் இஷ்ட சித்தியையும் மங்களத்தையும் உண்டுபண்ணுவதின் பொருட்டும் ஸ்ரீ ஹரதத்த சிவாச்சாரியாரினால் அனுஷ்டிக்கப்பட்டதாயும் அதுமுதல் சிஷ்யபரம்பரையில் அனுஷ்டித்து வருகிறதாயும் கணபதி காயத்ரீ திருபுரசுந்தரீ பாலாபரமேச்வரியோடு மருத்யுஞ்செயம் முதலான சில தேவதைகளை பிரதானமாகவுள்ள புண்ணியஸ்வரூபமான வாஞ்சாகல்பலதா ஹோமமென்ற மஹாயாகத்தின் முடிவில் ஹோமதெரிசனத்திற்கு வந்திருக்கும் பிரும்ம க்ஷத்திரிய வைச்ய சூத்ரர்கள் முதலான மகாஜனங்களின் ஸதஸ்ஸில் ஸ்ரீஹரதத்த சிவாச்சாரியாரின் சிஷ்யபரம்பரையில் ஒருவரான அனந்த நாராயணரென்ற ஸ்தாணு சிவனைப்பார்த்து அவரின் சிஷ்யரான அனந்தவைத்தினாதர் என்பவர் "ஹே குருநாதா! இக்கலியுகத்தில் வெகுசுலபமாய் பாபங்களை பரிகாரஞ்செய்துகொண்டும் சகல ஜனங்களுக்கும் எக்காரியத்தைச் செய்துவந்தால் சிரமமன்னியில் இகத்தில் புத்திர மித்திர களத்திர பந்து பரிஜனங்கள் முதலான சகல சம்பத்தோடும் வெகுகாலம் சுகித்திருந்து முடிவில் வைராக்ய சம்பத்தோடு ஞானியாகஆகி அழிவில்லாத ஆனந்தஸ்வரூபமான மோக்ஷத்தையும் அடைவார்களோ அப்பேர்பட்ட சுகமான கிஞ்சிற்றேனும் சிரமமன்னியில் வெகு சுலபமாயும் இருக்கக்கூடிய விஷயத்தை எனக்கு உபதேசம் செய்து என்னை கிருதார்த்தனைச் செய்யவேணு"மென்று தன்குருவை பிரதக்ஷிணநமஸ்காரஞ்செய்து வணக்கத்துடன் அஞ்சலிபந்தனம்செய்துகொண்டு பிரார்த்தித்தார்.

இப்படிப்பிரார்த்தித்த தனது சிஷ்யரான அனந்த வைத்தியரைப் பார்த்து புன்சிரிப்புடன் மகா சந்தோஷத்தோடு அனந்த நாராயண மென்ற ஸ்தாணுசிவன் சொல்லுகின்றார்.

ஹே அனந்த வைத்தியநாதா! நீ கேட்ட விஷயமானது மிகவும் சிலாக்யமாயும் உலகத்திலே ஸர்வஜனங்களுக்கும் பரம க்ஷேமத்தையும் சௌக்யத்தையும் உண்டுபண்ணுவதாயும் இருக்கிறபடியால் ரொம்பவும் சிலாக்கியமாயிருக்கிறது. நீ கேட்ட இந்த விஷயத்தை ஒரு காலத்திலே மத்தியார்ச்சுனமென்கிற மகாக்ஷேத்திரத்தில் ஒரு பிராமணோத்தமர் ஸர்வேச்வரரான ஜகதீச்வரனை யக்ஞத்தால் திருப்தி செய்து வைக்கவேணுமென்றும் வேதத்தில் சொல்லியபடி தௌர்ப்பிராமண்யத்தை பரிகாரஞ் செய்துகொள்ளவேணுமென்றும் நினைத்து அக்கினிஷ்டோமம் என்னும் யாகத்தைச் செய்தார். அதிலே மூன்றாவது தினத்தில் யக்ஞசாலையில் யாகத்தின் தெரிசனத்திற்காக வந்திருக்கும் ஸ்திரீகளென்ன புருஷர்களென்ன வித்வான்களென்ன பிராமணர்கள் முதலான ஸர்வ மகாஜனங்களென்ன இவர்களால் சூழப்பட்டிருக்கும் யக்ஞமண்டபத்தில் ஸ்ரீமத் அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமிகளின் பெருசிஷ்யர்களுக்குள் ஓர் முக்ய சிஷ்யரான சங்கரசிவனென்பவரை நோக்கி அவர் சிஷ்யரான கிருஷ்ண சிவனென்பவர் தனது குருவைக் கேட்டார்:

சங்கரசிவனென்ற மகான் தன் மனதினால் கிருஷ்ணசிவன் கேட்டவிஷயமானது உலகத்திற்கெல்லாம் மங்களங்களைத் தை உண்டுபண்ணுவதாயிருக்கிறது என்று நினைத்து மகாசந்தோஷத்தோடு நீதான் எனக்கு சரியான சிஷ்யன் உன்னுடைய கேள்வியெல்லாம் ஜகத்துக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறபடியால் ரொம்பவும் நன்றாயிருக்கிறது சொல்லுகிறேன் கேள்.

பதினான்கு லோகங்களிலேயும் எல்லாசௌக்கியத்தையும் கொடுக்கக்கூடியது குருசரணாரவிந்த பக்தியைத்தவிர வேறில்லை. குருபக்தியானது கல்பகவிருக்ஷம் காமதேனு சிந்தாமணிகள்போல் எதுகளைத்தான் கொடுக்காது மோக்ஷத்தைக்கூடக் கொடுத்துவிடும். இதனால் புத்திர மித்திர பௌத்திர களத்திர பந்துபரிஜன தனதான்யங்கள் முதலான ஸகல சம்பத்தோடும் பரமஸௌக்யத்தை உண்டுபண்ணுவதாயும் சகல மதஸ்தர்களான ஸர்வ ஜனங்களால் அவரவர்களின் மதப்படி எந்தெந்த விதமாய் தியானித்து உபாசிக்கிறார்களோ அந்தந்த விதமான ரூபத்தோடு மூர்த்திகரித்து எதிரில்வந்து தெரிசனம் கொடுத்து அவரவர்களின் இஷ்டத்தைப்பூர்த்திசெய்து அநுக்கிரகித்து வருகின்ற கடவுளாயும் முடிவில் ஞானவைராக்கியத்தை உண்டுசெய்து ஜனனமரணமான பெரிய ஸம்சாரமாகிய பெருங்கடலை வற்றச் செய்வதாயும் அக்ஞானத்தினால் கண்களுக்கு மெய்யாகத் தோன்றுகின்ற

உலகமுழுவதும் சொர்ப்பனம்போலவும் புத்திப்ரமணத்தினால் கிளிஞ்சல் வெள்ளி போலவும் கயறு சர்ப்பம் போலவும் பொய்யாகத் தோன்றுகிறதே தவிர வேறில்லை என்று நிச்சயமான அறிவை உண்டு பண்ணுவதாயும் மூன்று காலங்களிலேயும் எப்பொழுதும் அழிவில்லாததாயும் ஸத்தியமாயும் அகண்ட சச்சிதானந்த ஸ்வரூபமாயும் உள்ளும் வெளியிலும் எங்கும் நிறைந்த பரம்பொருளாய் விளங்கும் ஆத்மஸாக்ஷாத்காரமென்ற மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதாயு மிருக்கிறபடியால் குருஸ்மரணமான பக்திதான் ரொம்பவும் சிலாக்யமாயிருக்கிறது. நீ உன்மனதை வேறுஇடத்தில் செலுத்தாமல் ஏகாக்கிர சித்தத்தோடு சாவதானமாகக் கேளென்று சொல்லிவிட்டு தான் குருசரணாரவிந்தத்தை நன்றாகத் தியானஞ் செய்துகொண்டு சங்கரசிவன் தன் சிஷ்யனைப்பார்த்து குருவின்மகிமையைச்சொல்லுகின்றார்,

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 2.

ஹேகிருஷ்ணசிவா! உலகத்தில்நீகேட்டவிஷயமான சௌக்கியத்தை சகலஜனங்களும் வெகுசுலபமாக அடையவேண்டுமானால் முக்கியமாய் குருஸ்மரணமான பக்தியைத்தவிர வேறுமார்க்கம் கிடையாது, வேறு பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்களென்ற தெய்வங்களைத் தியானித்து உபாஸித்தாலும் ஒவ்வொரு தெய்வத்தைத் தான் உபாஸித்ததாக ஏற்படும். அதுவுமன்றி சகல மதஸ்த்தர்களுக்கும் வேறு வேறு மதமாகவும் தோன்றுகிறது. ஸர்வ தேவதாஸ்வரூபமான குருவை உபாஸித்தால் அந்தமதம் எல்லாமதஸ்தர்களுக்கும் மிகவும் சம்மதம்.

உலகத்தில் எத்தனை தெய்வங்களுண்டோ அத்தனை தெய்வங்களும் குருஸ்வரூபத்தைத் தவிர வேறில்லாததால் குருவானதெய்வந் தான் எல்லா மதஸ்தர்களுக்கும் உயர்ந்ததாயிருக்கிறது.

வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் ஸ்மிருதி இதிகாச புராணங்களினலும் குருதான் பிரும்மா குருதான் விஷ்ணு குருதான் ருத்ரன், ஆத்ம சாக்ஷாத்காரமான எங்கும்நிறைந்த பரபிர்மமென்ற பொருளும் குருதான், ஸமஸ்த தெய்வங்களும் குருதான்.

வெளிக்கண்களுக்கு மெய்யாகத்தோன்றுகிற இந்தப்பொய்யான விசித்திர பிரபஞ்ச ரூபமான உத்பிஜம, ஸ்வேதஜம், அண்டஜம், ஜராயுஜம் என்ற ஈ, எறும்பு, புழு, பசு, பக்ஷி, கொடி, செடி, மரம், ஜலம், மலை, மனுஷ்யர்கள் முதலான எண்பத்துநான்குலக்ஷம் ஜீவராசிகளான ரூபமாயும், குருவின் உபதேசத்தினல் மனனம் செய்து, ஞானமாகிற உள்கண்ணுல் அறிகிற பிரும்மானந்தமாயும் பரமசுகத்தைக் கொடுக்கிறதாயும் கேவலம் ஞானஸ்வரூபமாயும், பிரபஞ்சாதீதமாயும், ஆகாயத்திற்கொப்பானதாயும், தத்வம்ஸிமுதலான மஹா வாக்கியங்களினுலே காணப்படுகிறதாயும், ஒன்ருயும், நித்தியமாயும், நிர்மலமாயும், அசைவற்றதாயும், ஸர்வ சாக்ஷியாயும், பேர்களென்ன கைகால்கள் முதலான ரூபங்களென்ன எண்ணங்களென்ன மூன்று குணங்களென்ன இவைகளில்லாததாயும், அகார உகார மகாரமான ஓங்காரஸ்வரூபமாயும், ஸர்வாந்தர்யாமியாயும் தன்னைத்தவிர வேறு இரண்டாவது இல்லாததாயும், எப்பொழுதும் சத்தியமாயும், ஆத்ம வஸ்துவென்ற பரப்ருும்மஸ்வரூபமாயிருக்கிறது குருதான் என்றும் பிரும்மத்தையறிந்த மகான்களான பெரியோர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது.

உலகத்தில் ஒருவன் பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்கள் முதல்ான ஸர்வ தேவதைகளிடத்திலும் மற்றவர்களிடத்திலும் தவறுதலாய் மிகவும் பிசகான அபராதத்தைச்செய்து அதினல் கோபம் ஏற்பட்டுவிட்டால் தன் குருவினல் அந்த கோபத்தை நிச்சயமாய் தீர்த்துக் கொள்ளலாம். ஒருவன் குருவினிடத்தில் கோபம் வரும்படி பிசகான அபராதத்தைச் செய்துவிட்டால் பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்களென்ற மூவர்களாலும் மற்றயாவர்களாலும் அந்த குருவின் கோபமான அபராதத்தை ஒருவிதத்தினுலும் நிவர்த்திசெய்யவே முடியாது நிச்சயம். ஸர்வ ஜனங்களும் எத்தேசத்திலும், எக்காலத்திலும, எச்சமயத்திலும் வேடிக்கையாகக்கூடபரிகாசமென்ன, தூஷணையென்ன, கோபமென்ன, குருசொல்லுக்கு எதிர்த்துக் கோணலாக பதில் சொல்லுவதென்ன, அவர்சமீபத்தில் முன்னிலும் பின்னிலும் பக்கத்திலும் சமீபமான பீடத்தில் உட்காருவதென்ன, அவரிடத்தில் பேசும்போது மஹா வணக்கத்தோடு கையைக் கூப்பிக்கொண்டாவது, கையைக் கட்டிக்கொண்டாவது, கையால் வாயை மூடிக்கொண்டாவது, பேசவேண்டும். அவர் நடக்கும்போது கைகளைக் கூப்பிக் கொண்டாவது, கட்டிக்கொண்டாவது மிக்க வணக்கத்தோடு பின் தொடர்ந்து நடக்கவேண்டும்.

இந்த விதம் செய்யாமல் பேசும்போதும், நடக்கும் போதும், அவர் முன்னில் தேக்குமரம்போல் கைகால்களை விறைக்கச்செய்து நின்றுகொண்டு கிளைகள் காற்றினால் விசைத்தபடியே அசைவதுபோல் கைகளை அசைத்துக்கொண்டு பேசுவதென்ன, ஓட்டத்தைப் போகவாத் தள்ளுகிற துடுப்புகளைப்போன்ற விரைப்பாக கைகளை போகவர வீசிக்கொண்டு முன்னதாக நடப்பதென்ன, குருவின் பிரசாதமான அனுக்கிரகத்தினால் கிடைத்த ஸகல வித்தையாலும் புத்தியாலும் தனக்கு சமானம் இவ்வுலகில் ஒருவரும் கிடையாதென்று மத்தியான மிடாக்குரங்கு தனதேகத்திலுள்ள இகழ்ச்சியான இடத்தைப் பார்த்து சந்தோஷிப்பதுபோல் தன் மாரைத் தானேபார்த்து சந்தோஷத்தோடு நான் என்ற எண்ணமாகிற திமிருள்ள கர்வத்தினால் பொட்டயனாயிருந்து நரகமாகிற பெரும் பாழுங் கிணற்றில் விழுந்திருக்கிறோம் என்று தெரியாமல் தன்னைச் சேர்ந்த ஜனங்களோடு பேசுங்காலத்தில் எனக்குகுரு பாடம்சொல்லும் சமயத்தில் என்னிடத்திலிருந்து வெகுசந்தேகங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்றும், குருபதேசத்தின மகிமையானபுத்தியால் விருத்திசெய்து இல்லறத்தில் பரமக்ஷேமத்தை அடைந்து முடிவில் மோக்ஷமான சாத்வத அடையும்படி வித்தைகளை மஹா கருணையோடு தனக்குபதேசித்து அனுக்கிரகித்த சர்வ தேவதாஸ்வரூபரான தன் குருவை மிக்க வணக்கத்தோடு கைகளைக்கூப்பித்துதித்து புகழ்ந்து பேசாமல உக்கிரமாய்ப்பித்து பிடித்தவன்போல் மனதிக்கிசைந்தபடி இகழ்ச்சியாக அவமதித்துப் பேசுவதென்ன, வேதங்கள் சாஸ்திரங்கள் பெரியோர்கள் இவர்களால சொல்லுகிற விதப்படி குருவின உத்திரவை வணக்கத்துடன் பயபக்தியோடு சிசுருஷை செய்யும்படியான பாக்கியம் தனக்கு கிடைத்தென்று சந்தோஷத்தோடு செய்யாமலிருப்பதுடன் குருவின் சிசுருஷை முதலான நல்லகாரியங்களை சிரத்தையாக செய்துவருகிற ஸாது ஜனங்களை உற்சாகம் செய்துவைத்து மேலுக்குமேல் நன்றாகச் செய்யும்படி தூண்டுதல் செய்யாமல் போனாலும், ஒருவிதமான பிரயோசனமன்னியில் பரிகஸித்தும், தூஷித்தும், சிசுருஷை என்ன மேறுதர்ம காரியங்களென்ன இதுகளை செய்யவொட்டாமல் மனதைக் கெடுத்து தடுத்து விடுவதென்ன இன்னும் சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்கள் முதலான தர்ம சாஸ்திரங்களுக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் விரோதமான சரிதையைச் செய்வதென்ன இவைகளான தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமான கெட்ட நடத்தையை எவர்களாவது ஒருவர் செய்தால் செய்தவர் மாத்திரமல்லாமல் தன்னைச்சேர்ந்தவர்களுடன் தான் வியாதி தரித்திரம் முதலான கஷ்டங்களை அனுபவித்து நரகங்களில் விழுவதுமன்னியில் தன்பெண்டு பிள்ளைகள் முதலானவர்களுக்கும் மிகுந்த துன்பங்களை அனுபவிக்கும்படி செய்து விடுகிறான்.

முக்கியமாய் தனக்கு இகத்திலும் பரத்திலும் மிகுந்த சுகத்தைக் கொடுக்கக்கூடியதான மந்திர, யந்திர, தந்திரங்கள், முதலான வேத

சாஸ்திரங்களின் சகல தத்துவங்களையும் மஹா தயவோடு உபதேசித்த குருவினிடத்தில் கெட்டநடத்தையைசெய்வது பிசகென்று தெரியாமல் செய்து விட்டால் குரு கிருபாமூர்த்தியானதால் அந்தப்பிசகை பொருத்துக்கொண்டு மறுபடி பிசகு செய்யாமலிருக்கும்படி நல்ல மார்க்கத்திலேயே அவன்புத்தியைதிருப்பச்செய்து அனுக்கிரகித்து விடுவார்.

நாம் செய்வது பிசகென்று அறிந்துகொண்டே அந்தப்பிசகைச்செய்து விட்டால் அந்தப் பிசகானது அவருக்கும் ஏழு தலைமுறை வரையில் அவர் வம்சத்திலுண்டாகிற குழந்தைகளான ஆண் பெண் மக்களுக்கும் மிகுந்த சிரமமான பலவித கஷ்டங்களை நிச்சயமாகக் கொடுத்து விடும்.

அவர் வம்சத்திலுண்டான ஒருவர் கஷ்டங்களை அனுபவித்து வருங்காலத்தில் இந்தக்கஷ்டங்கள் எதனால் பீடிப்பதென்று யோஜித்து நம் முன்னோர்கள் செய்த வினையென்று தீர்மானித்து குரு பக்தியைச் செம்மையாகச் செய்தால் குருவின் அனுக்ரகத்தினால் அவ்வம்சத்தி லுண்டானயாவர்களின் ஸகல கஷ்டங்களும் நீங்கி அது முதல் ஸந்ததி முதலான சகல சம்பத்தோடு இல்லறத்தில் சுகமாக வாழ்வார்கள்.

உலகில் குருவிற்கு சமானமான தெய்வம் வேறொன்றுமில்லை குரு என்ற இரண்டு அக்ஷரமுள்ள ஓர் பதம் ஸமஸ்த ஜனங்களுக்கும் ஸர்வத்தையும் கொடுக்கும். கு என்ற அக்ஷரத்தை அஞ்ஞானமென்ற அந்தகாரமான பெரும் இருளென்றும் ரு என்ற அக்ஷரத்தை ஞானரூபமாய் எல்லா விடங்களிலும் பிரகாசிக்கும் பெருஞ்ஜோதி என்றும் ஆகமங்களால் சொல்லப்படுகிறது. அஞ்ஞானமான பெரும் இருளை நிரூபமரூபமென்ற குருவான ஜ்யோதியானது விழுங்கி விடுவதால் குருதான ஞானரூபமான பரப்பிரும்மவஸ்து என்பதற்கு கொஞ்சமேனும் ஸந்தேகமில்லை கு என்ற அக்ஷரமானது பரப்பிரம்மத்தை அறியமுடியாமல் மறைவாய்ச்செய்கிற அஞ்ஞானமென்ற அந்தகாரமான ஒருபெரிய திரையானது. "ரு" என்ற அக்ஷரமானது பரப்பிரம்மத்தை அறியும்படி செய்கிற ஞானமான அக்கினியாயிருந்து அக்ஞானமான அந்தகாரமென்ற பெரிய திரையைத்தடுத்து பொசுக்கித் தள்ளிவிக்கிறது. அக்ஞானமாகிய பெரும் இருளை சுத்தமாய்ப் போக்கடித்துவிடுவதால் "குரு" என்று வேதங்களால் சொல்லப்படுகிறது. குருதான் ஆத்ம ஸாக்ஷாத்காரமென்ற பரப்பிரம்மமே தவிற வேறில்லை. குருதான பரப்பிரும்மமென்ற பொருளுக்கு வாசகம்.

குகாரமானது ஸத்வரஜஸ்தமஸ்ஸான குணங்களைக் காட்டிலும் அதீதமாய் வேறாகயிருக்கிறது. ரு காரமானது கண்களுக்குத் தோன்றுகிற அநேகவிதமான ரூபங்களைக் காட்டிலும் அதீதமாய் வேறாகயிருக்கிறது.

ஸாத்விக ராஜ ஸதாமஸங்களான குணங்களென்ன, வெருவித மான ரூபங்களென்ன இவைகளான குணரூபங்கள் முதலான ஒன்றும் ஸம்பந்தமில்லாததால் குருஎன்று சாஸ்த்திரங்களால் சொல்லப்படுகிறது "கு" என்ற முதல் எழுத்தானது மாயையானது மோகம் முதலான குணங்களைப் பிரகாசிக்கச்செய்கிறது ரு என்ற இரண்டாவதெழுத்தானது ஞானஸ்வரூபமான பரபிரம்மமாகயிருந்து நிஜம் தெரியாமல் செய்கிற மாயையான சித்தப்பிரமணங்களை அடியோடு நிவர்த்திசெய்கிறது. இந்தப்பிரகாரமிருக்கிற குரு என்றபதமானது மிகவும் ஸ்ரேஷ்டமானது. அந்த குருஎன்ற பதமானது தேவர்களுக்கும் கூட கிடைக்கத்தகாதது குருவை எப்பொழுதும் தியானித்து உபாஸித்தால் சர்வஸௌக்கியத்தை அடையலாம். குருவின் நாமமான குரு என்ற மந்திரத்தை குருப்யோநமஹஎன்று எப்பொழுதும் ஜபிக்க வேண்டும். குருமூர்த்தியின் ரூபத்தை எப்பொழுதும் தியானிக்க வேண்டும். குருவின் உத்தரவை சிரஸால் வகித்து எப்பொழுதும் நன்றாக நடத்தவேண்டும். குருவைத்தவிர வேறு ஒன்றையும் எண்ண வேவேண்டாம்.

ஒன்றையும் நினைக்காமலே குருவின் பிரஸாதத்தால் எல்லாவற்றையும் அடையலாம். கெட்டஸ்திரி ஆசைநாயகனை எப்பொழுதும் நினைப்பதுபோல் குருவை தியானம் செய்யவேண்டும். கெட்டஸ்திரியானவள் அக்னி சாக்ஷியாக விதிப்படிதன் கையைப் பிடித்து விவாஹம் செய்து கொண்ட புருஷனை நினையாமல் தள்ளிவிட்டு நாம் செய்கிற காரிமானது தர்மசாஸ்திரங்களுக்கு விரோதம், கெட்ட நடத்தை கொடுமையான பாபம். இஹத்திலும் பரத்திலும் மிகுந்த கஷ்டங்களைக் கொடுக்கும் என்று கொஞ்சமேனும் அறியாமல் ஸ்வைரிணீ என்ற தன் இஷ்டம்போல் மனதுக்கிசைந்தபடி நடப்பதான ஒரு கெட்ட ஸ்திரியானவள் தான் பிறந்ததாய் தந்தையின் குலமென்ன, சீலமான தன் இருப்பென்ன, தன் ஜாதியான பந்துஜனங்களென்ன, கற்புடையவளென்ற சிலாக்கியமான கீர்த்தி என்ன தனது தேகத்தில் ரோகமில்லாமல் புஷ்டியோடு மேலுக்கு மேல் விருத்தியடைவதென்ன, இவைகள் எல்லாவற்றையும் அடியோடு தள்ளிவிட்டு கஷ்டங்களான நரகங்களைக் கொடுக்கக்கூடிய வேறு புருஷனை ஆசை நாயகனை எப்பொழுதும் மனசை விட்டுப் பிரியாமல் நினைத்துக்கொண்டிருப்பதுபோல தன் பெண்டு பிள்ளை, பந்துஜனங்கள் முதலானவர்களையும் தன்சரீரத்தையும் மறந்து குருவைத்தவிர வேறு ஒன்றையும் நினையாமல் தைல தாரையைப்போல் இடைவிடாமல் எப்பொழுதும் குருவை தியானம்செய்யயவேண்டும். இவ்விதம் ஒருவன் செய்து வந்தால் குருவின் வாக்கில் உபதேசரூபமாக இருக்கும். ஆத்மசாக்ஷாத்காரமான பரபிரும்மத்தை குருவின் பிரசாதமான அனுக்கிரகத்தால் நன்றாக அறிந்து அடைந்துவிடுகிறான்,

ஒருவன் தினந்தோறும் பக்தியோடு குருவை நமஸ்கரித்து உபாஸித்து வந்தால் உபாஸித்தவனைக் கிருதார்த்தனைச் செய்வதுமன்றி அவனைச்சேர்ந்தவர்களோடு அவனையும் பரம ஸௌக்கியத்தை அடையும்படி செய்துவைத்து கிருதார்த்தனைச் செய்துவிடுவார். ஸ்ரீ குருவினுடைய இரண்டு பாதங்களும் எந்தத்திசையில் விளங்கிக்கொண்டு வருகிறதோ அந்தத் திசையைக்குறித்து எதிர்முகமாக தினந்தோறும் பரம பக்தியோடு குருவின்பாதங்களைத் தியானித்து நமஸ்காரம் செய்துவரவேண்டும். அப்படிச்செய்து வந்தால் நமஸ்காரம்செய்பவரென்ன, அவருடையமாதா,பிதா, மாமனார், மாமியார், முதலானவர்களென்ன, இவர்களுடைய குலகோடிகளை நமஸ்க்கரிக்கிற நிமித்தத்திலேயே பாபங்களான பெரிய சம்ஸாரமாகிற கஷ்டங்களிலிருந்து தயாமூர்த்தியான ஸத்குருவானவர் விடுவித்து, ரக்ஷித்துக் கிருதார்த்தர்களாகச் செய்துவிடுகிறார். ஆகையால் நீயும் சத்குருவை நன்றாக அறிந்து மூன்று காலத்திலேயும் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்யவேண்டும்.

குருவென்ற தெய்வம் சர்வ பிராணிகளாலும் வணங்கத்தக்கதாயிருப்பதால் ஒருசமயத்திலும் அவமதிக்கக் கூடாது. அப்படி அவமதித்தவர்கள கொடுமையான துன்பத்தை அடைவார்கள். புத்திமான்களாக இருக்கப்பட்ட சிஷ்யர்கள் குருவின் முன்னில் பொய்யென்ன, ஆத்திரத்தோடும் கர்வத்தோடும் உக்கிரமான வார்த்தையென்ன, இவைகளை ஒருகாலத்திலும் சொல்லவே கூடாது. இன்னும் குருவைப் பார்த்து நீ என்று ஏகவசனமாய் சர்வத்தோடு அவமதிப்பாக குருவின் சன்னிதானத்திலேயே பேசுபவன், புல், பூண்டு, செடி, கொடி, விருக்ஷம், பசு, பக்ஷி, மிருகம், மனிதர்கள், ஜலம் முதலியவை கொஞ்சமேனும் இல்லாத காட்டில் பசி தாகத்தால் வருந்தி மிக துன்பத்தை அடைந்த பிரம்ம ராக்ஷஸாகவே ஆவான்.

குருதான் மோக்ஷமென்ற ஆத்ம சாக்ஷாத்காரமான பரபிர்மவஸ்து. "கு" என்ற எழுத்தானது ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களில்லாதது. "ரு" என்ற எழுத்தானது ஆகாரமான ரூபமில்லாதது. குணங்களும் ரூபங்களும் இல்லாமல் அரூபமாக யிருந்துகொண்டு லோகத்தில் சகல ஜனங்களுக்கும் எல்லாவற்றையும் கொடுக்கக்கூடிய பரபிரும்ம வஸ்துதான் குரு என்று சொல்லப்படுகிறது.

உலகத்தில் குருதான் மும்மூர்த்திகளாக யிருக்கிறார். குருதான் மூன்று கண்களில்லாத இரண்டு கண்களோடுகூடிய சாக்ஷாத் பரமசிவன், குருதான் நான்கு கைகளில்லாத இரண்டு கைகளோடுகூடிய சாக்ஷாத் மகாவிஷ்ணு, குருதான் நான்கு முகமில்லாத ஒரு முகத்தோடு கூடிய சாக்ஷாத் பிரும்மதேவர் என்று ஆகமாதிகளால் சொல்லப்படுகிறது. மும்மூர்த்திகளாகிய பிரும்பா, விஷ்ணு, ருத்திரர்கள்கூட கேவலம்குரு சேவையினலேயே, குருவின் பிரசாதத்தால் தான் சிருஷ்டி, பரிபாலனம், சம்ஹாரம் என்ற செய்கைகளின் சாமர்த்தியத்தை அடைந்திருக்கிறார்கள்.

தெய்வங்களுக்குள் குருஎன்ற தெய்வந்தான் மிகஉத்தமம். எவரும் மனம், வாக்கு, சரீரம், இவைகளால் பக்தியோடு கொண்டாடத்தகுந்தது. அதுதான் பரபிரும்மம். மூன்றுகாலங்களிலேயும் எப்பொழுதும் இருக்கிறதாயும், மாயைமுதலான ஒருவித தோஷ சம்மந்தமில்லாமல் சுத்தமாக இருப்பதாயும், எத்தேசத்திலேயும் எக்காலத்திலேயும் பெரும்சோதியாய் பிரகாசிக்கிறதாயும் கை கால் முதலான மூர்த்திஸ்வரூபமில்லாததாயும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அவரவர்களிடங்களில் எப்பொழுதும் நன்ருக பிரகாசித்துக்கொண்டிருக்கிற பிரும்மமென்ற ஆத்ம வஸ்துவானது தங்கள் தங்களிடத்திலேயே இருந்தும்கூட அந்தகன் போல் அந்த ஆத்ம வஸ்துவைக் கொஞ்சமேனும் அறியமுடியாமல் செய்கிற மையைப்போன்ற பெரிய அந்தகாரமான மாயையினுடைய சம்மந்தமில்லாமலிருப்பதாயும், பூ:, புவ:, சுவ: என்றும் பிருதிவி அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்றும், பேருடைய மூன்றுலோகங்களிலேயும், நடந்தது, நடக்கிறது, நடக்கப்போகிறது என்ற மூன்று காலங்களிலேயும், சரீரத்தின் பால்ய யௌவன விருத்தாப்பிய மென்ற மூன்று தெசைகளிலேயும், ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களிலேயும் விழிப்பு ஸ்வப்பனம், தூக்கம் என்ற மூன்று அவஸ்தைகளிலேயும், எப்பொழுதும் கண்ணுக்குத் தோன்றுகிற ஸ்தூலம், கண்களுக்குத்தோன்ருத சூக்ஷ்மம், காரணம் என்ற மூன்று சரீரங்களிலேயும் செய்கை முதலான எல்லாவற்றிற்கும் சாக்ஷியாய் நன்ருக விளங்கும் அறிவென்ற ஞான சொரூபமாயும், பரஞ்சோதியாயும், பிரகாசிக்கிறதாயும், கை கால், நேத்திரம் முதலான சகல இந்திரியங்களில் ஸ்திரீ, சந்தனம், புஷ்பம், பழங்கள் முதலான விஷயங்களான பதார்த்தங்களைப்பார்த்தும்

ஸ்பரிசித்தும், அனுபவித்தும் சுகமென்றும், ஆனந்த மென்றும் தோன்றும் சமயத்தில் மனம் புத்தி முதலான சகல இந்திரியங்களோடு தன் சரீரம் உண்டென்றும் இல்லையென்றும் ஸுஷுப்தியென்றதூங்கும் காலத்தில் அறியாததுபோல் ஜாக்கிரதை என்ற விழித்திருக்கும் காலத்தில் எந்த மோக்ஷமென்ற ஆத்ம ஸ்வரூபமான பிரும்மத்தை அகண்ட சச்சிதானந்தம் என்று சொல்லப்படுகிறதோ அந்த பிரும்மானந்தத்தின் அணுவுக்கும் அணுவான திவலையின் லேசான இந்த விஷயானந்தத்தை அரை நிமிஷமோ அல்லது ஒரு நிமிஷமோ சரீரத்தை மறந்து எப்படி அனுபவிக்கிறோமோ அந்த விஷயானந்தத்தைப்போல் எத்தனையோ கோடி கோடியாக அநேகம் சேர்ந்ததாயும் யாவர்களாலும் அளவிடக் கூடாததான எல்லை கடந்த ஆனந்த ஸ்வரூபமாயும் எங்கும் பிரகாசிக்கும் ஆத்மபதார்த்தமான பரபிரும்மமாய் விளங்கும் சத்குருவை சாஷ்டாங்கமாய்நமஸ்கரிக்கிறேன்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 3

குரு கதையை கேட்பது, குரு குணங்களைப்பேசுவது, குருவை நினைப்பது, குருபாதங்களை சேவிப்பது, குருவை அர்ச்சிப்பது, குருவை நமஸ்கரிப்பது, குருவுக்கு தொண்டு செய்வது குருவுக்கு சிநேகமாக இருப்பது, குருவுக்குத்தன்னாத்மாவை அர்ப்பணம் செய்வது, ஆகிய ஒன்பதுவித பரம பக்தியோடு மனோவாக்குக்காயம் என்ற மூன்று காரணங்களால் அந்த ஸ்ரீ பரபிரும்ம குருவை எப்பொழுதும் தியானம்செய்கிறேன், குருஸ்வரூபமே பரப்பிரும்மத்தை எப்பொழுதும் சாஷ்டாங்கமாய் நமஸ்க்கரிக்கின்றேன்-

அந்த குருவின் குணங்களை எப்பொழுதும் பஜனம் செய்கிறேன். விசித்திரமான பிரபஞ்சத்தை உண்டு செய்தல் காப்பாற்றுதல், நாசஞ்செய்தல், சமித்தல் அனுக்கிரகித்தல,கிய ஐந்தவித செய்கையானது எவரிடத்தில் விளங்குகிறதோ அந்த குருவை அடிக்கடி பஜிக்கிறேன்.

மந்திரங்களுக்குள் குருவென்ற இரண்டு அக்ஷரமுள்ள மந்திரந்தான் மகா உத்தமம். மந்திர ராஜமென்பது குருராஜ மந்திரந்தான். உலகில் ஏழுகோடி மகாமந்திரங்களென்று மகான்களான பெரியோர்களாலும், வேத சாஸ்திரங்களாலும் சொல்லப்படுகிறது. அந்த ஏழுகோடி மகாமந்திரங்களும் சர்வ ஜனங்களுக்கும் புத்தியின்பிரமை உண்டாக்குவதாக இருக்கின்றன. அம்மந்திரங்களுக்குள் இரண்டு அக்ஷரங்களுள்ள "குரு" வென்ற மந்திரம தான் எல்லா ஜனங்களுக்கும் முன்னமே ஏதாவது கொஞ்சம் புத்திப் பிரமை முதலான துரிதங்களிருந்தாலும் அவைகளைப்போக்கடித்து சர்வ சௌக்கியத்தையும் உண்டு பண்ணுவதால் நிரம்பவும் சிலாக்கியம்.

ஏழுகோடி மகாமந்திரங்களில் குருமந்திரத்தைத் தவிர வேறு எந்த மந்திரங்களையும் கிரகித்து சித்திபெற வேண்டுமானால் உபதேசம் பெற்ற அந்த மந்திரத்தின் மகிமையைச் சொல்லுகிற கல்பமென்ற புஸ்தகத்தில் சொல்லியபடி நியமத்தோடு லக்ஷம் முதலான எண்ணிக்கையால் ஜெபித்து ஸித்தி செய்து பலத்தை அடையவேண்டுமானால், அந்த மந்திரத்திற்கும், தனது நாம நக்ஷத்திரம், ராசி பூதம் ஸித்தாரி ...ரண ரெணி யென்ற இவைகளுக்கும் பொருத்த மிருந்தால் குருவின் உபதேசத்தின்பேரில் உறுதியான பக்தியோடு ஜபித்தால் அம் மந்திரமானது ஸித்தியாய் இவனிஷ்டங்களைப் பூர்த்திசெய்து நன்மையைக் கொடுத்துவிடுகிறது. இப்படிப் பொருத்தம் பாராமலும், புஸ்தகத்தின் விஷயத்தை அறியாமலும் ஜபித்தால் அம்மந்திரமானது புத்திப்பிரமை முதலானவைகளைச் செய்து விடும். குருமந்திரம் அப்படியில்லை. குரு மந்திரத்திற்குப் பொருத்தம ஒன்றும் பார்க்க வேண்டாம். பார்த்தும பாராமலும் எப்படிச் செய்தாலும் குரு மந்திரமானது சகல துரிதஙகளையும் நிவர்த்தித்து சகல சௌக்கியத்தையும கொடுக்கும். அதனால்தான் குருராஜ யந்திரம் வெகுசிலாக்கியமென்று சொலலபபடுகிறது. ஜனனமரணம் முதலான பெரிய சம்சாரமாகிற சமுத்திரத்தின் சுழலில் அகப்பட்டு கரை ஏறுவதற்கு வழியில்லாமல் முழுகிமுழுகிக் கிளம்பி திணறிக்கொண்டிருக்கிறவாகளை அதிலிருந்து கொஞ்சமும் சிரமமன்னியில் வெகு சுலபமாய் உத்தாரணம் செய்வித்து மங்களத்தைக் கொடுக்கும் விஷயத்தில் ஒரேமந்திரமாயும் பிரும்மா முதலானவர்களாலும் முனிவர்கள் முதலான மற்றவர்

களாலும் பூஜிக்கப்பட்டு அதனால் ஸித்திபெற்ற மந்திரமாயும், தரித்திரமென்ன, வெகு வித துக்கங்களென்ன, பாவமென்ற சம்சாரமாகிய ஒரு பெரிய சக்கரத்தில் அகப்பட்டு கடைத்தேறுவதற்கு முடியாமல் இருகிறு வென்று வேகமாகச் சுழலுகிற மகாரோகமென்ன இவைகளை அடியோடு நாசம்செய்து மோக்ஷ பரியந்தம் சகல சம்பத்துகளையும் கொடுக்கின்ற மந்திரமாயும், பிறப்பு, இறப்பு, மிருத்யு, கிழத்தனம், வியாதி இவைபோன்ற மகா பயத்தைப் போக்கடித்து சுகஸ்வரூபமான பிரும்மானந்தைக் கொடுப்பதுமான குருராஜ மந்திரத்தை நமஸ்காரம் செய்கிறேன்-

உலகில் குரு கடாக்ஷமிருந்தால் சகல வித பாக்கியங்களையும் அடையலாம். பதினன்குலோகங்களின் நாசத்திலிருந்து நிலைநிறுத்துவதற்கு நாட்டுகிற மரம்போன்ற கம்பமாயும், கருணையோடு கூடின ரஸமாகிறமழையைப்பொழிவதாயும், ஐந்து தத்துவம், முப்பத்தாறு தத்துவம், தொண்ணூற்று ஆறு தத்துவம் முதலான சகல தத்துவங்களின் வரிசையினுடைய கூட்டமாயும் சமயங்கள் முதலான எல்லாவற்றையும் உற்பத்தி செய்வதாயும், ஸத்தாய் எல்லாவிடங்களிலும் எப்பொழுதும இருப்பதென்ன சித்தாய் எக்காலத்திலும் எச்சமயத்திலும அறிவான ஞானஸ்வரூபமாய்ப் பிரகாசிப்பதென்ன இவைகளான ஸச்சிதாநந்த ஸ்வரூபமாய் விளங்கும் மோக்ஷமென்ற ஆத்ம சாக்ஷாத்காரமான பிரும்மாநந்தத்திலேயே கண்பார்வை வைத்திருப்பதாயும், இகத்தில் புத்திர மித்திர தன தான்ய சகல வித சம்பத்துக்களையும், பரத்தில் மோக்ஷத்தையும் கொடுக்கின்றதான ஸ்ரீ சத்குருவினுடைய அழகுக்கெல்லாம் அழகைக் கொடுக்ககூடிய கடைக்கண்பார்வையான கடாக்ஷமானது என்னிடத்தில் நித்திய மாய் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கட்டும்.

குருவின் பாதமதான் மோக்ஷம் முதலான சர்வ மங்களத்துக்கும காரணம. மனம், வாக்கு இவைகளுக்கு எட்டாததாயும் சிவப்பு வெளுப்பு இவைகள் கலந்ததான பிரகாசமாயும, இது இந்த விதம்தான் அல்லது அந்தவிதந்தான் என்று ஒருவிதத்திலும் ஊகிக்க முடியாததாயும, ஸ்தூல சூக்ஷ்ம காரணமென்ற மூன்று சரீரங்களிலேயும ஜாக்ர ஸ்வப்ன, ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளிலேயும ஒரே ஜோதியாய் எப்பொழுதும் விளங்குகின்றதுமான சர்வ க்ஷேமத்தையும கொடுக்கக்கூடிய ஸ்ரீ சத குருவின் கமலம்போன்ற இரண்டு திருவடிகளை நமஸ்கரிக்கின்றேனென்று சொன்னார்.

பிறகு "ஹே! அனந்த வைத்திய நாதா, நீ கேட்டபிரகாரம் சகல சௌக்கியத்தையும் அடையவேண்டுமானால், இப்பொழுது சொல்லிவந்த பிரகாரம் குருபக்தி செய்துவந்தால் வெகு சுலபமாய் சகல சௌக்கியத்தையும் அடைந்து தானும் குருஸ்ரூபமான பிரும்ம சாக்ஷாத்காரத்தை அடைந்துவிடலாம். எனது குருவின குருவினுடைய குருவான ஸ்ரீ அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமிகள் இம்மாதிரி குருபக்தி செய்து குருவின் அனுக்கிரகத்தினால் சர்வசித்தியும் பெற்று தானும் நிக்கிரகஹானுகாஹ ரூபமான அற்புத சக்திகளை வெளிக்காட்டி உலகம் புகழும்படியாக வெகு அமானுஷமான ஒருவராலும் செய்யமுடியாததான வெகு சரித்திரங்களை லீலையாகச் செய்துகொண்டு திருப்பூந்துருத்தி யென்ற திவ்விய க்ஷேத்திரத்தில் தன்னை ஆசிரித்த ஜனங்களுக்கு இஷ்ட சித்திகளைக் கொடுக்கிறதற்காகவே இப்பொழுதும் சமாதியில் ஜீவனோடு சிவமாய் மங்கள ரூபியாய் விளங்கிவருகிறார்.

ஆகையால் குருபக்திசெய்துவந்தால் தர்மம், அர்த்தம் காமம், முதலான மோக்ஷபரியந்தம் சகல சௌக்கியங்களையும் அடையலாம்" என்று சொன்னார்.

இந்த அற்புதமான கதையைக் கேட்ட அனந்த வைத்யநாத சிவன் ஆனந்த சாகரத்தில் மூழ்கி, ஆச்சர்ய மடைந்து நாம் கிருதார்த்தன் தான் என்று நினைத்து மகா சந்தோஷத்தோடு தனது குருவான அனந்த நாராயணரென்ற ஸ்தாணுசிவனைப் பார்த்து அந்த விசித்திரமான குருஸ்வாமிகளின் திவ்விய சரித்திரத்தை விஸ்தாரமாகக் கேட்கவேண்டுமென்ற ஆசை அதிகமாக யிருப்பதால் அதை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமென்று பலவாறாகப் பிரார்த்தித்தார்.

பிறகு ஸ்தாணுசிவன் புன்சிரிப்புடன் உத்ஸாகத்தோடு கண்களை மூடி ஒரு முகூர்த்தம குருபாம்பரையை செம்மையாய் தியானம் செய்துகொண்டு "கிருஷ்ண சிவனுக்கு சங்கர சிவன் சொன்ன பிரகாரம் உனக்கு குருஸ்வாமி சரித்திரத்தை விஸ்தாரமாகச் சொல்லுகிறேன். நீ மனதை வேறு இடத்தில் விடாமல் ஏகாக்ர சித்தத்தோடு சாவதானமாயக் கேள்" என்று தனது சிஷ்யனான அனந்த வைததிநாதனைப் பார்த்து அனந்த நாராயணர் என்ற ஸ்தாணுசிவன் சொல்லுகின்றார்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 4

3931.

ஸ்ரீ சிவாய குரவே நம:

# ஸ்ரீமத் அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமிகள் சரித்திரம்.

ஸ்ரீமத் அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமினே நம:

அனந்த வைத்தியநாதனுக்கு அனந்த நாராயணர் என்ற ஸ்தாணுசிவன் சத்குருவின் சரித்திரத்தைச் சொல்லுகின்றார்.

இப்பூமண்டலத்தில் சிறப்புற்றோங்கும் ஆரிவர்த்தமென்னும் புண்ணிய பூமியில் மகரிஷி முதலானோர்களால் சூழப்பட்டிருக்கும் கங்காநதி தீரத்தில 'கிரிதுர்க்கம்' என்னும் கிராமத்தில் காச்யப கோத்திரத்தில் உதித்த கங்காதர சாஸ்திரிகள் என்னும் ஆரிய சிரேஷ்டர் பதிவிரதா சிரோண்மணியான மங்களாம்பிகா என்னும் பத்தினியுடன் ஸ்த்கர்மானுஷ்டானபரராயும் வித்வத்சிகாமணியாயும், சத்வகுணப் பிரதானராயும் மகாபக்திமானாகவும் இருந்தார்.

அவருக்கு வெகுநாள்வரையில் புத்திரனில்லாமையால் பத்தினிசமேதராய் கங்காநதிக்கரையில் ஓர் சிவாலயத்தின் மகாலிங்க சன்னதியில் சிவபிரானை உத்தேசித்து அருந்தவம் புரிந்தனர். அத்தவத்திற்கு கடவுள் கருணை புரிந்து ஒரு சிரேஷ்டமான புத்திரனை அளித்து, "சிலகாலம் இப்பூவுலகில் சுகித்து வாழ்ந்திருந்து பிறகு என்சரணாரவிந்தத்தை அடைவாய்", என்று அசரீரி வாக்கினால் அனுக்கிரகித்தார்.

அவ்வனுக்கிரகத்தைப் பெற்றுத் தன் மனைவியுடன்கூட இல்லம் சென்று சந்தோஷமாக ஈஸ்வர ஆராதனம் முதலிய சத்கர்மாக்களைச் செய்துகொண்டிருக்குமளவில், மங்களாம்பிகா என்னும் பதிவிரதாசிரோமணி ஈஸ்வர அனுக்கிரகத்தால் கர்ப்பவதியானாள். அக்கர்ப்பம் நாள்தோறும் வளர்ந்து வந்து சூத்ரோக்தமாக நாலாவது மாதத்தில் கர்ப்ப ஸம்ஸ்காரமாகிய பும்ஸவனமும் கிரமேண சீமந்தமும் நடந்தது. மாதம் பூர்த்தியானவுடன் உற்ற காலத்தில் சுபலக்கினத்தில் சிலாக்கிய மான புத்திரனைப்பெற்றாள். அக்குழந்தை உலகத்தின் க்ஷேமத்தின்

பொருட்டு அக்ஞானமான இருளைப் போக்கடிப்பதற்கு பூர்வதிக்கில் உதயமான ஞான சூரியனைப்போல் விளங்கிற்று.

பிறகு மாதாபிதாக்கள் மனமகிழ்ச்சியுடன் ஸ்நானம் செய்து விதிப்படி ஜாதகர்மாவைச்செய்து, அனந்த பத்மநாபரென்ற நாமகரணத்தையும் செய்து, ஆறாவதுமாதத்தில் அன்னப்பிராசனமும் நடத்தி தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்து வந்த அக்குழந்தை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்பிறைச் சந்திரனைப்போல் நாளுக்கு நாள் மனோக்யமாக வளர்ந்து வந்தது. அப்பாலகனுக்கு ஸம்வத்ஸரபூர்த்தியில் ஆயுஷ்ய ஹோமகர்மாவையும் மூன்றாவது வயதில் சௌளமென்கிற கர்மாவையும் நடத்தினார்கள். குழந்தை செய்யும் லீலைகளைக்கண்டு கிராமவாசிகளும் மாதா பிதாக்களும் மிகவும் மனமகிழ்ந்து பரவசமடைந்து பிரும்மானந்த சந்தோஷத்தை அடைந்தார்கள்.

குழந்தையினுடைய புத்தியின் திறமையைக்கண்ட காச்யப கோத்திரியான பிதா உபநயனத்திற்குக்குழந்தை யோக்கியம்தான் என்று தீர்மானித்து ஐந்தாவது வயதிலேயே குழந்தைக்கு உபநயனம் என்னும் பிரும்மோபதேச கர்மாவை விதிவத்தாக செய்து வைத்து, குமாரனை குருகுல வாசம் செய்யும்படியாகச் செய்து, வேதசாஸ்திரங்களான சகல வித்தைகளையும் அப்பியாசம் செய்யும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாக்ஞையைச்சிரசால் வகித்து, குமாரனும் தந்தை தாய்களை நமஸ்கரித்து உபசரித்து அவ்வாறே குருவினருகில் சென்று குரு சொல்லுக்குச் சற்றேனும் மாறாமல் வேதவிதிப்படி வித்யாப்யாசங்களை இடைவிடாமல் செய்து வந்தார். அங்கங்களாகிற சாஸ்திரங்களோடும் பிரஜாபாத்யாதிகாண்ட விரதோபக்கிரம உத்ஸர்ஜனத்தோடும் விதிப்படி வேதங்களை நன்றாக அப்பியசித்துவிட்டு பிரும்மசரியாச்ரமத்திலிருந்து ரிஷிகளுடைய கடனைத்தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஸ்நான, சந்தியாவந்தன, ஸமிதாதான, பிரும்மயக்ஞாதி நித்தியகர்மானுஷ்டானங்களைச்செய்துகொண்டு பிக்ஷை வாங்கி குரு சமீபத்தில் வைத்து, தெரியப்படுத்தி, உண்பதற்கு குரு ஆக்ஞை எவ்வளவு ஏற்படுகிறதோ அவ்வளவு பிக்ஷா அன்னத்தைத்தான் புசித்துக்கொண்டு, குருவக்த மகா பிரீதிமானாக இருந்து தனக்கு வித்தியாப்யாசங்களெல்லாம் பரிபூர்ணமானவுடன் ஆசார்யானுக்குப் பிரியமான தனங்களைத்தன் சக்தியை அனுசரித்து குருதக்ஷிணையாகக் கொடுக்கும்போது,

"எனக்கு உன் பக்தியே போதும். ஒன்றும் வேண்டாம்" என்று பலதடவை சொல்லி சிஷ்யனேயும் தடவிக்கொடுத்து ஆசிர்வதிக்கும்போது, அடிக்கடி நமஸ்காரம் செய்து, ஸ்தோத்தரித்து, உபசரித்து, குருகுலவாசம் செய்துவிட்டு, குரு அனுக்ரகம் பெற்று குருஆக்ஞையின் பேரில் தனது கிரஹம் வந்து மாதிரு, பிதிரு, சிஷ்ருஷையை இடைவிடாமல் செய்து, மாதா பிதாக்களுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணிக்கொண்டு, பிரும்மசாரியாகவே அனந்த பத்மநாபரிருந்து வந்தார்.

நாலாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## அத்தியாயம் ரு.

பிதா புத்திரனுடைய பிரும்மசர்யாச்ரமத்தைப் பார்த்து மனங்களித்து, அவனே உற்ற பருவத்தில் கிரகஸ்தாசிரமத்தில் புகுத்த வேண்டுமென்று நினைத்தார். தன் கிராமத்திற்கருகாமையிலுள்ள சுவர்ணபுரி என்னும் கிராமத்தில் வசிக்கும் ச்ரோத்திரியராயும் சாதுவராயுமிருக்கிற சங்கர சாஸ்த்திரிகள் என்பவரின் அருந்தவப் புதல்வியாகிய சுசீலை தான் சௌந்தரியத்திலேயும், குணத்திலேயும் சரிதையிலேயும் தன் புதல்வனுக்குற்ற வாழ்க்கைத்துணைவி எனக் கருதி, பெரியோர்களைக்கொண்டு விவாகமுகூர்த்தத்தை நிச்சயித்து புத்திரனுக்கு ஸமாவர்த்தனம் என்ற கர்மாவைச் செய்வித்துமகரிஷி துல்யரான பிராமணோத்தமர்களின் அனுக்ஞா பூர்வமாகவும், அக்னி சாக்ஷியாகவும் கன்னிகாதானம், பாணிக்கிரஹணம்,ஸப்தபதி, லாஜஹோமம்முதலான கர்மாக்களை க்ரமப்படி பிராம்மயம் என்ற விவாஹத்தை விதிப்படி நடத்தி சம்பந்திகளுடனும் பந்துவர்க்கங்களுடனும் தம்பதிகளை அழைத்துக்கொண்டு ஸமக்கிரோத்தமான மார்க்கத்துடன் தன்கிரகத்தை அடைந்து, பிரவேச ஹோமம், ஆக்னேயஸ்தாலிபாகம்,ஔபாஸனாரம்பம் சேஷஹோமம், அப்யுதயம் ஸமாவேசனம் முதலானவைகளையும் மஹோத்ஸவமாகநடத்தி பிராம்மணர்களை பூஜித்து உபசரித்து ஆசீர்வாதம்பெற்று சன்மானத்துடன் விடைகொடுத்தனுப்பி சுகமாக அமர்ந்தார்.

பிறகுதன் செய்கையால் மகரிஷிபோல் இருக்கிற அனந்த பத்ம நாபனென்ற பிராமண சிரேஷ்டர் தேவர்கடன்களைத் தீர்ப்பதன்பொருட்டு யாகாதிகர்மாக்களையும், ஔபாஸன சிவபூஜா வைச்வதேவ பஞ்சமகாயக்ஞ அதிதி போஜனாதிகளான நித்யகர்மாக்களையும் அனுஷ்டித்தும், பிதிருகடன்களைத் தீர்ப்பதன் பொருட்டு பதிவிருதா சிரோமணியான சுசீலைஎன்னும் தன்மனைவியிடத்தில்கர்ப்பா தானாதி சாஸ்திர கர்மாக்களை யதாவிதியாகச் செய்து சுப்பிரமணியருக்கொப்பான ஸுசரித்திரன் என்ற குமாரனையும், காந்தி என்னும் புத்திரியையும் உத்பாதனம் செய்து உசித காலத்தில் குழந்தைகளுக்கு உபநயன விவாஹாதிகளை யோக்கியமான இடத்தில் நடத்தி வைத்து குடும்பத்தில் ஆசார சீலராக சுகமாக இருந்து வந்தார்.

அப்படி சிலகாலம் நடந்தபின் புத்திரனும் குடும்பத்தை வகிக்கக்கூடிய வயதை அடைந்தான். ஆகவே தான் தன்னிஷ்டம்போல் மோக்ஷமார்க்கத்துக்கு ஹேதுவான விஷயங்களைக் கவனிக்கவேண்டுமென்று எண்ணிபுத்திரனையும் மனைவியையுங் கூப்பிட்டுப் பின்வருமாறுஉரைத்தார். "நீ உன் தாயாரையும் குடும்பயோகக்ஷேமங்களையும்ஒப்புக்கொள்ளவேண்டியது.நான் மோக்ஷமார்க்கத்துக் குறிய ஞான தபஸ் முதலானவைகளைச் செய்து ஞானியாகி. குடும்பத்தின் பற்றுதலாகிய புத்திரேஷணை, தாரேஷணை, வித்தேஷணை, என்கிற இம்மூன்றையும் முறையே நிவர்த்தி செய்து அஷ்டாங்க சமாதியிலிருந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்திய பாராயணராகிய சர்வேஸ்வரனை, கிரமேண மூலாதார, ஸ்வாதிஷ்டான, மணிபூரக, அனாகதவிசுத்தி, ஆக்ஞை என்னும் நிலைக்கடந்து, பிரும்மரந்திரத்தில் நின்று நித்தியமாயும், நிரதிசயமாயும், நிரஞ்சனமாயும், நிர்மலமாயும், நிர்குணமாயும், நிரவதியாயும், அகண்டமாயும், சச்சிதானந்த ஸ்வரூபமாயும், இருக்கும் பரஞ்ஜோதியைக் கண்டு தன்மயமாகி லயமடைய உத்தேசித்திருக்கிறேன்

உத்தம குணசீலனாகிய நீயும், பதிவிருதா சிரோன்மணியாகிய உன்தாயாரும் ஒருவிதத்தடையும் சொல்லாமல் என்உத்திரவுப்படி நடக்கக்கடவீர்கள், உங்களுக்கு சிலகாலத்திற்குப்பிறகுநானே தரிசனம் கொடுத்து உங்கள் அபீஷ்டங்களைநிறைவேறும்படி அனுக்கிரகம் செய்கிறேன்

" இவ்வரிய வசனத்தைக்கேட்டு தாயும், தனயனும் "அப்படியே செய்கிறோம்" என்றுசொல்லி பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து அஞ்சலிபந்தம் செய்துகொண்டு, "நாங்கள் நினைக்கும்போது எங்கள் எதிரில்வந்து தரிசனம் கொடுத்து எங்களுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்த தன் பேரில் அனந்த பத்மநாபர் "அப்படியே செய்கிறேன்" என்று அனுக்கிரகித்து கங்கா தீரத்தை நோக்கிச் சென்றார்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## அத்தியாயம் ௬.

அனந்த வைத்தினாதா ஜாக்கிரதையாய்க்கேள்:— அனந்த பத்ம நாபர் மணிகர்ணிகா கட்டத்தையடைந்து ஏகாந்தமாயிருந்து கடைத்தேறுவதற்கு என்னசெய்யலாமென்றுயோஜித்து, தீர்த்தாடனம் க்ஷேத்ராடனம் செய்வதால் பாபபரிகாரமும்சித்தசுத்தியும் உண்டாகுமென்றும், அதனால் சத்குரு தரிசனம் கிடைத்து கிருதார்த்தனாகலாம் என்று பெரியோர்கள் மூலமாயும்சுருதி ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களாலும் சொல்லியிருப்பதை அறிந்தவராகையால் க்ஷேத்ராடனம் செய்வதுதான் உத்தமம் என்றுநிச்சயம் செய்து கொண்டார்.

பிறகு நாம் உத்தேசித்தபடி நமக்கு சித்த சுத்தி உண்டாய் சத்குரு கிடைத்து அவர் உபதேசத்தை யடைந்து குருபிரசாதத்தால் சிரவணம் மனனம் நித்தியாசனம்முதலானவைகளைச்செய்து அக்ஞானத்தைத்தொலைத்து நித்ய சுத்த புத்த முக்த ஸ்வரூபமான சிவக்ஞானபிரசாதத்தை அடைந்து ஈஸ்வரஸ்வரூபமான ஜீவன்முக்ததெசையையடைவதற்கு ஆதியில் எந்த தேவதையை உபாஸித்து பூஜை செய்து தியானித்தால்அவருடையபிரசாதத்தால்ஆரம்பித்தகாரியமானது விக்னமன்னியில் முடியுமோ அத்தேவதையை உபாஸிக்க வேண்டுமென்று ஆலோசித்து விநாயகக்கடவுளைத் தவிற வேறொரு தெய்வமுமில்லை என்றுநினைத்து அந்தக்காசி க்ஷேத்திரத்தில் பக்தியுடன் தன்னை ஸ்மரிக்கின்றவர்களுக்குயாதொருவிதமான விக்னமன்னியிலும் இஷ்டங்களையும் மோக்ஷலக்ஷ்மியை அடையும்படியும் அனுக்கிரகம்செய்துகொண்டு நாளைக்கும் இருந்துவருகி

ளுரோ அப்படிப்பட்ட டொண்டி விநாயக மூர்த்தியை' கங்கையில்ஸ்நானஞ்செய்துபரிசுத்தனாகி யிருந்துமனாபக்தியோடுஞான சித்தியின்பொருட்டு பூஜைசெய்துபிரதக்ஷிணநமஸ்காராதிகளை யதாவத்தாகச்செய்து அவர் சன்னிதானத்தில் ஸ்தோத்திரங்களைப் பலவாறாகச் செய்து விநாயகக்கடவுளை ஹிருதயகமலத்தில் வெகுகாலம் தி யா ன ம் செய்து அடிக்கடி அனுக்கிரகம் செய்யவேணுமென்று பிரார்த்திக்கும் போது டொண்டி விநாயகருடையகிருபையால்ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதாவது உன்பூஜை ஸ்தோத்திரத்தினால் திருப்தியடைந்தேன்உனக்கு அநேக தேவர்களுடைய அனுக்கிரகமும் சத்குருவின் தர்சனமும் உன் மனோரத பூர்த்தியும் சீக்கிரத்திலடைந்து உன்னால் உலகத்திற்கு க்ஷேமமுமுண்டாகுமென்று அசரீரி மூலமாய் அனுத்கிரகம் செய்தார்.

உடனே அனந்த பத்மநாபர் அதிக சந்தோஷமடைந்து விநாயகருடைய கிருபையால் தம்முடைய காரியம் நிறைவேறி கிருதார்த்தனாகி விட்டதாக நினைத்து டொண்டி விநாயகரை பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து ஸ்தோத்திரம் செய்து பிரார்த்தித்துக்கொண்டு டொ ண் டி விநாயகருடைய கிருபையால் ஜகன்னாதம் என் னு ம் க்ஷேத்திரம் வந்துசேர்ந்து அந்த க்ஷேத்திரத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம்செய்து நித்திய கர்மாக்களை விதிப்படி முடித்துக்கொண்டு ஆலயம் சென்று துஷ்டர்களை சிக்ஷித்து சிஷ்டர்களை பரிபாலிக்க அவதரித்தவரும் பாண்டவருக்கு ஸகாவாகவும் பக்த ஜனங்களிஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறவராயும் கருணைக்கடலாயிருந்து உலகத்தில் சகல ஜனங்களும் ஆத்ம விசாரம் செய்து கிருதார்த்தராக வேண்டுமென்றும், அர்ஜுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு பகவத்கீதை என்கிற புண்ணிய கிரந்தத்தை உபதேசித்தவராயுமிருக்கிற ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தரிசித்து பலவிதமான ஸ்தோத்திரங்களைச்செய்துகொண்டிருந்தார்.

அப்படியிருந்து வரும் காலத்தில் ஒரு நாள் ப க வ த் ஸன்னிதியில் ஓர் அசரீரிவாக்குண்டாயிற்று. அஃதென்னவென்றால்தீர்த்தப்பிரவாகம்போன்றவார்த்தைகளினால்ஸ்தோத்திரம் செய்ததினால் மிகவும்சந்தோஷித்து "ஹே அனந்தபத்ம நாபா உனக்கு உன் மனோரதம் போலவே ஸத்குரு தரிசனம் ஏற்பட்டு அவரால் உபதேசிக்கப்பெற்று என் பெயரான நாராயணன் என்கிற பெயரையும் அடைந்து சத்குரு அனுக்ரகத்தி

னால் சகல க்ஷேமங்களும் உண்டாகப்போகிறது" என்ற அசரீரி வாக்கைக்கேட்டு உள்ளங்களித்து அச்சன்னிதானத்திலேயே காலமிருந்து கிருஷ்ண லீலைகளை அநேக ஸ்தோத்திரங்களாகச் செய்து விட்டு கிருஷ்ணனுடைய அனுக்கிரகத்தினால் ஜனார்த்தனம் உடுப்பி முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு ஜனங்களால் நாராயணன் என்று கொண்டாடப்பட்டு வந்தார்.

அப்படி வருங் காலத்தில் ஸ்ரீ சுப்ரமண்யம் என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில் முருகக்கடவுளைப்பார்த்து ஆனந்தங்கொண்டு தமக்கு குருநாதன் கிடைத்தது போல் நினைத்து ஷண்முகரான சுப்பிரமணியத்தை பூஜைசெய்வதற்கு ஸ்நானத்தை விதிப்படிசெய்து ஸந்தியாவந்தனம்முதலிய கர்மாக்களை முடித்துக் கொண்டு அந்த சுப்பிரமணிய மூர்த்தியை மகாபக்தியோடு காயிக வாசிக மானஸிகமான திரிகரணத்தினாலேயும் பூஜை செய்து பிரதக்ஷிண நமஸ்காராதிகளை அடிக்கடிசெய்து தியான புரஸ்ஸரமாக ஸ்வாமி நாதனாயிருக்கிற ஸ்ரீ சுப்ரமண்ய குருவை தனக்கு அதிசீக்ரத்தில் சத்குரு தரிசனம் ஏற்பட வேணுமென்று பிரதி தினமும் அடிக்கடி பிரார்த்தித்துவருங்காலத்தில் ஷண்முகக்கடவுள் பூஜாஸ்தோத்திரம் முதலிய செய்கையாலும் இப்புவியில் குரு உபதேசத்தில் ஆவலுள்ளவனாக இவனைப்போல் யார் தானிருக்கிறார்கள் என்று சந்தோஷித்து இவனுக்கு அனுக்ரகம் செய்யவேண்டியது அவசியம் தான் என்றுநினைத்து அசரீரிவாக்கினால் "ஹே அனந்தபத்மநாபா! நீ கொஞ்சங்கூட பயப்படவேண்டாம் என் அனுக்ரகத்தினால் அதிசீக்ரத்தில்உனக்கு ஆனந்தவனமான வாராணஸிஎன்னும் திவ்யக்ஷேத்திரத்தில் விசுவநாதருடைய சமீபத்தில் வில்வவிருக்ஷத்தடியில்சிவசித் பரானந்தர் என்றபெயரோடு கூடிய தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமான ஓர்ஸத்குருவின் தரிசனமும் அவருடைய உபதேசமும் கிடைத்து அவர் அனுக்ரகத்தினால் சர்வசித்தியும் உண்டாய் ஈஸ்வரஸ்வரூபனாகவே விளங்குவாய் என்று அனுக்கிரகித்து என்னை உபாசித்ததினால் குருகுகன் என்ற பெயரும் விளங்கட்டும்,, என்று அனுக்கிரகித்தார்.

உடனே அனந்தபத்மநாபர் சுப்பிரமணியருடைய அசரீரி வாக்கைக்கேட்டு குருவை அடைந்து உபதேசம் பெற்று கிருதார்த்தனாக ஆய்விட்டதாய் எண்ணி மகாசந்தோஷ சாகரத்தில் மூழ்கி ஆனந்தமடைந்து வெகுகாலம் அச்சன்னதியிலேயே

இருந்து சுப்பிரமணிய மூர்த்தியை அநேகவிதங்களாக ஸ்தோத்ரங்கள் செய்து முருகக் கடவுள் அனுக்கிரகத்தினால் இருந்து வருங்காலத்தில் அந்த ஊரிலிருக்கும் ஜனங்களால் குருகுகன் என்றபெயருடன் வழங்கிவந்த அனந்த பத்மநாபர் சுப்பிரமணிய க்ஷேத்திரத்திலிருந்து கோகர்ணம் முதலான க்ஷேத்திரங்களை தரிசித்துக்கொண்டு குரு தரிசனம் செய்ய வேண்டுமென்ற ஆவலுடன் கங்கா தீரமான வாராணஸீ என்கிற ஸ்ரீகாசி க்ஷேத்திரத்திற்கு வந்துசேர்ந்து ஸத்குருவின் தரிசனம் எந்த இடத்தில் கிடைக்குமென்று அங்குமிங்கும் சுற்றிக்கொண்டு ஸ்ரீ சத்குருவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 7.

ஹே குரோ! எந்த குரு பரம்பரையிலிருந்து சிஷ்யராகவந்த ஓர்மகான் நமது அனந்த பத்மநாப ஸத்குருவுக்கு உபதேசகுருவானார் அதைக்கேட்க விரும்புகிறேன் விரிவாகச் சொல்லவேண்டுமென்று அனந்த வைத்தினாதன் கேட்க அனந்த நாராயணன் என்ற ஸ்தாணு சிவன் சாவதானமாய்க்கேள் என்று சொல்லுகிறார்.

பிறகு பூமண்டலத்தில் சிறப்புற்றோங்கும் சோழமண்டலத்தில் தஞ்சைமாநகரத்தின் கிழ்திசையில் கம்ஸ்புரம்என்னும் திவ்விய க்ஷேத்திரமான கஞ்சனூரில் வைஷ்ணவ சிரேஷ்டராயும் விஷ்ணு பக்தியில் மிக்கசிறந்தவராயுமுள்ள வாசுதேவாச்சாரியாருக்கு ஜகத்ரக்ஷண மூர்த்தியாயும் ஸ்மரித்த மாத்திரத்தால் சர்வ மங்களத்தையும் உண்டுபண்ணுகிறவராயும் எங்கும் விளங்குபவராயும் லக்ஷ்மீசமேதராயும் உபநிஷத்துக்களாகிற வைகுண்டத்தில் வசிப்பவராயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணரான சாக்ஷாத் மகாவிஷ்ணுவானவர், உலகத்தில் வர்ணாச்ரமத்தை நிலைநாட்டுவதன் பொருட்டு புத்திரனாக ஆவிர்ப்பவித்து பிதாவினால் ஸுதர்சனாசாரியார் என்னும்பெயர்பெற்று ஐந்தாவது வயதில் அந்த க்ஷேத்திரத்தின் கல்பகேஸ்வரி அம்பாள் சமேதரான அக்னீஸ்வர மகாலிங்க மூர்த்தியை உபாசித்து பிரமத கணங்களோடு பார்வதி சமேதராய் விருஷபா

ரூடராய் பரமசிவனைத் தரிசித்து அவரால் சர்வக்ஞத்துவத்தையும் மகா மந்திரஜபாதி பூஜாவிதானங்களையும் உபதேசம் பெற்று ஹரதத்த சிவாசாரியாள் என்ற பெயரையும் பெற்று ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சன்னிதியில் மழுவின் மேரிலிருந்து சிவோத்கருஷத்தைச் செய்து சிவலிங்கபூபதியால் பூஜிக்கப்பெற்று உலகமெங்கும் கீர்த்தியோங்கி அத்திவ்ய க்ஷேத்திரத்தில் உத்திரவாகினியான காவிரியில் ஸ்நான சந்தியானுஷ்டானங்களைச் செய்து லோகானுக்கிரமான அநேகஸ்மிருதிகளைசெய்து அமானுஷமான வெகுலீலைகளையும் நடத்திய ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியாள் தனது தங்கைபுத்திரனை பிராம்மணோத்தமரை அழைத்து உலகநன்மையின் பொருட்டு அக்னிதீர்த்தத்தில் அவரை ஸ்நானம் செய்வித்து வீக்ஷா தீக்ஷையும் செய்வித்து தனக்கு பரமேச்வரனால் உபதேசிக்கப்பெற்று தான் அனுஷ்டித்து வந்த சந்தியாவந்தன கல்பம் என்ற சப்தகோடி மகாமந்திரங்களடங்கிய பூஜாவிதானம், அஜபா கல்பம், வாஞ்சா கல்பம், மகாவித்யா கல்பம் இவைகளை லோகானுக்கிரகத்தின் பொருட்டு அன்னவருக்கு உபதேசித்து, ஸ்படிகலிங்கமும் கொடுத்து சிவஞானபோதர் உன்ற தீக்ஷா நாமமும் அளித்து இவ்வுலகினிலிருந்து "நீயும் என்போல் விளங்குவாய்" என ஆசி அளித்து, புத்திரி புத்திர மித்திர களத்திர சிஷ்யர்களுடனும் ஸ்வசரீரத்துடனும் கைலாய கிரிக்குச் சென்றார்.

அவ்வாறு கைலாய கிரிக்குச் சென்றபின் சிவஞான போதர் என்பவர் குருபக்தியுடன் அநேக க்ஷேத்திரங்களைத் தரிசித்து விட்டு, நாரதர் கிரிக்குச்சென்று, சிலவருஷங்கள் தபசுசெய்து சித்திபெற்று, பிறகு ஒரு சமயம் லிங்கிர ஹரூபியாக இருக்கிற ஸ்ரீஹரதத்த சிவாசாரியாளையும் கல்பகேஸ்வரி அம்பாள் சமேதரான அக்னீஸ்வர மகாலிங்கத்தையும் தரிசிக்கவேண்டி கம்ஸபுரம் வந்தபோது சாதுசிரேஷ்டராயும் அபிஞ்யராயும் உள்ள ஸ்ரீ சுப்பிரமண்ய சாஸ்திரிகள் என்பவர் வெகுகாலமாக ஸத்குருவை அடைய வேண்டுமென்று ஆஸ்திக புத்தியுடன் இருந்தமையால் தெய்வானுகூலத்தினால் சிவஞான போதரைக்கண்டு தரிசித்து மனமகிழ்ந்து அவர்பாதங்களில் வணங்கி எனக்கு உபதேசித்து அனுக்கிரகம் செய்து கிருதார்த்தனாகச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

பிறகுகிருபாளுவான சிவஞானபோதர், தன்னைப் பிரார்த்தித்தசிஷ்யனை உபதேசத்திற்குப் பாத்திரம்தானு என்று ஆலோசித்து, பக்விதானென்று நிச்சயித்து, அக்னியாதி தீர்த்தங்களில்ஸ்நானம்செய்வித்து ஆசாரியாள் சன்னதியில் விக்ஷாதீக்ஷை செய்துவைத்து தனக்கு ஆசாரியாளால் உபதேசிக்கப்பட்ட அஜபா கல்பாதிகளான ஹாதத்த சந்தியர்வர்தன கல்பங்களை க்ரமப்படி உபதேசித்து சிவசித்பரானந்தர் என்னும் பெயரையும் அனுக்கிரகித்துச் சென்றார்.

அவ்வனுக்கிரகம் பெற்ற சிவசித்பரானந்தர் சந்தோஷமடைந்து க்ஷேத்திராடனம் செய்துகொண்டு நாரதர் கிரியை அடைந்துவெகுகாலம்தபசு சித்திபெற்று லோகோபகாரமாகத் தீர்த்தாடனம் செய்து கொண்டு ஓர்சமயம் ஜீவன்முக்தி க்ஷேத்திரமான வாராணஸியான ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் கங்கையில் ஸ்நானம் செய்து விச்வேச்வரரை தரிசித்து ஓர் வில்வ விருக்ஷத்தடியில் தியானித்திருந்தார்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று

---

## அத்தியாயம் 8.

அனந்த வைத்திஞதா கேள்;— இப்படியிருக்கும் காலையில் டொண்டி விநாயகராலும் கிருஷ்ண பகவானுலும் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளாலும் அனுக்கிரகம் பெற்ற குருகுகனென்ற அனந்த பத்மநாபர் ஸத்குருவை எந்த இடத்தில் பார்க்கப் போகிறோம் என்ற மனக்கவலையோடு சுப்பிரமனியருடைய ஆக்ஞை வீணுகப்போகாதென்று எண்ணி டொண்டி விநாயரையும் சுப்பிரமணியத்தையும் மனதில் தியானித்துக்கொண்டு பிரதிதினம் அங்குமிங்கும் பார்த்துவரும்போது, ஓர் பில்வ மரத்தடியில் நிஷ்டையிலிருக்கும் பரமசிவ ஸ்வரூபத்தை சாக்ஷாத்காரமடைந்திருக்கும் சிவசித்பரானந்தர் எனற பரமயோகியைக்கண்டு சந்தோஷமடைந்து நாம் தேடின வஸ்து இதுதான் என்று நிச்சயித்து அந்த மகானின் கிருபாகடாக்ஷத்தை எதிர்பார்த்திருந்தார்.

அத்தருணத்தில் சிவசித்பரானந்தர் ஈசன் கிருபையால் நிஷ்டைகலைந்து கண் விழித்துப் பார்த்தார் அவ்வாறுபார்த்தவுடன் அனந்தபத்மநாபர் தண்டவத்தாய் அவர் சரணுவிந்தங்

களில்விழுந்து அவர் பாதங்களை பிடித்துக்கொண்டு பரவசமாக ஆனந்தத்தில் மூழ்கி குருவிற்கு பாதப்பிரக்ஷாளனம் செய்வது போல் ஆனந்த பாஷ்யத்தைப் பெருகவிட்டு அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று வெகுவாகப்பிரார்த்தித்தார்.

அம்மகாயோகியும் இவர் பக்தியைக்கண்டு ஆச்சரியமடைந்து கருணா மூர்த்தியானதால் "பயப்படாதே எழுந்திரு" என்று அபயம் கூறியவுடன் எழுந்திருந்து அஞ்சலி பந்தம் செய்து கொண்டு வணக்கமாக நின்று, மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் தாங்கள் தான் என்று பலவாராக ஸ்தோத்திரம் செய்து உபதேசத்தினால் என்னைக் கிருதார்த்தனாகச் செய்ய வேண்டு மென்று பலவாறாகப் பிரார்த்தித்தார். அம்மகான் ஞான திருஷ்டியால் பார்த்து இவர் விநாயகராலும் கிருஷ்ண பகவானாலும் சுப்பிரமணியக்கடவுளாலும் அனுக்கிரகம் பெற்றிருப்பதைத்தெரிந்து உபதேசத்திற்கு இவன் பக்வி தான் என்றும் இவனால் அநேகம் பேர்களுக்கு க்ஷேமம் உண்டாகும் என்றும் அறிந்து கங்கையில் ஸ்நானம் செய்வித்து பூர்ண கிருபையுடன் வீக்ஷா தீக்ஷை செய்து ஸ்படிகலிங்கம் கொடுத்து சத்குருவால் தனக்கு உபதேசமான அஜபா கல்பம் வாஞ்சா கல்பம் மகாவித்யா கல்பம் முதலிய சப்தகோடி மகாமந்திரங்களடங்கிய ஹரதத்த சந்தியா வந்தன கல்பம் என்ற பூஜா விதானம் முதலிய மகாமந்திரங்களை உபதேசித்தார்.

பிறகு உன்னால் உலகத்தில் சகல ஜனங்களும் அனுக்கிரகம் பெற்று க்ஷேமத்தை அடைந்து கிருதார்த்தர்களாகப் போகிறபடியால் "ஹே அனந்த பத்மநாபா! இது முதல் நாராயணகுரு என்ற தீக்ஷா நாமாவானது உனக்கு வழங்கட்டும்என்றும், நீ சாக்ஷாத்காரமாய்ஆய்விடுவாய்என்றும், பூர்ணமாய் அனுக்கிரகித்து கம்ஸபுரத்தில் நம்முடைய ஆசாரியாளாயும் விக்ரஹரூபியாயும் விளங்குகின்ற ஸ்ரீமத் ஹரதத்த சிவாசாரியாரை தரிசனஞ் செய்யும் காலத்தில் அவர் உனக்கு ப்ரத்தியக்ஷமாகி அனுக்கிரகிப்பார்" என்று கூறிவிட்டு சிவசித்பரானந்தர் மறைந்தார். அது முதல் அனந்தபத்மநாபரை நாராயண குரு சுவாமிகளென்று ஜனங்கள் அழைத்தார்கள்

இப்படி உபதேசம் பெற்றபிறகு அனந்தபத்மநாபநாராயணகுருசுவாமிகள் சிலகாலம்ஏகாந்தமாகவசிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நாரத கிரியென்ற புண்ணிய பிரதேசத்துக்

குச்சென்று அங்கு சிலகாலம் அருந்தவம் புரிந்து ஈசனனுக்கிரகத்தினால் சகலசித்தியும் பெற்று குருவினிடம் உபதேசம் பெற்ற கல்பங்களை லொரிதவராமல் அனுஷ்டித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒருசமயம் புத்திரனும் பத்தினியும் தரிசனம் வேண்டுமென்று நினைக்க அத்தருணத்தில் அவர்களிஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டி அவர்கள் முன்னிலையில் தோன்றி என்னை நினைத்த காரணமென்னவென்று வினவினார்.

அப்படி அவர்கள் நினைத்த மாத்திரத்தில் சத்குரு தங்கள் முன்னிலையில் தோன்றினதைக் கண்டு அதிக ஆச்சர்யமடைந்து அவ்விருவரும் அவரை எல்லாம் வல்லஇறைவனாகவே பாவித்து அவரதுபாதங்களில்விழுந்து நமஸ்கரித்துத்தோத்தரித்து "தங்களைப்பார்த்து வெகுநாளாகிவிட்டதால் தரிசிக்க வேண்டுமென்ற ஆவலோடு பிரார்த்தித்தோம் தாங்கள் கிருபாளுவானபடியால் எங்களுக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டியதற்காக நினைத்த மாத்திரம் வந்தீர்கள். எங்கள் கவலை தீர்ந்து விட்டது. எங்களைக் கிருதார்த்தர்களாக்க வேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள்.

நிக்ரானுக்கிரக சக்தராயும், திருகாலஞானியாயுமுள்ள அனந்த பத்மநாபரென்ற நமது நாராயணகுரு இவர்களுடையபுத்தியையும் பக்தியையும் கண்டு புத்திரனுக்கு மந்திரோபதேசம் செய்து ஸ்படிகலிங்கத்தைக் கொடுத்து திருகாலமும் சிவஆராதனம் செய்து வரும்படியாக ஆக்ஞாபித்து "அந்திகாலத்தில் பரமபதமாகிய மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவாய்" என்று அனுக்கிரகித்தார். பிறகு மனைவியை அழைத்து உன் "மனதையும்பக்தியையும், பாதிவிருத்யத்தையும் நன்றாயறிந்தேன் இது முதல் நீ என்னைத் தியானம் செய்வதுடன் சிவார்ச்சனம் செய்து கொண்டு வா. ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். முடிவில் முக்தையாக ஆவாய்" என்று பூர்ணமாக அனுக்கிரகித்து விட்டு, தன்குருவான சிவசித்பரானந்தருடைய வாக்கியத்தைப் பரிபாலிக்க வேண்டி கம்ஸபுரத்தில் அக்னீஸ்வர சன்னிதானத்தின் சமீபத்தில் வசிக்கும் ஆதிகுருவாயிருக்கிற ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியாளைத் தரிசிப்பதற்காக குருபரம்பரையைத் தியானம் செய்துகொண்டு பிரதக்ஷிணக்கிரமமாக க்ஷேத்திராடனம் செய்வதென்ற வியாஜமாகப் புறப்பட்டார்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 9.

ஸ்தாணு சிவன், நமது குருவின் விசித்திரமான சரிதையைக் கேளென்று சொல்லுகின்றார்.

நமது நாராயண குருஸ்வாமிகள் பலபுண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு ஹஸ்தினபுரத்திற்கு வந்தார். அங்கிருந்து குருக்ஷேத்திரத்திற்குப் போகும் வழியில் ஓர் கோரக்காக்ஷியைக் கண்டார். 50-வயதுள்ள ஒரு துலுக்கன் குஷ்டரோகத்தினால் அங்கங்கள் குறைந்து சரீரம் முழுவதும் ஆறாத புண்களோடு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். அப்புண்களில் புழுக்கள் உண்டாகி அதிக துர்நாற்றம் எடுத்து யாவரும் கண்டு சகிக்க முடியாததாக இருந்தது. ஆகவே இவனுடைய உற்றார்களும், ஊர்ஜனங்களும் இவனைக்கண்டு வெறுத்து ஊருக்கு வெகுதூரத்திற் கப்பாலுள்ள காட்டின் நடுவில் ஓரிடத்தில் அவனைக்கிடத்தியிருந்தார்கள். அவனுக்கு பகலில் மாத்திரம் ஒருவேளைக்கஞ்சி ஊற்றும்படி ஒரு வேலைக்காரனை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவ்வேலைக்காரன் கஞ்சி ஊற்றினாலும் ஊற்றுவான் இல்லாவிட்டாலும் இல்லை. ஆகவே அந்த வியாதியஸ்தன் புண்ணின்உபத்திரவத்தினாலேயும் பசிக்கொடுமையினாலேயும் மரணத்திற் கொப்பான அவஸ்தைப் பட்டுக்கொண்டு, தன் உயிர்போகவேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொண்டிருக்கும் காலத்தில் நமது நாராயண குரு அவ்வழியே செல்லலுற்றார். அம்மகா ரோகி சத்குருவைப் பார்த்தவுடன் ரோகங்களெல்லாம் பரிகாரமானதுபோல் சந்தோஷமடைந்து, "ஹே ஆண்டவா என்னைக்காத்தருள வேண்டும். இந்த அவஸ்தை என்னால் சகிக்க முடியவில்லை. என்னுடைய பெண்டு பிள்ளைகள் யாவரும் என்னைக்கைவிட்டு விட்டார்கள் எனக்குத்தங்களைத்தவிர வேறுயாரும் கதியில்லை எனக்குக்கிருபைசெய்யாமல் போகும் பக்ஷத்தில் என்ஜீவனும் தங்களோடு புறப்பட்டுவிடும்" என்று பலவாராக புலம்பிக் கண்ணீர் வடித்தான்.

இந்தப்புலம்பலைக் கேட்டு கிருபாநிதியான நமது நாராயணகுரு அந்த ரோகியைப்பார்த்து, "பயப்படாதே இவ்வியாதி நீங்கி நீ சௌக்கிய-மடைவாய். நீ பூர்வ ஜென்மத்தில் கோஹத்தி முதலிய கொடிய பாவங்களைச்செய்து வந்ததனால் உண்

டான கர்ம வியாதி இனியாவது நீ கோஹத்தி செய்வதில்லை என்றும், உலகத்தில் ஜீவஹிம்சையைத் தடுக்க உன்னாலான வரையில முயற்சிப்பதாயும் நீ வாக்களித்தால் உன் வியாதி இந்த நிமிஷமே உன்னைவிட்டு நீங்கும்'' என்றுரைத்தார் இவ்வரிய வசனங்களைக்கேட்டு எல்லாம் வல்ல இறைவனை தன்னெதிரில்நின்று தனக்குக் காட்சியளிப்பதாக நினைத்து அளவில்லா ஆனந்தத்தில் மூழ்கி, "நான் அப்படியே செய்கிறேன், இது சத்தியம், சத்தியம், சத்தியம். திவ்ய ஸ்வரூபமான தங்கள் சரணாவிந்தமே சாக்ஷி'' என்று உறுதி கூறினான்.

தயாநிதியான நாராயணகுரு இவனுடைய பரிதாப நிலைமையையும், கஷ்டத்தையும் கண்டு மனமுருகி விபூதியைக் கையிலெடுத்து குருபரம்பரையை ஸ்மரித்து அபிமந்திரித்து புன்சிரிப்புடன் "இவ்வியாதி இவனைவிட்டு நீங்கட்டும்'' என்று நினைத்து விபூதியை அந்த வியாதிஸ்தன்பேரில் தலைமுதல் கால்வரை போட்டு, சமீபத்தி லுட்கார்ந்து தன் கையினால் தடவியும் கொடுத்தார். சரீர முழுவதும் விபூதி பட்ட மாத்திரத்தினாலும், தரிசனத்தினாலேயும், அவருடைய ஸ்பரிசத்தினாலேயும், அக்கினியில் பட்ட பஞ்சுபோல் அம்மகாரோகமானது நாசத்தையடைந்து மாயமாய்போய்விட்டது நாராயண குருவின் அநுக்கிரகததினால் பால்யத்திலிருந்துவந்த சரீரத்தைக்காட்டிலும் அதிக ரூபத்தோடும் புஷ்டியோடும் எழுந்து குருவைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து "இம்மகா கஷ்டத்தை அனுபவித்த என்னை இப்படி சுகமாகச் செய்வதற்கு எங்கள் பெரியோர்களாலும், பந்துக்களாலும் உபாசிக்கப்பட்ட ஆண்டவன்தான் இவ்வுருவத்தை எடுத்து எனக்கு அனுக்கிரகம் செய்திருக்கிறார். அவர்தான் தாங்கள். தாங்கள் அனுக்கிரகித்தபடி இனி உலகத்தில் என்னால் கூடிய வரை கோஹத்தி முதலிய கொடிய பாவங்களைத் தடுக்க முயலுகிறேன்'' என்று மறுபடியும் உறுதிகூறி நமஸ்கரித்து அஞ்சலிபந்தனம் செய்துகொண்டு அதிக சந்தோஷத்துடன் அவரருகில் நின்றான். அப்பொழுது குரு அவனைப்பார்த்து "நீ உன் வீட்டுக்குச்சென்று பெண்டு பிள்ளைகளுடனும் பந்துவர்க்கங்களுடனும் சுகித்திருப்பாய்'' என்று அனுக்கிரகம் செய்தார்,

ரோகியாயிருந்த அப்புண்ணிய புருஷனை மிலேச்சன் வீடுசேர்ந்தவுடன் அவனுடைய பெண்டுபிள்ளைகள் பந்துக்கள் ஊரிலுள்ள சர்வ ஜனங்கள் ஆகிய எல்லோரும் நடந்த விருத்தாந்தத்தைக்கேட்டு ஆச்சரியமடைந்துநமது அனந்தபத்மநாப நாராயண குருவின் பிரபாவத்தை அடிக்கடி கொண்டாடி சுகித்திருந்தனர். அதுமுதல் சத்குருவானவர் முகம்மதியர்களாலும், ஜனங்களாலும் பூஜிக்கப்பட்டு ஆண்டவன் என்று கொண்டாடப்பெற்று உலக நன்மையின் பொருட்டு அநேக க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு சரயூநதிக்கரையை வந்தடைந்தார்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## அத்தியாயம் 10.

அனந்த வைத்தினுதா கேள்:—
அதன்பிறகு சரயூநதிக்கரைப் பிரவாகத்தைப்பார்த்து பிரளயகாலத்தில் பெருகிவரும் சமுத்திரத்தைப்போலிருக்கிறது என்று ஆச்சரியமடைந்து இருகரைகளிலு முள்ளவிருக்ஷஜாதிகளையும், அதிக வாசனையை வீசுகின்ற புஷ்பக் கொத்துகளையும் அனேகவிதமான கனிவர்க்கங்களையும், அங்கு வசிக்கும் விசித்திரமான பக்ஷிக்கூட்டங்களையும், அவைகள் செய்யும் உல்லாசமான சப்தங்களையும் மனோரம்யமான பிரதேசங்களையும் அதிலுள்ள அநேகவிதமான மிருக ஜாதிகளையும் ஆனந்தமாய்ப் பார்த்து புன்சிரிப்புடன் இதுவும் ஆச்சரியம் என்று உல்லாசமாய்ப் பார்த்துக்கொண்டு நிற்கும் சமயத்தில் குகதாசன் என்ற ஓடக்காரன் இவரைப் பார்த்தான்.

உடனே குகதாசன் எல்லாம்வல்ல இறைவனே தனக்கு அனுக்கிரகம் செய்வதின்பொருட்டு இவ்வுருவெடுத்து வந்ததாக எண்ணி ஓடோடியும் வந்து, அந்த சத்குருவை சிரசு முதல் பாதங்கள்வரை தன் கண்களால் விழுங்கிவிடுபவன் போல் கூர்ந்து பார்த்து அவருடைய சரணாவிந்தங்களில் வீழ்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி "இரக்ஷிக்கவேண்டும், சரணம் சரணம் என்று சொல்லிக்கொண்டே அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து நின்றான்.

உடனே கருணைக்கடலாகிய சத்குரு குகதாசனை நோக்கி தனது வலதுகையைத் தூக்கி "பயப்படாதே" என்று அபயமளித்தார். இவ்வரிய வார்த்தையைச் செவியுற்ற மாத்திரத்தில் குகதாசனுக்கு ஞானோதயமுண்டாயிற்று. உடனே அவன் சத்குருவைப்பார்த்து அஞ்சலிபந்தனம் செய்துகொண்டு தான் அவருக்கு என்ன செய்யவேண்டுமென்று அதிவினயத்துடன் வினவினான். அதற்கு சத்குரு "எனக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை" என்று உரைத்தார் உடனே குகதாசன் சத்குருவைப்பார்த்து அக்கரையிலுள்ள தன் குடிசைக்கு அவர் எழுந்தருளவேண்டுமென்று அதிபக்தியுடன்பிரார்த்திக்க அதற்கு குருவும் இசைந்தார். உடனே அவனிஷ்டம்போல் அவர் புன்சிரிப்புடன் ஓடத்தில் ஏறினார். அவ்வோடக்காரன் ஓடத்தைத் தள்ளுவதற்காக துடுப்பைக் கையில் எடுத்து குருவின் முகத்தாமரையைப் பார்த்த அளவில் பரவசமடைந்து தளதளத்த கண்டத்தோடு புளகாங்கிதனாக ஆனந்த பாஷ்பத்தைப் பெருகவிட்டு "என் அப்பனும் நீர்தான், அம்மையும் நீர்தான், பந்து மித்திரர்களும் நீர்தான், என்னுயிரும் நீர்தான், இப்பிரபஞ்ச ஸ்வரூபமும் நீர்தான், என்னுயிரும் நீர்தான்' ஆகாயமும் பூமி முதலியவையும் நீர்தான், சர்வ பிராணிகளுடைய ஹிருதய கமலத்தில் பரஞ்சோதியாயும், பரப்பிரும்மஸ்வரூபியாயும், சச்சிதானந்தரூபியாயும், சர்வேஸ்வரனுயிருக்கிற பரம்பொருளும் நீர்தான் தாங்கள்தான் எனக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும், ஹே குருநாதா" என்று மெய்மறந்து பலவாறுகப் பிரார்த்தித்துக்கொண்டே அக்ஞானமாகிற சமுத்திரத்தை குருதரிசனமாகிற ஓடத்தைக்கொண்டு கடந்து அதிசீக்கிரமாக ஞானமாகிய அக்கரையில் உள்ள தனது ஆச்சிரமத்தையடைந்தான்.

அவ்வாறுகுகதாசன் தனது ஆச்சிரமத்தை அடைந்ததும் அவ்விடத்திலிருந்த கனிவர்க்கங்களால் குருவை உபசரித்து அஞ்சலிபந்தத்துடன் "அடியேனை அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். குருவும் மனமிரங்கி தன் கையை அவன் சிரசின்மேல் வைத்து, "நீ கேட்டுக்கொண்டபிரகாரம் ஞானியாக இருந்து அடுத்தஜனமாவில் பிராமணோத்தமனாகப் பிறந்து ஆத்மவிசாரத்தினால் கிருதார்த்தனாகிவிடுவாய் என்று அனுக்கிரகித்துவிட்டு லோகோபகாரத்தின் பொருட்டு அயோத்திமுதாலன க்ஷேத்திரங்களில் ஸ்நானசந்தியாவந்தன

தரிசனம் முதலிய நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து கொண்டுவந்தார்.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 11.

வசிஷ்டர் தானுசிவன் "சத்குருவின் அற்புத செய்கைகளை இன்னும்கேள்" என்று சொல்லுகின்றார்.

பிறகு தக்ஷிணகைலாசமாகிய ஸ்ரீகாளஹஸ்தியைத் தரிசித்து வரும்போது காளஹஸ்திக்கும் வேங்கிடாசலம் என்கிறதிருப்பதிக்கும் மத்தியில் ஓர்மலையின் சமீபத்திலுள்ள ஒரு மரத்தின் நிழலில் ஓர்பஞ்சமக்கிழவன் வயிற்றுவலியினாலும் தலைவலியினாலும் வெகுநாளாகப் பீடிக்கப்பட்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான். மேலும் சிலநாட்களாக அவனுக்கு ஆகாரமும் கிடைக்காமையால் பசிநோய் வாய்ப்பட்டு அதன்கொடுமை தாங்காது உலகையேவெறுத்துத் தான்தன் உயிரைமாய்த்துக் கொள்ள தீர்மானித்திருக்கும் தருவாயில் நமது சத்குரு அவனுடையபூர்வஜென்ம விசேஷத்தினால்அவ்விடம் வந்தார், நடுசமுத்திரத்தில் விழுந்து அலைகள் வாய்ப்பட்டு கரையேற வழியில்லாமல் மூழ்கி மூழ்கிக் கிளம்பும் ஒருவனுக்கு அவனறியாமல் அவனைக்காப்பாற்ற ஓர்ஓடத்தைக்கொண்டுவருபவனைப்போல் நமதுசத்குரு அவனைப்பார்த்தமாத்திரத்தில் அப்பால்செல்ல மனமில்லாமல் சற்றுநேரம் அவனைப்பார்த்துக்கொண்டே நின்றார். அவரைபபார்த்த அந்த நீசன் "ஹே ஐயா! சாமியாரே! வெகுநாளாய் நான் அனுபவித்துவரும் கஷ்டத்தை என்னால் தங்களுக்குச்சொல்லமுடியவில்லைவியாதியின்கொடுமையாலும் பசியாலும், தாகத்தினாலும் உள்ளம்பதைத்து ஆவி சோருகின்றது. கண்கள் சுழலுகின்றன, மார்பு அடைக்கின்றது இன்னும் சற்றுநேரத்தில் என் ஆவி உடலை விட்டு நீங்கிவிடும் என்பது திண்ணம். எனக்கு உம்மைத்தவிர வேறுயாரும் துணையில்லை. என்னை ரக்ஷித்து அனுக்கிரகிக்க வேண்டும் என்று பலவாறாகப் பிரார்த்தித்தான். கருணைக்கடலாகிய குருஸ்வாமி மனமிரங்கி அவன் சமீபத்தில் நெருங்கினார். இதைக்கண்ட நீசன், "ஐயா, அங்கேயே நில்லுங்கள் நான் ஜாதியில் பறையன், பாபஜென்மமானதால் பெரியோர்கள் என்னருகில் வரக்கூடாது, ஜென்மாந்திரத்தில் நான் என்ன

பாபம் செய்தேனோ. அதனால் இந்த நீச ஜென்மத்தை எடுத்து இப்படிப்பட்ட கஷ்டத்தை யனுபவித்துவருகிறேன். ஸ்ரீ பரமசிவம்போன்ற தாங்கள் என்னருகில் வந்தால் அந்தப் பாபத்தினால் நான் இன்னும் என்னென்ன ஜென்மாவை எடுத்து என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்க நேருமோ ஆசையால் தாங்கள் எட்டி நின்றபடியே என் கஷ்டங்களை தீர்த்து பசியிலிருந்தும் இந்த ரோயிலிருந்தும் என்னை ரக்ஷிக்க வேண்டிய" என்று பணிவாகவும் மிக மரியாதையுடனும் சொன்னான்.

இவனுடைய புத்திக்கும் பக்திக்கும் மெச்சி, சத்குரு மிகுந்த சந்தோஷமடைந்து "ஹே நீச குலத்தில் பிறந்த உத்தமனே! நீ நீசகுலத்தில் பிறந்தும் கஷ்டங்களை அனுபவித்தும் வர்ணாச்சிரமத்திலிருந்து கொஞ்சம்கூட நழுவுதலில்லாத உன் புத்தியானது பெரியோர்களால் சாஸ்திரங்களை அறிந்து ஆசிரிதகிற செய்கையை அனுசரித்து உன் நல்ல வார்த்தையானது உலகத்தில் பிரும க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் முதலான ஜாதிகளிடங்களில் கீழ்ப்பட்டவர்கள் கிரமப்படி மேற்பட்ட ஜாதியார்களிடத்தில் இன்னென்ன விதமாக மரியாதையோடு இருக்கவேண்டும் என்று ஜனங்களுக்கு ஹிதத்தைச் சொல்லுகிறதாயிருக்கிறது. மிகுந்த சந்தோஷம் சமீபத்தில் வந்தால் ஆபத்துக்காலத்தில் தோஷமில்லை. இப்புத்தி மாத்திரம் எப்பொழுதும் மாறாமல் இருக்கவேண்டும். நீ கொஞ்சமும் பயப்படவேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே மகா சந்தோஷத்தோடு அவன்சமீபத்தி லுட்கார்ந்து கையிலிருந்த திரவத்தோடு கூடிய கனியை அவன் வாயில்போட்டு, "இதை மெதுவாக விழுங்கு" என்று சொல்லி, விபூதியை குருபரம்பரைஸ்மரணத்தால் அபிமந்திரித்து சரீரம் முழுவதும் பூசி விட்டு, "உன்னிடத்திலிருந்த சர்வ கஷ்டங்களும நிவர்த்தியாகி விட்டது" என்றுசொல்லி எழுந்தார்.

உடனே அப்பஞ்சமன் சாதாரணமாய்ப் படுத்திருந்தவன் எழுந்திருப்பதுபோல் எழுந்து பரபரப்புடன் தன் சரீரத்தை ஒரு முறையாக பார்த்து சத்குருவின் அநுக்கிரகத்தை நினைத்து அதி சந்தோஷத்தில் மூழ்கி குருவை பிரதக்ஷண நமஸ்காரம் செய்து தூரத்தில் விலகிநின்று மகாபக்தியுடன் தன்னிரு கைகளையும் தூக்கி சிரசின்மேல் கூப்பிவைத்துக்கொண்டு "ஐயா; சுவாமியாரே! எனக்குத் தாங்கள்தான் தெய்வம் நான்

பட்ட கஷ்டங்களெல்லாம் உங்களுடைய அனுக்கிறகத்தினுல் எங்கேயோ ஓடிவிட்டது. என் சரீர முழுவதும் புஷ்டியோடு கூட "சுகமாய்விட்டது," என்று சொல்லிக் கொண்டு அடிக்கடி நமஸ்காரம் செய்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று நின்றான். நமது சத்குரு புன்சிரிப்புடன் அவனை நோக்கி "ஹே நீசோத்தமா; நீவீடுபோய் உன் பந்து மித்திரர்களுடன் வர்ணாச்ரமமான நல் நடத்தை யிலிருந்து சிறிதும் நழுவாமல் "சுகமாயிரு" என்றுசொல்லி அனுக்கிரகித்து அனுப்பினுர்.

அவன் குரு உத்திரவுப் பிரகாரம் அது முதல் குடும்பத்தையோடு தானிருக்குமிடம் சென்று அங்கணர் முதலான ஜாதியர்களிடத்தில் மிகுந்த வணக்கத்தோடு மரியாதை தவராமல் சுகித்திருந்தான்.

பிறகு நாராயணகுரு மகாசந்தோஷத்தோடு வேங்கிடாசலம் என்கிற திருப்பதி முதலான க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு ஜோதிமயமான அருணாசலமென்னும் திருவண்ணாமலை வந்து அங்குள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நித்திய கர்மாக்களை முடித்து ஆலயத்திற்குள் பிரவேசித்து அக்ஞானமாகிய அந்தகாரத்தைப்போக்கக் கூடியதாயும் சர்வ வியாபியாயும இருக்கிற ஜோதிமயமான லிங்கத்தைத் தரிசித்து தன்மயமான தியானத்தில் சில காலம் நின்று, பிறகு பாஹ்யத்தில் திரும்பி ஆலயத்தின் மேற்புறத்தின் மார்க்கமாய் மலைமேல் சென்று அங்கே சஞ்சரித்து வரும் காலத்தில் அங்கிருந்த குகையையும் தீர்த்தத்தையும் பார்த்து மனசில் சஞ்சலத்தை நிவர்த்திசெய்து ஏகாந்தத்தை தரக்கூடிய தாயும் ரமணியமான வாசஸ்தலமாயும் தியானத்திற்கு யோக்யமாகவும் இருந்ததால் அங்கு சிலகாலம் இருக்க வேண்டுமென்று விருப்பங்கொண்டு அங்கேயே சிலகாலம் வாசம் செய்தார்.

பதினோராவது அத்தியாயம் முற்றிறறு.

## அத்தியாயம் 12

**ஸ்**தாணு சிவன் சொல்லுகிறுர்:—

இப்படியிருக்கும் காலத்தில் அவ்வூரில் வைத்தியத்தில் சிரேஷ்டராயும், தன்வந்திரி என்னும் வைத்திய விதியினுல்

மகாவிஷ்ணுவை உபாசிக்கிறவராயும், ஜீவகாருண்ய முள்ளவராயும் இருந்த வைத்திநாத சாஸ்திரிகளென்ற ஓர் அந்தணர் இருந்தார். அவருக்கு மகாவிஷ்ணு பிரசாதத்தினால் 12 வயதில் தேஜோமயமான கிருஷ்ணசர்மா என்ற ஓர் குமாரன் இருந்தான். ஒருநாள் பிதா தன்னுடைய குமாரனை நான்கு வாலிபர்களோடு கூடச்சேர்த்து மூலிகைகள் கொண்டுவரும்படி மலையிலுள்ள வனத்திற்கு அனுப்பினார். அக்குமாரர்களும் வனத்திற்குச்சென்று பிதாவின் உத்திரவு பிரகாரம் மூலிகைகளைவிதிப்படி எடுத்துக் கொண்டு திரும்பிவரும் காலத்தில் அருகிலிருந்த ஓர் புதரிலிருந்து ஒரு வேங்கைப்புலி கர்ஜித்துக்கொண்டு வந்தது. அதைக்கண்ட வாலிபர்களெல்லாரும் பயந்து ஓடிஓர் விருக்ஷத்தின் மேல் ஏறிக்கொண்டார்கள். ஆனால் கிருஷ்ணசர்மா மட்டும் பிரமையினால் ஒன்றும் தோன்றாமல் நின்று விட்டபடியால் அவ் வேங்கை அவன் பேரில் பாய்ந்து அவனை அடித்துத்தின்று விட்டது.

புலிமறைந்தவுடன் வாலிபர்கள் மரத்திலிருந்து இறங்கி "பிழைத்தோம், பிழைத்தோம்" என்று சொல்லிக்கொண்டே திரும்பிப்பாராமல் ஓடோடி வந்து வீட்டையடைந்து தயங்கி நின்றார்கள். அவர்களை வைத்தியநாத சாஸ்திரியார் பார்த்து இளைப்பாற்றி "என் புத்திரன் எங்கே?" என்று விசாரிக்கையில் அவர்கள் தங்கள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு தாங்கள் புறப்பட்டது முதல் நடந்தசமாசாரங்களை விஸ்தாரமாய்த் தெரிவித்து கிருஷ்ணசர்மாவைப் புலி விழுங்கியதையும் சொல்லி விட்டு அவரவர்கள் இருப்பிடம் சென்றார்கள்.

இதைக்கேட்ட கிருஷ்ண சர்மாவின் தாய் தந்தையர் துக்க மேலீட்டினால் மூர்ச்சித்து வேரற்ற மரம் போல் வீழ்ந்தனர். சற்று நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து, தங்கள் புத்திரனின் புத்தி, ரூபம், குணம், செய்கை முதலியவைகளை அடிக்கடி நினைத்துப் பிரலாபித்துக்கொண்டு அங்குமிங்கும் பித்துக்கொண்டவர்கள் போல் அலைந்து காட்டையடைந்து வீணில் தேடிக் கடைசியாக வீட்டுக்குத் திரும்பிவந்து, இனி என்ன செய்வோம், யாரைப்பார்ப்போம் எவர் உதவிசெய்வார் என்று புலம்பிக்கொண்டு அவ்வூரிலிருக்கும் பெரியவர்களை விசாரித்தார்கள். அங்குள்ள ஜனங்கள், " மலையிலிருக்கும் குகையில் வசித்துக்கொண்டிருக்கிற மகானைவிசாரித்தால்உனக்கு க்ஷேமமுண்டாகலாமே தவிர வேறுவழியில்லை யென்ற

தைக் கேட்ட அந்தபிராமணன், மாகாவிஷ்ணுதான் அவ்வாறு உபதேசித்தார் என்றநம்பி தன் மனைவியுடன் குகையிலிருக்கும் ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவராயும், சச்சிதானந்தஸ்வரூபியாயும், பரிபூரணராயும் மனோபீஷ்டப்பிரதாரயுமிருக்கிற ஸ்ரீ அனந்த பத்மநாபநாராயணகுருஸ்வாமிகளைக்கண்டு அவர் சரணாரவிந்தங்களில் வீழ்ந்து பாதங்களைகெட்டியாகப் பிடித்துக்கொண்டு "சரணம், சரணம், என் கஷ்டத்தை நிவர்த்தித்து ரக்ஷிக்க வேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள்.

தயாபாரனசத்குரு இவர்களுடைய பரிதாபநிலையைகண்டு மனமிரங்கி "பயப்படாதேயுங்கள்" என்று அபயம்அளித்துஅவர்களை எழுப்பி, முதலில் அவர்களை சோதித்து அதனால் அவர்கள் உண்மை பக்தியாளர்கள் தான் என்றும், தனது அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்கள்தானென்றும் நினைத்து, தனது குருபரம்பரையை ஸ்மரித்து அவர்களை தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வித்து, "நமச்சிவாய" என்கிற பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை இருவருக்குமுபதேசித்து அவர்கள் மனவுறுதியை சோதிக்கும் பொருட்டு "மூன்று நாட்களில் ஐந்து லக்ஷம் ஜபம்செய்யவேண்டும்" என்று ஆக்ஞாபித்தார். அப்படியே அவர்களும் சத்குரு சன்னதியே உத்தமமென்று நினைத்து அவ்விடத்திலேயேஇருந்து 5லக்ஷம் உருவையும் மூன்று நாட்களில் செய்து முடித்தார்கள்.

உடனே குருவுக்கு சந்தோஷ முண்டாய் அவ்விருவரையும் பார்த்து "நீங்கள் புத்திரன் போன திக்கை நோக்கி, புத்திரனை நினைத்துக்கொண்டு "நமச்சிவாயா" என்று உயர்ந்தகுரலாக மூன்றுதரம் அழைத்தால் உங்கள் புத்திரன் வந்து விடுவான் என்று அனுக்கிரகம் செய்தார். உடனே அவர்களும் குருவின் ஆக்ஞைப்பிரகாரம் மூன்று தரம் அழைத்ததும், குருவின் அனுக்கிரகத்தினால் கையைத் தூக்கிக்கொண்டு, வந்தேன் வந்தேன் என்று சொல்லிக்கொண்டு குரு சன்னிதானத்திலும் தாய் சமீபத்திலும் கிருஷ்ணசர்மா ஓடிவந்தான். அவ்வாறு வந்துநின்ற புத்திரனைப் பார்த்ததும் உடுக்க உடையில்லாமலும் இருக்க நிழலில்லாமலும், புசிக்கச்சிறிதும் உணவில்லாமலும், படுக்கப் பாயில்லாமலும், பேசத்துணையில்லாமலும்இருக்கிற ஓர்மகாதரித்திரனுக்கு ஆண்டவன் அருளால் யாதொருவித சிரமமன்னியில் பூமியிலிருந்து ஏராளமான பொருள் கிடைத்தால் எப்படி அளவற்ற சந்தோஷம்

அடைவானே அதற்கு பதின்மடங்கு ஆனந்தத்தை அவ்விடு வருமடைந்தார்கள்.

உடனே அவர்கள் ஸ்ரீ அனந்த பத்மநாபநாராயண குருவின் சரணாரவிந்தங்களில் தங்களுடைய சிரசை வைத்துக் கைகளால் அவர் பாதங்களை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "இருதார்த்தர்களானோம். இனிஎங்களுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை, எங்களை அனுக்கிறகித்து ரக்ஷிக்கவேண்டும்" என்று பலவாறாக பிரார்த்தித்துக் கொண்டு கட்டிலடங்காத சந்தோஷத்தினால் ஆனந்த பாஷ்பத்தை அவர் சரணாரவிந்தங்களில் பாதப் பிரக்ஷாளனம் செய்வதுபோல் பெருகவிட்டுப் பின் எழுந்து நமஸ் குருவின் சன்னிதானத்தில் தளதளத்த கண்டத்தோடு அவ்யக்தமான வாசகத்தினாலே பலவிதமான ஸ்தோத்திரங்களைச் செய்து ஆனந்தக்கூத்தாடி இன்னது செய்வதென்று தோன்றாமல் பரவசமாக நின்றார்கள். பின்னும் குருவைப்பார்த்து, "மாதா, பிதா, குரு, தெய்வம், பராபரவஸ்து முதலியயாவடும் தாங்களே தான். தங்களைத்தவிர ஜெகத்துக்கு வேறுபதார்த்தம் ஒன்றும் இல்லாததால் எனக்குமுக்தி கிடைக்கக்கூடியதற்கான அனுக்கிரகம் செய்ய வேண்டும், என்று பலவாறாய்ப் பிரார்த்தித்தார்கள்.

அதைக்கேட்ட நமதுசத்குரு அவர்களுடைய தீவிரமான பக்திக்கிரங்கி அவர்களைப்பார்த்து "நான் உபதேசித்த பஞ்சாக்ஷர மந்திரத்தை பக்தியோடு உறுதியாக ஜபித்து வந்தால் இகத்தில் புத்திர மித்திர களத்திர பௌத்திராதி கிருக க்ஷேத்திர தன தான்யாதி ஐசுவரியங்களோடு வெகுகாலம் அனுபவித்து முடிவில் முக்தி என்கிற தத்துவத்தையடைவாய்" என்றும் அவர் மனைவியைப் பார்த்து "நீபாதிவிருத்தியத்தைக் கொஞ்சமும் நழுவவிடாமல் பர்த்தாவே தெய்வம் என்று நினைத்து அவரையே சதாதியானம்செய்து கொண்டு இப்பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை ஜபித்து வந்தால் தீர்க்க மாங்கல்யத்தோடு வெகுகாலம் இகத்தில் சகல சந்தான சௌபாக்கியசம்பத்துக்களானசௌக்கியங்களை அனுபவித்துப் பரத்தில் முக்தி அடைவாய்" என்றும், அவர்கள்புத்திரனைப்பார்த்து, "நீ மாதா பிதாக்களுடைய வசனங்களையும் சிச்ருஷாதிகளையும் பரமபக்தியுடன் செய்து பிதாவிடம்பஞ்சாக்ஷரஉபதேசத்தையும் பெற்றுக்கொண்டு சௌக்கியமாக இரு

ந்து கைவல்ய சுகத்தையடைவாய்," என்றும் அனுக்கிரகித்து அம்மூவரையும் அவர்களுடைய வீட்டிற்கு அனுப்பிவிட்டு யோக சமாதியிலமர்ந்தார்.

அம்மூவரும் குருவினது அனுக்கிரகத்தின் பிரகாரம் வீடுசென்று சத்குருவையே பஞ்சாக்ஷரப்பெருமாளான தெய்வமென்று மனதில் தியானம் செய்து கொண்டு ஜபபூஜாதிகளை நடத்திக்குருவின் அனுக்கிரகத்தால்சகலசௌக்கியபோகங்களையும் அடைந்தார்கள். அன்றுமுதல் அவ்வூரிலுள்ள மஹாஜனங்கள் யாவரும இந்த ஸ்ரீ அனந்த பத்மநாப நாராயணகுருசுவாமிகளினால் செய்யப்பட்ட அமானுஷமாயும், அபூர்வமாயும் அதி விசித்திரமாயும் உள்ள செய்கைகளை அறிந்து ஆனந்தங்கொண்டு அந்த சத்குருவாகிய மகானை அது முதல்நாமகாணம் செய்வித்தது போல் "குகநமசிவாய" என்று புகழ்ந்து கொண்டாடி வந்தார்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று

## அத்தியாயம் 13.

அனந்தவைத்தினதா சத்குருவின் பிரபாவத்தை இன்னும் சொல்லுகிறேன் கேள்,

பிறகு குகநமசிவாயாவென்ற நமது குருவானவர் சில காலம் அங்கிருந்து அங்குள்ளவர்களுக்கு அபீஷ்டத்தை அளித்து கம்சபுரமென்னும் சஞ்சனூரை நினைத்து புறப்பட்டு, திருத்தணிகை ஸ்ரீ காஞ்சீபுரம் புண்டரீகபுரம் என்கிற சிதம்பரம் முதலான அனேக சிவக்ஷேத்திரங்களையும், விஷ்ணு க்ஷேத்திரங்களையும் விதிப்படி தரிசித்துக்கொண்டு கம்ஸபுரம் வந்து சந்தோஷமடைந்துஉத்திரவாகினியாயும்,புண்யமோக்ஷப்பிரதாயினியாயும், மங்களப்பிரதையாயுமுள்ள காவிரியிலும் பிருமதீர்த்தம், அக்னிதீர்த்தம், பராசரதீர்த்தம் முதலானதீர்தங்களில் விதிவத்தாகஸ்நானம்செய்து தன்குருவினால்தனக்கு உபதேசம் செய்யப்பட்ட ஸ்ரீஹரதத்தசிவாசாரியாருடைய சந்தியாவந்தனகல்பம் முதலான நித்திய நைமித்தியகர்மாக்களை முடித்துக்கொண்டு தனக்கு ஆதி குருவாகிய ஸ்ரீ மத் ஹரதத்த சிவாசாரியாளின் ஆலயம்வந்துவிதிப்படி அதைவலம் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, ஆனந்தங்கொண்டு பரவசமடைந்து லோகோத்தாரகராயும், சம்சாரசாகரத்தை தாணம் செய்வதற்கு ஓடமாயும், அஞ்ஞானத்வம்ஸகராயும்

ஞானப்பிரகாரயும், பிருப்ம விஷ்ணு சிவாத்மகராயும் சச்சிதானந்த ரூபியாயும், பரம்பொருளாயுமுள்ள விக்ரக ரூபியான ஸ்ரீ ஹாரதத்த சிவாசாரியாளை பரிசுத்தமானவார்த்தைகளால் அனேகவித மானஸ்தோத்திரங்களைச்செய்து, மனதினால் ஹிருதயமாகிற ஆகாயத்தில் சித்சொரூப சூர்யரான ஆச்சாரியாளைத் தியானித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், தனதுகுரு சிவசித்பரானந்தரால் வாக்களித்த பிரகாரம் விக்ரகரூபியான ஸ்ரீ ஹாரதத்தசிவாச்சாரியாள் பிரத்யக்ஷமாகதமதுகுருஸ்வாமிகள்முன்தோன்றி, "ஹே! அனந்தபத்மநாப! உன்குருஉபதேசத்தினாலும், அசஞ்சலாமான குருபக்தியினாலும், திரிகாலங்களிலும வைதீகஆகமசம்பந்தமான ஈஸ்வரஉபாசனையினாலும் நீ ஞானத்தையடைந்து கிருதார்த்தனாகஆய்விட்டாய் இனிஉனக்கு கர்மாக்களாலே ஆகவேண்டியது ஒன்றுமில்லை. ஆனால் நீ ஜீவன் முக்தனாயிருந்து கொண்டு நீசெய்கிற சத்கர்மாவினால் ஜனங்களினுடைய புத்தியானது சத்கர்மாவில் பிரவர்த்தித்து சத்கர்மாக்களைச்செய்யும்படி, நீஒவ்வொரு சத்கர்மாவையும் கர்மிபோல் நடத்திக்காண்பித்துகொண்டு இவ்வுலகிலுள்ளவெகுபேர்களை வர்ணாசிரம தர்மப்படி சத்கர்மாக்களைச் செய்து கிருதார்த்தர்களாகஆகும்படி அனுக்கிரகித்து வெகுகாலம் நாராயண குருவென்ற கீர்த்தியோடு விளங்குவாய்" என்று அனுக்கிரகித்து விட்டு அந்தர்தியானமானார்,

பிறகு ஸ்ரீ அனந்தபத்ம நாபநாராயண குருஸ்வாமிகள் மிகுந்த சந்தோஷமடைந்து ஆசாரியாளைக்குறித்து மறுபடியும் நமஸ்கரித்துவிட்டு ஸ்ரீ ஹாரதத்தசிவாசாரியாளால் உபாசிக்கப்பட்டகல்பகேசரிஅம்பாளையும், அக்னீஸ்வரமகாலிங்கத்தையும் தரிசிக்க வேண்டும் என்று நினைத்து ஆலயம் சென்று கல்பக விநாயக பால சுப்ரமணியரோடு கூடகல்பகாம்பாளையும் அக்னீஸ்வர மகாலிங்கத்தையும் பூஜித்துப் பலவாராகத்துதித்து ஆனந்தித்து கர்ப்பக்கிரகத்திலிருந்து திரும்பினார்.

அந்தருணத்தில் தஞ்சையில் வசித்த கிருஷ்ண சாஸ்திரிகள் என்ற ஒரு பிராமண சிரேஷ்டர் மிகுந்த ஏழ்மைத் தன்மையுடன் உத்தமமான ஈஸ்வர உபாசனை செய்து கொண்டு கர்படராக இருந்து வந்தார். அவருக்கு குப்பு என்னும் பெயருடைய புத்திரனொருவன் இருந்தான். அப்புத்திரன் தன்பிதா உத்தமகதியையடைந்த பிறகு தன் தாயாரை

அழைத்துக்கொண்டு கம்பபுரமென்னும் கஞ்சனூரில் வந்து வாசம் செய்து கொண்டு சிவாலயத்தில் கல்பகேஸ்வரி அம்பாளுக்கும் அக்னீஸ்வர மகாலிங்கத்துக்கும் அபிஷேகத்திற்காக தினந்தோறும் காவிரியிலிருந்து பெரிய குடங்களில் எதேஷ்டமாகத் தீர்த்தம் கொண்டுவந்து சேர்த்து விட்டு அபிஷேக, நிவேதன, தீபாராதனை முடிந்த பிறகு பிரசாதத்தை வாங்கி இருவரும் புசித்துக் காலங்கழித்து வந்தார்கள்.

குப்புவுக்கு வேறு ஒரு வியாபாரமும் தெரியாது. ஈசன் கிருபையால் சரீர பலமிருந்ததால் உறுதியான பக்தியோடுகூட அபிஷேகத்தின்பொருட்டுதீர்த்தம் கொண்டுவருதல் சந்தனம் அரைத்தல் முதலிய கைங்கர்யங்களைச் செய்துகொண்டும் மாதாவினுடைய சிச்ருஷையையும் பரம பக்தியுடன் சோம்பலன்னியில் தினந்தோறும் செய்துகொண்டுவரும்போது ஒருநாள் மாதாவை நமஸ்கரித்து "எப்போதும்போலில்லாமல் இன்றயதினம் அதிக சிரமப்பட்டுத தீர்த்தம் எடுத்துவந்தேன், உன் சிச்ருஷையும் செய்யமுடியவில்லை, இனி யான் யாது செய்வேன்", என்று வருத்தப்பட்டார். அவன் தாய் ஈசனைப்பிரார்த்தித்து'குழந்தாய்வருத்தப்படாதே' நாம்செய்த கர்மாவை நாமே அனுபவிக்க வேண்டும். ஜென்மாந்தரத்தில் நன்றாய் ஈஸ்வர உபாஸனை செய்யாததினால் நமக்கு இப்படிப்பட்ட தரித்திரதசையும் சரீரசிரமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நம்முன்னோர்கள் செய்திருக்கும் புண்ணியவசத்தினால் அக்னீஸ்வரருக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்யும்பாக்கியமாவது கிடைத்தது. அதனால் கல்பகாம்பாளும், அக்னீஸ்வர மகாலிங்கமும்திருப்தி அடைந்திருப்பார்கள்.நீ ஆலயம்சென்று அவர்கள் சன்னதியில் நமஸ்கரித்து எனக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தால் அப்படியே ஈசன் அனுக்கிரகம் செய்வார் என்று சொன்னாள்.

மேற்கூறியவாறு தன்மாதா சொன்ன வார்த்தைகளையெல்லாம் குரு உபதேசமாக நினைத்து அவளை நமஸ்கரித்து, ஆலயம்செல்ல அன்னையின் உத்திரவுபெற்று, ஈஸ்வரன் சன்னிதானத்தில் சாஷ்டாங்கமாக அநேக நமஸ்காரங்கள் செய்து நின்று கொண்டு, ஈசனை நோக்கி கண்ணீர் பெருக விட்டுக்கொண்டு ஸ்தோத்திரம் செய்யத்தெரியாமல்,"கல்பகேசுவரியான ஜகன்மாதாவே; எனக்கு உங்களை ஸ்தோத்திரம்

செய்யவோ, பூஜைசெய்யவோ, சிச்ருஷை முதலானகாரியங்களை ச்செய்யவோ யாதொன்றும் எனக்குத்தெரியவில்லை. நான் பக்தியோடு உறுதியாக உங்களுக்கு அபிஷேகத்திற்கு ருசியாக தீர்த்தம் கொண்டுவந்தது சத்தியமாக விருந்தால் எனக்குத்தாங்களிப்போது அனுக்கிரகம் செய்ய வேண்டும் அப்படிச்செய்யாவிடில் நான் இனி வீட்டுபோய்ச் சேருவதில்லை வேறொன்றையும் பார்ப்பதுமில்லை, புசிப்பதுமில்லை யென்று அக்னீஸ்வாருக்கு நேராக சன்னதியில் உறுதியோடு உட்கார்ந்துவிட்டார்.

அப்படி உட்கார்ந்த மூன்றாவதுதினம் மத்தியானகாலத்தில் அம்பிகையோடு அக்னீஸ்வரர் தீர்த்தகைங்கரியத்தினுலுமாதாவின்வாக்கியத்தில் உண்டான உறுதியானபக்தியினுலும் சந்தோஷமடைந்து அனுக்கிரகம் செய்ததுபோல "பயப்படாதே சூடியசீக்கிரத்தில் அனுக்கிரகம்பெறுவாய்" என்று அசரீரிஉண்டாயிற்று அதைக்கேட்ட குப்புஎன்றபிராமணேத்தமர் ஈசன் அனுக்கிரகித்து விட்டார் என்று அடிக்கடி நமஸ்கரித்து எழுந்திருந்து அங்குமிங்கும் சுற்றிபார்க்குமளவில், ஆலயத்தின் கர்ப்பகிரகஹத்திலிருந்து அக்கினீஸ்வர மகாலிங்கமே இந்த ஸ்ரீ அனந்தபத்மநாப நாராயணகுருவாகமூர்த்திகரித்து இந்தகுப்புவுக்கு அனுக்கிரகஞ்செய்ய வெளியில் வந்ததுபோல் இந்தஸ்ரீ அனந்தபத்மநாப நாராயண குரு அக்னீஸ்வரமகாலிங்கத்தைதரிசனம்செய்துவிட்டு வெளியேவந்தார்.

அப்போது குப்புவென்ற அந்தணர் அந்த சத்குருவை பார்த்து இவர் தான் அக்னீஸ்வர மகாலிங்கம், நமக்கு அனுக்கிரகஞ்செய்யவந்திருக்கிறார் என்று நினைத்து சாஷ்டாங்கமாக பலதடவை நமஸ்கரித்து அவர் சரணுவிந்தங்களை தனதுஇருகரங்களினுலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுபிரக்ஷாஎனபசெய்வதுபோல் ஆனந்தக்கண்ணீரைப் பெருகவிட்டு எனக்குத் தாங்கள் தான் கதி. வேறேருவரும் இல்லை' தங்களே சரணம் சரணம். என்னை ரக்ஷிக்கவேண்டும். நான் ஒன்றும் தெரியாதவனுனதால் தங்கள் கிருபாகடாக்ஷத்தால் பவசாகரத்திலிருந்து கிருதார்த்தனுக ஆகும்படி என்னை அனுக்கிரகித்தருளவேண்டும், என்று கதறினர், இதைப்பார்த்து நமதுகுருசுவாமிகள், "பயப்படாதே" என்று அபயம் செய்து தன்கையால் அவனை தூக்கி நிற்கவைத்து, இவன் உபதேசத்திற்கு அருகனு

வென்று பார்த்தார். இவன் ஈஸ்வரனுக்கு அதிகப்பிரியமான அபிஷேகத்திற்கு தீர்த்தகைங்கரியம் முதலான காரியங்களை உறுதியானபக்தியோடு கூடசெய்தவனாகையால் ஈஸ்வரானுக்கிரகத்திற்குப் பாத்திரனென்றும், உபதேசத்திற்கு அருகனென்றும் தெரிந்து கொண்டார்.

உடனே, குப்புனை அந்த க்ஷேத்திரத்திலுள்ள அக்னி தீர்த்தம் முதலான தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானஞ்செய்வித்து தன்கடாக்ஷத்தினால் வீக்ஷாதீக்ஷை செய்து தனக்கு சிவசிதம்பரானந்தரால் உபதேசிக்கப்பட்ட ஹாரதத்தகல்பம் என்ற மகாமந்திரங்களை உபதேசித்து, சிறிதுகாலம் ஏகாந்தமாக வனத்தில் வசித்துக்கொண்டு இந்த ஹாரதத்த கல்பங்களை மூன்று காலங்களிலேயும் அநுஷ்டானஞ்செய்து சித்தியடைந்து கிருதார்த்தனாக ஆவாயென்றும், உலகத்தில் நீ" குப்தசிவன்" என்ற பெயருடன் விளங்குவாய் என்றும் பூர்ணமாக அநுக்கிரகம் செய்து விட்டு, க்ஷேத்திராடனமாகப் புறப்பட்டு திருவாடுதுறை முதலான சப்தஸ்தலங்களையும், மத்தியார்ஜுனம், கும்பகோணம், ஸ்வாமிமலை, திருவலஞ்சுழி, ஸ்ரீ பிரயாணம், பஞ்சநதக்ஷேத்திரங்கள் முதலான க்ஷேத்திரங்களைத் தரிசித்து கடைசியாக பராசுநாத்தன க்ஷேத்திரமென்னும் திருமழபாடியான திவ்விய க்ஷேத்திரத்தில் ஈஸ்வர ஆலயத்திற்கு மேற்குதிக்கில் கொஞ்ச தூரத்தில் மனோக்யமான பிரதேசத்தில் ஸ்ரீவிருக்ஷமென்ற வில்வமரத்தடியில் வீராஸனஸ்தராக ஆத்மானுசந்தானம் செய்து கொண்டிருந்தார்.

பிறகு குருவினிடம் அநுக்கிரகம் பெற்ற குப்தசிவன் ஆனந்தசாகரத்தில் மூழ்கி ஈஸ்வரானுக்கிரகத்தினால் இனிநாம் கிருதார்த்தனாய்விட்டோமெனமிகுந்தசந்தோஷத்தோடு சத்குருதியானத்துடன் கிரகப் வந்து அன்னையை நமஸ்கரித்து அவள் உத்திரவு பெற்று, குருவின் உத்திரவுப்பிரகாரம் நாரதர் மலைசென்று பன்னிரண்டுவருஷகாலம் ஹாரதத்தசந்தியாவந்தனகல்பங்களினால் மூன்றுகாலங்களிலேயும் விதிப்படி ஈஸ்வர உபாஸனைசெய்து மகாமந்திரங்களுடைய சித்தியையடைந்து ஜீவன்முக்தனாக இருந்து உலக க்ஷேமத்தின் பொருட்டுவெகு க்ஷேத்திரங்களை சுற்றிக்கொண்டு கஞ்சனூரில்வந்து சிலகாலம் வசித்துக்கொண்டிருந்தார்.

பதிமூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 14.

அனந்த வைத்திருதா, ஒருமனப்பட்டு சாவதானமாய்க்கேள்.

அப்படியிருக்குமளவில் திருவையாற்றில் பிரணதார்த்திஹர சாஸ்திரியென்ற ஒரு பிராமணோத்தமர் சத்கர்மானுஷ்டானபரராயும் ஆசார சீலராயுமிருந்தார். அவ்வந்தணருக்கு பஞ்சநதீசுவாருடைய அனுக்கிரகத்தினால் ஒருபுத்திரன் பிறந்தது. அப்புத்திரனுக்கு பஞ்சனதம் என்று நாமகரணம் செய்யப்பட்டு பால சூரியனைப்போல் பிரகாசத்துடன் விருத்தியடைந்து வர அந்தக்குழந்தைக்கு பிதா அந்தந்தக்காலங்களிலேசூத்ரோக்தமான ஜாதகர்மாதி உபநயன விவாககர்மாக்களை விதிப்படி செய்து வைத்தார்.

பிறகு பஞ்சனதம் என்ற பிராமணோத்தமர் பெரியோர்களிடத்தில் பக்தியுள்ளவராயும் பிராதஸ்நானம் முதலான நித்ய கர்மானுஷ்ட சிஷ்டராயும் ஈசனிடத்தில் பரம பக்தியுள்ளவராயும் உஞ்சவிருத்தியினால் ஜீவனம் செய்துகொண்டு பஞ்சனதம் என்ற திருவையாற்றில் வசித்து வந்தார். அவருக்கு க்ஷேத்திராடனம் செய்யவேண்டுமென்ற ஆவல் உண்டாகி அவர் ஒவ்வொரு க்ஷேத்திரத்திலேயும் விதிப்படி தரிசித்துக்கொண்டு கிரமமாக கம்பபுரம் என்ற கஞ்சனூருக்கு சமீபம் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து ஆலயம் சென்று கல்பகாம்பாளையும் அக்னீஸ்வர மகாலிங்கத்தையும் தரிசித்து நமஸ்கரித்து ஸ்துதித்துத் திரும்பும் சமயத்தில் இவருடைய அதிர்ஷ்டவசத்தினாலும் ஜென்மாந்தரிய புண்ணியவசத்தினாலும் அங்குவசித்துவரும் குப்தசிவனென்ற மகானுடைய தரிசனம் ஏற்படவே இவர் அம்மகானின் சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து என்னை சிருதார்த்தனுக்கி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று பலவாறாக வேண்டிக்கொண்டார்.

அப்போது தன் ஞான திருஷ்டியினால் அவருடைய பக்வத்தை யறிந்து தயாளுவான குப்தசிவன் அவருக்கு

பஞ்சாக்ஷர மகாமந்திரத்தையும், மகாகணபதி தக்ஷிணாமூர்த்தி மகாமந்திரங்களையும் உபதேசித்து, "நீ இவைகளை உறுதியான பக்தியுடன் ஜபம்செய்து வந்தால் உனக்கு அதிசீக்கிரத்தில் ஈஸ்வராநுக்கிரகத்தினால் என்குருவான ஸ்ரீ அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமிகள் உனக்கு தரிசனம் கொடுத்து, உபதேசம் செய்து கிருதார்த்தனாக செய்வித்து பூர்ணமான அனுக்கிரகம் செய்வார்," என்று சொல்லி "நீ இதுமுதல் பஞ்சனதசாஸ்திரியென்ற பெயருடன் வழங்கப்பட்டு வருவாய்," என்று பூர்ணமாய் அனுக்கிரகம் செய்து உலக க்ஷேமார்த்தமாக க்ஷேத்திராடனம் செய்யப்புறப்பட்டு ஆனந்தமாகச்சென்றார்.

பிறகு உபதேசம் பெற்ற நமதுகுருவான பஞ்சனதசாஸ்திரியள் சந்தோஷத்தோடு குப்தசிவன் என்ற குருமூர்த்தியை மனதில் தியானித்துப் பூர்ணமான குருபக்தியுடன் அக்னீஸ்வரமகாலிங்க ஆலயத்திற்கு தக்ஷிணபாகத்தில் விக்ரகரூபியாயும் ஆதி குருவாயுமிருக்கிற ஸ்ரீஹரதத்தசிவாச்சாரியாளைத் தெரிசனம் செய்து நாராயணகுருவின் தெரிசனம் சிக்கிரத்தில் ஏற்படவேண்டும் என்று பஞ்சாக்ஷராதிஜபங்களை சதா ஜபித்துக்கொண்டு தீர்த்தாடனமென்ற வியாஜத்தினால் சஞ்சாரம் செய்துகொண்டு பஞ்சனத க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்.

சில காலத்திற்குப் பிறகு அந்த பஞ்சனதசாஸ்திரிகள் மாகமாசத்தில் ஆதிவாரம் சுக்கிலபக்ஷம் ஏகாதசி கூடிய சுபதினத்தில் ஸ்நானம்செய்யப்புறப்பட்டு பாசுநர்த்தனபுரம் என்ற திருமழபாடியான திவ்யக்ஷேத்திரத்தில் உத்தரவாகினியான மகாநதியில் மாகஸ்நானம் முதலானவைகளை விதிப்படி முடித்துக்கொண்டு ஆலயத்துக்குள் பிரவேசித்து மங்களாம்பிகாசமேதரான வைத்தினாதசுவாமியையும் ஸ்கந்த கணபதிகளோடு கிரமப்படி தரிசித்து வீதிப்பிரதக்ஷிணத்திற்காகப் புரப்பட்டு மேலவீதியில்வரும்சமயத்தில் அங்குள்ள ஜனங்களால் இவ்வூரில் கொஞ்சம்மேற்கில் கொஞ்சதூரத்தில் ஓர் பில்வமரத்தடியில், ஈஸ்வரஸ்வரூபமாயும் சமதமாதிகளுக்கு இருப்பிடமாயும், தரிசனமாத்திரத்தினால் அக்ஞானத்தை நிவர்த்திசெய்து ஞானத்தைஉண்டுபண்ணுபவராயும்,

கருணை மூர்த்தியாயும் வழங்குகிற ஓர்மகான் நிஷ்டையிலிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அதிசந்தோஷத்துடன் சாஸ்திரியள் குப்தசிவன் என்றதனது குருவை மனதில் தியானித்து அம்மகானின் தரிசனார்த்தம் இல்வமரத்தின் சமீபம் சென்று நிஷ்டையிலிருக்கும் மகாத்மாவைக் கண்டு ஆனந்தங்கொண்டு மனதில் நம் குருவால்சொல்லப்பட்ட சத்குரு இம்மகானாகத் தானிருக்க வேண்டும் என்று நிச்சயித்து, ஆனந்தசாகரத்தில் மூழ்கி அடிக்கடி நமஸ்கரித்து அவர்சமீபத்திலிருந்த குப்பை பதவியவைகளையெடுத்துசுத்தம் செய்து தீர்த்தத்தினால் பரிஷ்கரித்து சமீபத்தில் நின்று மகானுடைய கண்விழிப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்படியிருக்கும் தருணத்தில் மத்தியான வேளையில் பதினாறு நாழிகையளவில் இவர் அதிர்ஷ்டம் உதயமானது போல் மகாத்மாவின் அந்தக்கரணம் நிஷ்டையிலிருந்து பகிர்முகத்தையடைந்தது. உடனே பஞ்சனத சாஸ்திரியள் பரபரப்புடன் அவர்சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தன்னிருகரங்களாலும் அவர் சரணாரவிந்தங்களைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு பலவிதஸ்துதிகளைச்செய்து என்னை கிருதார்த்தனாக ஆகும்படி உபதேசித்து அனுக்கிரகித்து ரக்ஷிக்கவேண்டும் என்று பலவாறாகப் பிரார்த்தித்து நிற்குங்கால் கருணாமூர்த்தியான சத்குரு சற்றுயோஜித்து இவன் குப்தசிவனால் அனுக்கிரகிக்கப்பட்டவன், உபதேசத்துக்கு அருகன் தான் என்று நினைத்து, "பயப்படாதே" என்று அபயப்பிரதானம் செய்து தன்கையினாலே அவனை எழுப்பி உனக்கு கம்ஸபுரத்தில் குப்தசிவனால் பஞ்சாக்ஷராதி மந்திரங்கள் உபதேசிக்கப்பட்டதா என்று கேட்டு விட்டு, நான் போஜனம் செய்து வெகுகாலமானதால் உன்னிடமிருந்து இரண்டு கவளம் வெண்பொங்கல் கிடைக்குமா?" என்று கேட்டார். இதைக்கேட்டவுடன் பஞ்சனதசாஸ்திரிகள் இம்மகான் நம்மை இரண்டு கவளம் வெண்பொங்கல் கேட்கும்படியான பாக்கியம ஏற்பட்டதே என்று களித்து, இவர்தான் நமது குருசொன்ன நாராயண குருசுவாமிகள் என்று தீர்மானித்து மிக்க சந்தோஷத்துடன், நாம்குப்தசிவனால் உபதேசம் பெற்றோம் என்றது இம்மகானுக்கு எவ்விதமாகத்தெரிந்தது என்று ஆச்சரியப்பட்டுபயமடைந்து, அதிபக்தியுடன் பரம ஆதரவாக வணக்கத்

துடன், "கிடைக்கும், கொண்டுவருகிறேன்" என்றுசொன்னதைக்கேட்டபிறகு மறுபடியும்நாராயண குருசுவாமிகள் நிஷ்டையிலிருந்துவிட்டார்.

பிறகு நமது பஞ்சனதசாஸ்திரிகள் சாயங்காலபரியந்தம் அவர் சமீபத்தில் வசித்து திருவையாற்றில் தன் கிரகத்திற்கு வந்து சேர்ந்து மறுநாள் வழக்கம் போல்பிராதக்காலத்தில் பரிசுத்தமான காவிரியில் சாஸ்திரப்படி ஸ்நானஞ்செய்து நித்யகர்மாக்களை முடித்துக்கொண்டு மிகவும் சிலாக்யமான உஞ்சவிருத்தியை எடுத்துவெண்பொங்கல் செய்துகையில் எடுத்துக்கொண்டு குருவைமனதில்தியானித்துப்புறப்பட்டு பதிமூன்றுநாழிகைக்குள் திருமழபாடி குருசன்னதியையடைந்து அங்குகுருசமீபத்திலுதிர்ந்திருந்த சருகுமுதலியகுப்பைகளைப் பெருக்கிக் குளிர்ந்த காற்று அடிக்கும்படி தீர்த்தம் தெளித்து குருவின் எதிரில் கண்விழிப்பை எதிர்பார்த்துக் கொண்டுநின்றார் இப்படியிருக்கும்போது பதினாறுநாழிகையளவில்சத்குரு கண்ணை விழித்தவுடன் இந்தப் பஞ்சநத சாஸ்திரியள் நமஸ்கரித்து மிகுந்த வணக்கத்துடன் வெண் பொங்கலைக் கவளம் கவளமாக இரண்டு கவளம் கொடுத்தவுடன் புசித்து விட்டு வாக்கையும் நேத்திரங்களையும் மூடிக்கொண்டுநிஷ்டையிலிருந்து விட்டார்.

பிறகு சாஸ்திரிகளும் குருவினால் இரண்டுகவளம்புசிக்கப் பட்ட குருப்பிரசாதமான பாக்கிவெண் பொங்கலை, தனக்குப் பிரசாதம கிடைத்தது என்ற சந்தோஷத்தோடு ஆனந்தமாகப் புசித்து விட்டு அவரருகில் சாயங்காலம் வரையில் இருந்து குருசிச்ருஷாதிகளை எச்சமயத்தில் எவ்விதமாகச் செய்யவேண்டுமோ அவ்விதமாகச் செய்து முடித்துக்கொண்டு சந்தியாவந்தனம்முதலான கர்மானுஷ்டானங்களுக்கு பஞ்சனத க்ஷேத்திரத்திற்கு வந்து பிராமணர்களுக்கேற்பட்ட கர்மாக்களை முடித்துக்கொண்டு சுகமாக இருந்துவந்தார்.

இப்படி தினந்தோறும் பதினைந்து மாதகாலம் உஞ்சவிருத்தியால் வெண்பொங்கல் செய்துகொண்டு குருசன்னிதானம் போகிறதும் சிச்ருஷை முதலானதைச் செய்கிறதும் திரும்பி வருவதுமான இக்காரியங்களில் கிஞ்சித்தேனும் சலிப்

பன்னியில் நழுவதலில்லாமல் அதிக ஜாக்கிரதையாக பக்தி சிரத்தையோடு சந்தோஷமாய் குரு கைங்கரியத்தை நடத்தி வந்தார். அப்படி நடத்திவருங்காலத்தில் சித்திரைமாதம் ஓர் தினத்தில் உஞ்சவிருத்திகிடைக்க நாழிகையாய்விட்டபடியால் வெண்பொங்கல் செய்துகொண்டுபுறப்பட்டுப்போகபதினைந்து நாழிகையாய் விட்டதே இனியாது செய்வோம், குரு கண்விழித்திருப்பாரே, எனமிக வருத்தங்கொண்டு அபராதம் ஏற்பட்டுவிடும் என்று வேகமாகப்போனார். அப்பொழுது கொள்ளிடத்து மணல் சோளத்தை போட்டால் பொரியும் படியிருக்கிற நெருப்புக்கொப்பானதாக இருந்தது. அதில் கொஞ்சமும் யோஜிக்காமல் மனதில் திடமாக சத் குருத் தியானத்தைச் செய்துகொண்டுகொஞ்சங்கூட சிரமமன்னியில் சுகமாக மகா நதியைக்கடந்து குருவின் அனுக்கிரகத்தினால் ஒருவன் பவசாகரத்தைத் தாண்டி மோக்ஷமென்கிற கரை அடைந்தாற்போல் நமதுபஞ்சனத சாஸ்திரியள் கொள்ளிடமாகிற அம்மகாநதியின் அக்கரையையடைந்து, தான் வரும் முன்னே விழித்திருக்கும் குருசன்னிதானத்தில் சென்று அவர் சரணாரவிந்தங்களில் நமஸ்கரித்து, "நான்மிகுந்த அபராதத்தைச் செய்துவிட்டேன் தாங்கள் பொறுத்துக்கொண்டு இந்தப்பிரசாதத்தைக் கிரகித்து என்னை அனுக்கிரகிக்கவேண்டும்" என்றுபிரார்த்தித்து அஞ்சலிபந்தம் செய்துநின்றார்.

அப்படி நின்ற நமது பஞ்சநதசாஸ்திரிகளைப் பார்த்து அவர் மனதைச் சோதிக்க நினைத்து, "இன்று முதல் நீ இங்கு வரவேண்டாம் இன்றையதினம் எனக்கு மிகுந்தசிரமத்தை உண்டுபண்ணிவிட்டாய்" என்று சொல்லி, அக்கினிக்கு சமானமான மணலினால் தபிக்கப்பட்டு கொப்பளித்திருக்கும்தன்மையையடைந்திருக்கும் தனது பாதங்களைத்தூக்கிக் காண்பித்து கையினால் உள்ளங்காலைத் தடவும்போது தோல் தொப்பையாகக்கழன்றுவந்துவிட்டது. அதைப்பார்த்து நமதுசாஸ்திரிகள் மனம் பதைத்து நடுநடுங்கி இப்படிப்பட்ட அபசாரத்தை செய்து விட்டோமே, இனி என்ன செய்வோம் எப்படி இப்பாபத்தை நிவர்த்திப்போம் என்று மனம் வருந்தப்பட்டு ,ரக்ஷிக்கவேண்டும், ரக்ஷிக்கவேண்டும்" என்று பரிதவித்தார். கிருபாநிதியான ஸ்ரீநாராயண குருஸ்வாமிகள் இவருடையஉறுதியான பக்திக்கு மெச்சி அவர் சரீரத்தை முழுவதும் தடவிக்கொடு

த்து "இன்று முதல் இருநூற்றைம்பத்தேழாவது தினத்தில் புஷ்பவன க்ஷேத்திரமென்ற திருப்பூந்துருத்திக்கு வருவேன். அப்போது அனுக்கிரகம் செய்கிறேன்," என்று சொல்லிவிட்டு வழக்கம்போல் பிரசாதத்தைப் புசித்துவிட்டு யோக மாயயில் மறைந்தார்.

பதினாலாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 15.

வைத்தினாதா! இன்னும் கேள்.

பிறகு பஞ்சனத சாஸ்திரிகள் நமது குரு மறைந்த விசித்திரத்தையும், தனக்கு அனுக்கிரகித்ததையும் தனக்கு மணலால் ஏற்பட்ட சிரமத்தை அவர்பாதங்களினால் கிரகித்து செய்கைகளையும் நினைத்து நினைத்து, அதி ஆச்சரியமடைந்து தான் கிருதார்த்தனாக ஆய்விட்டதாகச் சந்தோஷித்து அவ்விடத்திலேயே வழக்கம்போல் குருவினால் புசிக்கப் பட்டது போக மீதி பிரசாதத்தை வழக்கம்போல் புசித்து விட்டுசந்தோஷத்துடன் குருவைத்தியானம் செய்து கொண்டு திருவையாற்றிற்கு வந்துசேர்ந்தார். பிறகு குரு தரிசனம்எப்போது ஏற்படுமென்று குருவினால் குறிக்கப்பட்ட நாளை எதிர்பார்த்து சுகித்திருந்தார்,

பிறகு யோகமாயையால் மறைந்த சத்குரு சிலதினத்திற்கப்பால் நமது பஞ்சனதசாஸ்திரிகளுக்கு குறிப்பிட்ட சுபதினமும் வந்துவிட்டபடியால் இருந்தவிடம் விட்டுப் புறப்பட்டு ஆகாசபுரி யென்னும் கடுவெளி க்ஷேத்திரத்தின் வழியாய் காவிரி நதியைக்கடந்து அதன் தென்கரை வழியாய்ச் சென்று அப்பால் குடமுருட்டி யென்னும் நதியையும்கடந்து கிழக்காக புஷ்பவனேஸ்வரர் ஆலயத்தின் மேல்புறம் வீதிக்கு மேற்கின் குடமுருட்டியின் தென்கட்டுக்கரையில்வந்துகொண்டிருந்தார்.

அத்தருணத்தில் அவ்வூரில் கோவிந்தன் என்னும் ஓர் தரித்திரனான குடியானவன் இருந்தான். அவனுக்குப் பிழைக்க ஒருவழியும் தெரியாமல் ஒருவனிடம் துட்டுவட்டிக்குக் கடன்வாங்கி ஒரு பெண்ணாட்டை வாங்கி வளர்த்து அதனிடத்திலுண்டாகிற குட்டிகளை விருத்திசெய்து ஜீவனம்

செய்யலாம் என்று நினைத்து மூன்று ரூபாய் எட்டணாவுக்கு ஓர் ஆடு வாங்கினான். இவனுடைய துர்பாக்கியத்தினால் அவ்வாடு மரித்தது. அதைப்பார்த்து துக்கம் பொறுக்க மாட்டாமல் அக்குடியானவன், "உன்னால் ஜீவிக்கலாமென்று நினைத்து கடன்வாங்கின என்னை மோசம் செய்து விட்டாயே" என்று அடிக்கடி பிரலாபித்துக் கொண்டு இருந்தான். இதைக்கண்ட ஊர் ஜனங்கள் இவனைப் பரிகாசம் செய்து ஓர் ஆட்டுக்கு இப்படி அழலாமா, இது இறந்து வெகுநாழிகையாகிவிட்டபடியால் இனி இதை இவ்விடத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. இதைஎடுத்துக் கொண்டுபோய் ஊருக்கப்பால் புதைத்துவிடு என்று சொன்னதைக் கேட்டு அக்குடியானவன் அதிக வருத்தமடைந்து அதை எடுத்துப் புதைக்கமனமில்லாமல், ஜனங்களின் உபத்திரவத்திற்காக மரித்த ஆட்டைத்தோளில் தூக்கிக்கொண்டு ஊருக்கு மேற்கில் மேலவீதிக் கடுத்தாற்போலிருக்கும் ஜனசஞ்சார மில்லாத கட்டுக் கரையில் முதல்நாள்காலையில் இறந்தஆட்டைவைத்துக் கொண்டு அதிக துக்கத்துடன கதறிக்கொண்டிருந்தான்.

அக்காலத்தில் பரமகிருபாளுவான நமது ஸ்ரீ நாராயண குருஸ்வாமிகள் அதன்வழியாக வரும்பொழுது இறந்த ஆட்டைக் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருக்கிறகோவிந்தனைப்பார்த்து "இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. இந்த ஆட்டிற்காகப் புத்திரனைப் பரிகொடுத்தவன் போல் நீ ஏன் இவ்வளவுதுக்கப் படுகிறாய்?" என்று கேட்க, அதற்கு அவன், "இந்த ஆட்டை நான்நம்பி இருக்க அதுஎன்னை மோசம்செய்துவிட்டது" என்று முதல் நடந்த பிரகாரம் கோவிந்தன் தெரிவிக்க அதைக்கேட்டு ஆதிகுரு ஸ்வாமிகள் அவனுடைய தீனதசையைக்கண்டு மனமிரங்கி 'அழாதே" என்றுதேற்றி, "கோவிந்தா, உனக்கு இதனுடைய கிரயத்தைக்கொடுத்தால் போதுமா, சந்தோஷம்தானா? என்றுகேட்க அக்குடியானவனும், நமக்கு இப்படி இந்தசெத்த ஆட்டுக்கு கிரயம் தரப்போகிறார்கள், என்று நினைத்து அவர்காலில்விழுந்து நமஸ்காரஞ்செய்து என் ஆண்டவனே! ஹரஹரவென்று தன்னிரண்டு கன்னங்களிலும் தன்னிரு கைகளாலும் போட்டுக்கொண்டு, தாங்கள் சொன்னபிரகாரம் அதன்கிரயத்தைக் கொடுத்துவிட்டால் இன்னும் ஒருஆடுவாங்கி அதனால் ஜீவிப்பேன். அதுபோதும், எனக்கு சந்தோஷம்தான் என்று சொன்னவுடன் சத்குரு கிழேகுனிந்து கட்டுக்கரையின்

மண்ணைக்கிள்ளி அவன் வலதுகையில் "பிடி" என்று சொல்லிக் கொடுத்துவிட்டு "நீ கையை மூடிக்கொண்டு உன்வீட்டிற்குச் சென்று பிறகு நீ கையைத்திறந்துபார். அப்படிச் செய்தால் உனது தரித்திரமே உன்னைவிட்டு நீங்கிவிடும்" என்று சொல்லி அனுப்பினர்.

அற்பபுத்தியுடைய அக்குடியானவன் குருசொன்னபிரகாரமே வீட்டுக்குப்போய் திறந்துபார்க்காமல் கொஞ்சதூரம் போய் நின்றுகொண்டு தன்கையைத் திறந்து பார்த்ததினுல் அவன் தரித்திரம் அவனை விட்டு நீங்காமல் ஆட்டிற்காக கடன்வாங்கின தேதிமுதல் அதுபரியந்தம் வட்டியும் முதலும் சரியாக இருந்துவிட்டபடியால் சந்தோஷம் அடைந்து "அடேடே, ஐயா, அந்தசாமியார் பெரியசாமியார்" என்று நினைத்து செத்த ஆடுஇருந்த இடத்தைத் திரும்பிப் பார்த்தான், சத்குரு செத்தஆட்டின் பக்கத்தில் உட்கார்ந்து விபூதியை எடுத்து குரு பரம்பரையை ஸ்மரித்து "இவ்விறந்த ஆடு எழுந்திருக்கட்டும்" என்று நினைத்து அதன்மேல் போட்டு தன்கையினுல் சிரசுமுதல் வால்வரையில் அதைத் தடவிக்கொடுத்த மாத்திரத்தில் அந்தசெத்த ஆடானது படுத்து எழுந்திருப்பதுபோல் உடம்பை சிலிர்த்துக்கொண்டு எழுந்திருந்து முன்னிருந்ததைக் காட்டிலும் தேகம் பெருத்து நல்ல புஷ்டியுடன் கண்ணுக்கு வெகு அழகாக அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு சப்தம் செய்து கொண்டு, கிழக்கு திக்கிலிருக்கிற சத்குருவின் சமீபத்தில் குருவின் பாதத்தில் சிரசை வைத்து நமஸ்கரித்து அவரை நோக்கிப்பின் தொடர்ந்து கொண்டிருந்தது. இதைப்பார்த்த கோவிந்தன் 'சாமியார் நமக்குஇதன் கிரயத்தைக் கொடுத்து விட்டார். அப்படிஇருந்தபோதிலும் இந்த பெரியசாமியாருக்குஇவ்வாடு எதற்கு. இதினுல் அவருக்கு ஒருபிரயோஜனமும் இல்லையாதலால் நமக்கு பணத்துக்கு பணமும் வந்துவிட்டது நாம் ஆட்டையும் ஓட்டிக்கொண்டு போய்விடலாம்" என்ற பேராசையோடு அதன் பின்னங்கால்களைப் பிடித்து மேற்காக பலத்துடன் இழுக்கும்போது அந்த ஆடு பலிஷ்டமானதால் அவன் மார்பைக்காட்டி நெஞ்சில் ஒருஉதை பலமாக உதைத்துவிட்டு நமது சத்குருவின் பின்னேயே சென்றது.

பிறகு உதைபட்ட கோவிந்தன் கட்டுக்கரையிலிருந்து உருண்டு பிரண்டு எட்டுக்குட்டிக்கரணம் போட்டுத்திடுமென்று பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்து சற்று நேரத்துக்குப்பின் மூர்ச்சை தெளிந்து நிதானித்து இவ்வாட்டிற்கு இவ்வளவு பலமும் புஷ்டியும் உண்டானதற்குக் காரணம் என்ன வென்று நினைத்து ஆச்சரியமடைந்து "இவ்வளவும் இச்சாமியாருடைய செய்கையே தவிர வேறுஇல்லை" என்று நிச்சயித்து, "இனி இவ்வாட்டை ஒருவனாய் இழுக்கமுடியாது. நம்மைச்சேர்ந்த நாலுபேர்களை அழைத்துவந்து எவ்விதத்திலும் இதைப்பிடித்து வீட்டிற்குகொண்டுபோய் விடவேண்டும்" என்றுதீர்மானித்து ஆட்களை அழைத்துவர வேகமாக கைக்களத் தெருவின் வழியாக ஓடும் போது அங்கு பந்துவிளையாடிக் கொண்டிருந்த, மாடன், இரணக்காட்டேரி, சுடலைக்கருப்பன்முதலான சண்டாளதேவதைகளின் சாதனமானபலத்தினால் பாபபுண்யத்திற்குப் பயப்படாமல் துஷ் கிருத்தியம் செய்கிற சிலகைக்கள ஜாதிப் பையன்களும் சாதுக்களாயும் தர்மசிந்தனை உள்ளவர்களாயும், தெய்வபக்தி உள்ளவர்களாயும் உத்தமர்களாயுமான முதலியென்ற ஜாதியார்களுடைய வம்சத்திலுண்டான சிலபையன்களும் சேர்ந்து என்னகாரணத்தினால் இவ்வளவுவேகமாக இக்கோவிந்தன் ஓடுகிறான் என்று ஓடுகிறவனைப்பார்த்து "அடே கோவிந்தா, என் இப்படி ஓடுகிறாய், யாரிடத்தில் என்னபயம் உனக்கு. என்ன ஆபத்துநேர்ந்தது என்ன விசேஷம் சொல்" என்று மறித்துக்கொண்டார்கள்.

அவ்வாறு கேட்டதும் அவன், ஒரு பெரிய சாமியார் நேற்றையதினம் செத்த ஆட்டைக் கட்டுக்கரையில் போட்டுக் கொண்டு நான் அழுது கொண்டிருக்கும்போது, "நீ பயப்படாதே" என்று சொல்லி அதன் சிரயத்தைக் கொடுத்து ஆட்டையும் பிழைப்பித்து விட்டார். அந்த ஆட்டைப்பிடித்து நான் இழுக்கும்போது என்னை உதறித் தள்ளிவிட்டு அதும காபலத்துடன் அவர் பின்னால் சென்று வருகிறது. அந்த ஆட்டைவிட மனமில்லாதவனும், அதைத்தனியாக பிடிக்க முடியாததினாலும் நான்கு பேர்களை அழைத்துக்கொண்டுபோய் பிடித்து வரலாமென்று ஓடுகிறேன், தாமதிக்க முடியாது" என்று சொன்னதைக்கேட்டு கைக்களர் முதலிய விளையாடும் பையன்கள் அவனைப் பரிகாசமாக செத்த ஆடு

பிழைக்குமா என்று பலவாறாய்க் கேட்கும்போது அவன், "நான் பொய்சொல்லவில்லை அந்தச் சாமியார் பிழைக்கச்செய்தது உண்மைதான், அவர் ஆட்டுடன் வீதி சுற்றிக்கொண்டு சிவாலயத்தின் மேல்புறத்தின் வழியாக வருகிறார்" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய்விட்டான்.

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 16.

இதைக்கேட்ட அனந்த வைத்தினாதர் ஆச்சரியமடைந்து தன்குருவான ஸ்தாணு சிவனைப்பார்த்து, "குருநாதா மேலே என்ன நடந்தது" என்று பரம பக்தியோடும் ஆவலுடனும் கேட்க ஸ்தாணு சிவன் சொல்லுகின்றார்.

கோவிந்தன் சொல்லிப்போன வார்த்தைகளைக் கேட்ட பையன்கள், பால்யத்திமிறினால் இன்ன காரியத்தைச் செய்யலாம், இதைச்செய்யக்கூடாது என்று யோஜிக்காமல் இதைப் பரிசோதிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் நினைக்கும்போது இவர்களில் முதலியார் பையன்களில் சிலர் "பெரியோர்களிடத்தில் வேடிக்கையாகக்கூட சிலவார்த்தைகளையும் பரிசோதனை முதலான சில செய்கைகளையும் செய்யக்கூடாது என்று நாம் பெரியோர்களால் சொல்லக் கேட்டிருக்கிறோம் அப்படிச் செய்தால் என்ன வென்றால் நமக்கும் நமதுகுடும்பத்துக்கும் பெரிய ஆபத்து உண்டாகும் என்று சொல்லக்கேட்டிருக்கிறோமல்லவா. ஆகையால் இந்தச் சாமியாரிடத்தில் ஒருபரிசோதனையும் நமக்கு வேண்டாம்," என்றதைக் கேட்ட கைக்கள ஜாதியிலுண்டான சிலதுஷ்டர்கள் வெறிபிடித்தது போல் தங்களுக்கு அல்ப தேவதையினுடைய பலமிருக்கிறது என்ற அகம்பாவத்தினால் நாமிருக்குமிடத்தில் வந்து வேறொருவர் தொழில் செய்கிறதா என்று சொல்லி "அவர் பெரிய சாமியாராக இருந்தால் நம்மை என்ன செய்யலாமென்றும் அவர் நம்மை ஏதாவது செய்தால் அவரை ஒரே பார்வையாகப்பார்த்து உட்காரவைத்து விடுகிறேன். இவர்களுடைய பயந்த வார்த்தையைக் கேட்டு யோசிக்காமல் இருங்கள் அச்சாமியாரை; எவ்விதத்திலும் சோதிக்க வேண்டும்!" என்று சொன்னார்கள்.

உடனே படுகைக்குப்போய் ஒரு மூங்கில் வெட்டி ஆசந்தியாகக்கட்டி அதில் ஒருவனைப் படுக்கச்சொல்லும்போது தன்னைச் சேர்ந்தவர்களை கபடமானவார்த்தைகளினால்படுக்காமலிருக்கும்படி செய்து பொதுவான முதலிஜாதிப்பையன் ஒருவனை சாதுர்யமான வார்த்தைகளால் ஆசந்தியில் படுக்கும்படிசெய்து வஸ்திரத்தினால் மூடி எடுத்துக்கொண்டு அக்னியோடுகூட பின்னால் பிரலாபித்துக்கொண்டு பரிதவிப்பவர்கள் போல் பாவனை செய்து கொண்டு கட்டுக்கரையில் மேற்காக வரும்பொழுது பிழைப்பித்த ஆட்டுடன் கட்டுக்கரையில் அப்பர்ஸ்வாமிகள் ஆலயத்திற்கு கிழக்காக வருகிற நமது குருஸ்வாமிகளைப் பார்த்து கோவிந்தன் என்னும் குடியானவன் சொன்ன சாமியார் இவராகத்தான் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு அவர் முன்னே வைத்துவிட்டு வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு அதிக துக்கத்தினால் பிடித்தவர்கள்போல், "ஐயா! சாமியாரே நீங்கள் செத்த ஆட்டைப் பிழைப்பித்தீர்களாமே, இந்தப்பையன் ஒரு தாய்க்கு ஒருபிள்ளை. அனியாயமாக இறந்து விட்டான். இவனை எப்படியாகிலும் பெரிய மனது செய்து தாங்கள் கட்டாயம் பிழைக்கச்செய்யவேண்டும்." என்று மிகுந்ததுக்கத்தை அடைந்தவர்கள்போல் காட்டிக்கொண்டு நின்றார்கள்.

அவர்களைப் பார்த்து ஈஸ்வரஸ்வரூபமான நமது சத்குருவான நாராயண குருஸ்வாமிகள் அவர்கள் கபடத்தையறிந்து, புன்சிரிப்புடன் "மரித்தவன், மரித்தவன்தான் பிழைப்பதாக இருந்தால் கெர்ப்ப வாசத்தினாலே உண்டாகலாமே தவிர வேறில்லை. இனி மேல்காரியங்களைப் பார்க்கலாம். நீங்கள் அல்ப தேவதையின் பலத்தினால் திமிர் பிடித்து ஜனங்கள் முதலான யாவருக்கும் கொடிய தீமையைச் செய்வதால் அந்த தேவதைகள் உங்களைவிட்டு நீங்கட்டும். உங்களுக்கு பெரியோர்களிடத்தில் நல்லபுத்தியும் பக்தியும் உண்டாகும் வரையில் உங்கள் வம்சம் குறைவடையட்டும்," என்றுசொல்லிவிட்டு யோகமாயையால் மறைந்து ஒருவருக்கும் தெரியாமல் ஒரு நல்ல மாமரத்தடியில் வீற்றிருந்தார்.

அதன்பிறகு இந்தப் பையன்கள் எல்லோரும் "அடேடே பிழைப்பித்ததைப்பார்த்தாயா. நன்றாய்ப்பிழைப்பித்துவிட்டார்

நல்ல சாமியாரடா. இது போல்தான் அவர் செய்கைகள் இருக்கும்," என்று கைகொட்டி நகைத்து பரிகசித்துக்கொண்டு ஆசந்தியில் கட்டியிருக்கும் பையனைத் தட்டியெழுப்பி "எழுந்திருடா" என்று சொல்லி காலால் நெருப்புச்சட்டியை உதைத்துஎட்டித்தள்ளி, "அந்தப்பெரிய சாமியார்உன்னைப்பிழைப்பித்துப்போய்விட்டார். நீ இன்னும் படுத்திருக்கவேண்டாம்" என்றுஅவனைகையினால்உருட்டி புரட்டிப்பார்க்கும்போதுகுருவின் வாக்கினால் "மரித்தவன் மரித்தவன்தான்" என்ற சொல்லோடு கூட அவன் பிராணனும் புறப்பட்டுப் போய்விட்டபடியால் எவ்வளவு எழுப்பினாலும் அசையாமல் மரித்த சரீரமான கட்டையானது கிடந்தது.

இந்த விநோதங்களைப் பார்த்திருந்த முதலிஜாதிப்பையன்களும், கைக்களஜாதிப் பையன்களும் இவர்களுடைய இந்த துஷ்டச்செய்கைகளைப் பார்த்து, "நாங்கள் எல்லோரும் பெரியவர்களிடத்தில் ஒருசோதனையும் வேண்டாம் என்றுமுன்னமே சொன்னதற்கு நான் அப்படிச் செய்வேன், நான் இப்படிச் செய்வேன் என்ற சபதம் கூறினீர்களே, நீங்கள் பெரியவரை சோதனை செய்ததின் பலன் என்னவாயிற்று பார்த்தீர்களா பெரியவரை சோதித்ததற்குப் பலன் உங்கள் குடும்பத்திற்கு இகழ்ச்சியும், உங்களிடமிருந்த தேவதை தொலைந்து யானை தன் தலையில்தானே மண்ணைப் போட்டுக் கொண்டதைப்போல் உங்களுடைய அழிவை நீங்களே தேடிக்கொண்டீர்கள். அசத்துக்களான உங்களுடன் சேர்ந்தபடியால் ஒரு தாய்க்கு ஒரு பையனை இந்தப் பையன் அநியாயமாய் இறந்து விட்டான் இனி என்ன செய்வோம்" என்று ஒருவருக்கொருவர் மிகுந்த வருத்தத்துடன் பேசிக்கொண்டு, "அவன் தாய்தந்தையர்களிடம் யார் சொல்லுவது? நீதான் சொல்லவேண்டும், நீதான் சொல்ல வேண்டும்," என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு அவனுடைய தாய் தந்தையரிடம் நடந்ததை ஆதியோடந்தமாய்ச் சொல்லிவிட்டுப் போனார்கள்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்ட தாய்தந்தையர்கள் பூமியில் வெட்டினமரம்போல் திடீரென்று விழுந்து புரண்டு புத்திர சோகத்தினால் துக்க சமுத்திரத்தில்மூழ்கி கைக்களஜாதியில் உள்ள துஷ்டச் செய்கையுள்ளவர்களை மிகவும் நிந்தித்து,

'ஹே, பாபிகளே! என்பிள்ளைதானு உங்களுக் குப் பெரியவரின் சோதனைக்கு அகப்பட்டான். அனியாயமாக நாசம்செய்துவிட்டீர்களே" என்றுபுலம்பி அந்தக் கட்டுக்கரையிலிருக்கும் இறந்துபோன புத்திரனைப் பார்த்து மனம் தாங்காமல் கதறி, "அடா குழந்தாய்! முந்தியே துஷ்டசகவாசம் கூடாது என்று சொல்லியும் நீயும் அதைக்கேட்காமல் அசத்துக்களினுடைய சகவாசத்தினுல் நீ இந்தகெதியையடைந்தாயே" என்று பலவாருகப் பிரலாபித்து விட்டு மனதை ஒரு வாருகத் தேற்றுதல் செய்துகொண்டு இறந்துபோன அப்புத்திரனை அந்தப் பெரியவராலேயே எழுப்பிக்கொள்ளலாம் என்று நினைத்து, அந்த வகைக்காப்பை யன்களினுல் பெரியவரான மகானுடைய ரூபத்தையும் அவரா ல்பிழைக்கச்செய்த ஆட்டோடு கூடஇருக்கிருரென்பதைத் தெரிந்து கொண்டு அங்குமிங்குமாய்த்தேடிப் பார்க்கும்போது நல்ல மாமரத்தின் கீழே அந்த ஆடு நிற்பதைப் பார்த்து இவ் விடத்தில் தான் அவர் இருக்கவேண்டும் என்று நிச்சயித்து அந்த மரத்தடியில் வெகு நேரம் சுற்றிப்பார்த்தும் குருவின் தரிசனம் கிடைக்காததினுல் நமக்கு பயனில்லையென்று திரும்பி னுர்கள்.

அந்த சமயத்தில் அவ்வூரிலிருக்கும் ஜனங்கள் இச்செய் கையையறிந்து ஆச்சர்யமடைந்து துக்கத்தினுல் தவிக்கிற இவ் விருவரையும் மேல் காரியத்தை நடத்தும்படி தேருதல் சொல் லி அடக்கம் செய்விக்கச் சொன்னுர்கள். அப்படியே அவ்வி ருவரும் அவ்விறந்த புத்திரனை அடக்கம் செய்து விட்டு பிறகு புத்திரனைப் பறிகொடுத்த தாயார் அந்த குருஸ்வாமிகளின் ஸ் வரூபத்தை கேட்ட பிரகாரம் மனதில் தியானம் செய்து கொண்டு எப்போது அனுக்கிரகம் செய்யப் போகிருர் என்பதை எதிர்பார்த்தவளாக பக்தியுடன் தினந்தோரும் ஆடு இருக்கும் மரத்தின் வழியாக நதிக்குச் சென்று ஸ்நானம் செய்து அந்த மாமரத்தினிடம் வந்து பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து புத்திரரூபமான அனுக்கி ரகம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துத் தினந்தோரும் வாரம் நடந்து கொண்டு வந்தாள்.

பதினுருவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 17.

குருநாதா! ஓடிப்போன கோவிந்தன் பிறகு என்ன செய்தான் என்று அனந்தவைத்தினதர் ஆச்சரியமடைந்து கேட்க அனந்த நாராயணனென்கிற ஸ்தாணுசிவன் சந்தோஷத்துடன், "சொல்லுகிறேன் ஜாக்கிரதையாய்க்கேள்," என்று சொல்லி மேலே சொல்லத் தொடங்கினர்,

தன்னை உதைத்துத்தள்ளிவிட்டு மகா பலத்தோடு குருவின் பின் தொடர்ந்து செல்லுகிற ஆட்டைப் பிடித்து இழுத்துக்கொண்டு போவதற்காக ஆட்களை அழைத்துவர ஓடின கோவிந்தன் அங்குமிங்கும் சுற்றிப்பார்த்து தன்னைச்சேர்ந்த நல்ல பலமுள்ளவர்களான நான்கு வாலிபர்களை அழைத்துக்கொண்டு ஆட்டோடுகூட சாமியார் எங்கே இருக்கிருர் என்று நான்கு பக்கத்திலும் தேடித்திரிந்து கட்டுக்கரையின் வழியாக விசாரித்து வரும்போது சில துஷ்டர்களின் சோதனையால் நடந்த செய்கைகளை விஸ்தாரமாகக் கேள்விப்பட்டவுடன் பெருத்த பயமடைந்து உடல் நடுங்கி "அடேடே, ஐயா; இவர் பெரிய சாமியாரடா அப்பா! இவர் சமீபத்தில் போய் அந்த ஆட்டை இழுத்தோமாகில் நம்மைச் சேர்ந்த எல்லோருக்கும்நாசம் வந்துவிடும். ஆகையால் நாம் கெட்ட எண்ணத்துடன் அவர் சமீபத்திலேயே போகக்கூடாது" என்று நினைத்து தான் அழைத்து வந்தவாலிபர்களைப்பார்த்து, "ஏன் இப்படி என்று கேட்பீர்களானல், முன்னமே எனக்கு செத்த ஆட்டின் கிரயத்துக்காக கட்டுக்கரையின் மண்ணைக் கிள்ளிக் கையில் கொடுத்தார். அந்தமண் ஆட்டின் கிரயம் எவ்வளவோ அவ்வளவு தானிருந்தது. எனக்குப் புத்திவர இதுஒன்றே போதாதா அதுவுமில்லாமல் நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே செத்த ஆட்டையும் பிழைப்பித்துவிட்டாரே. அப்படியிருக்க அதிக ஆசை அதிக நஷ்டம் என்றதுபோல் நமது அதிகஆசையால் விளக்கு வெட்டுப்பூச்சிகள் கனி என்ற பிரமத்தினல் தீபத்தில் விழுவனபோல் நாம் சாமியாரிடத்தில்போய் துஷ்டச்செய்கைகளை ஒன்றும் செய்யக்கூடாது" என்றுபேசிக்கொண்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தான்.

கடைசியாக ஓர் மாத்தடியில் அழகான ஆட்டையும் சத்குருஸ்வாமிகளையும் பார்த்ததும், நடுநடுங்கி பக்தியுடன் தான் அழைத்துவந்த நான்கு வாலிபர்களுடன் கையைக்கூப்பிக் கொண்டு அடிக்கடி பிரதக்ஷண நமஸ்காரங்களைச்செய்து கொண்டு, தன்னிருகன்னங்களிலும் "ஹர ஹர" என்று சொல்லிக் கெட்டியாக அடித்துக்கொண்டு, "நான் செய்த குற்றங்களை மன்னித்து என்னை ரக்ஷிக்கவேண்டும்என்று" பிரார்த்தித்துநின்றான். கோவிந்தனைப்பார்த்த கிருபாநிதியான சத்குருஸ்வாமிகள் "பயப்படாதே" என்று அபயங்கொடுத்து "நீங்கள் வீட்டுக்குச்சென்று சம்சாரம் குழந்தைகளோடு சுகமாயிருப்பீர்கள்" என்று அனுக்கிரகம் செய்தவுடன் கோவிந்தனும் அப்படியே அழைத்துவந்தவர்களோடு மறுபடியும் குருவை நமஸ்கரித்து தன் வீட்டிற்குச் சென்று சுகமாக இருந்தான்.

இது இப்படியிருக்க இந்தத்திருப்பூந்துருத்தியில் நடந்த குருஸ்வாமிகளின் அற்புதமான நிக்ரகானுக்கிரக சரிதையை திருவையாற்று நமது பஞ்சநத சாஸ்திரிகள் கேள்விப்பட்டு ஆனந்தங்கொண்டு நமக்கு அனுக்கிரகம் செய்ய குருநாதன் வந்துவிட்டார் என்று பரபரப்புடனும், சந்தோஷத்துடனும் புறப்பட்டுத் திருப்பூந்துருத்தியின் மாமரங்களின் சமீபத்தில் வந்து ஆடுநிற்கும் மாமரத்தடியில் வீற்றிருக்கும் ஸ்ரீ சத்குருவைத் தரிசித்து அவரை நமஸ்கரித்து மகா பக்தியுடன் திருமழபாடியில் செய்த சிச்ருஷைபோல் இவ்விடத்திலும் குருசமீபத்திலுள்ள இடங்களைப் பரிஷ்கரித்து தீர்த்தத்தினால் சுத்திசெய்து வழக்கம்போல் திருவையார்வந்து உஞ்சவிருத்தியால் வெண்பொங்கல் செய்துகொண்டுபோய் இரண்டு கவளங்கள் கொடுத்துவிட்டு மீதியான பிரசாதத்தைத் தான் புசித்து ஆட்டையும் சம்ரக்ஷித்துக்கொண்டு மகாபக்தியுடன் குரு சிச்ருஷைசெய்து விடியற்காலத்தில் திருவையாற்றிற்கு வருவதும் உடனே போவதுமாக தினந்தோறும் நடந்துவந்தார்.

பஞ்சநத சாஸ்திரிகளிவ்விதம் நடத்திவரும் காலத்தில் ஒரு நாள் புத்திரனை இழந்ததாய் நதியில் ஸ்நானம்செய்து இனனும் கிருபை கிடைக்கவில்லையே என்று மனதில் குரு தியானம் செய்துகொண்டுவரும்காலத்தில் ஆட்டோடும் பஞ்சநத சாஸ்திரிகளோடும்கூட மாமரத்தடியில் ஸ்ரீ சத்குருஸ்வாமிகள்

அவர்களைக்கண்டு தரிசித்தவுடன், இடுப்பிலிருந்த குடத்தைப் பூமியில் வைத்துவிட்டு வெட்டினமரம்போல் பூமியில் திடீரென்று விழுந்து அவருடைய சாரணாவிந்தங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "இவ்வம்சத்துக்கு ஒருவனான என்புத்திரனை கொடிய செய்கையுள்ளவர்களான சில துஷ்டர்களினால் அநியாயமாய் இழந்துவிட்டேன் ஆகையால் என் வம்சம் விருத்தியாகும்படி புத்திரரூபமான அனுக்கிரகத்தைச்செய்து ரக்ஷிக்க வேண்டும்என்று கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருகவிட்டுப்பலவாறு பிரார்த்தித்தாள்.

உடனே கருணாமூர்த்தியான குருஸ்வாமிகள் "பயப்படாதே. அப்படியே அனுக்கிரகிக்கிறேன்" என்று சொல்லி அவள் எழுந்திருந்ததும் கையை நீட்டச்சொல்லி மூன்று மஞ்சள்களை எடுத்து குரு பரம்பரை ஸ்மரணத்தினால் அபிமந்திரணம் செய்து அவள்கையில் கொடுத்து, "இதைத் தேய்த்து நீ ஸ்நானம் செய்துவந்தால் உனக்கு மூன்று மஞ்சள்களுக்கும் மூன்று பிள்ளைகள் பிறக்கும். அதில் மூத்தபிள்ளை பிறக்கும் போது சடையோடுகூடப் பிறக்கும் அப்புத்திரனைப் பிறந்த உடனே இவ்விடத்தில் கொண்டுவந்து விட்டுவிடு. அப்பால் பிறக்கும் இரண்டு குழந்தைகளோடு வம்ச விருத்தியாக நீ சுகித்து வாழ்ந்திருப்பாய்" என்று பூர்ணமான அனுக்கிரகம் செய்தார்.

அப்படி அனுக்கிரகம் செய்த நமது அனந்த பத்மநாப குருஸ்வாமிகளை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து அஞ்சலி பந்தம் செய்துகொண்டு "அப்படியேசெய்கிறேன்" என்று பதில்கூறி மகாசந்தோஷத்துடன் புத்திரனை அடைந்ததாகவே நினைத்துமஞ்சள்களை ஜாக்கிரதையாய் முடிந்து வைத்துக்கொண்டு, குடத்தை எடுத்து இடுப்பில் வைத்து நமது குருவைத் தியானம் செய்துகொண்டு வீட்டுக்கு வந்து தன் புருஷனிடம் தான் பெற்றுவந்த அனுக்கிரகத்தைத் தெரிவிக்க அவனும் வேகமாக ஓடிவந்து அந்த குருமூர்த்தியின் பாதங்களில் நமஸ்கரித்து தன்னால் இயன்ற மட்டும் ஸ்தோத்திரம் செய்து தரிசித்து சந்தோஷத்துடன் வீடுவந்து மனைவியோடு சுகித்திருந்தான். பிறகு அவன் மனைவியும்

அந்த மஞ்சளைப் பூசிக்கொண்டு ஸ்நானம் செய்ய ஆரம்பித்து முதல் கர்ப்பவதியாய் பூர்ண கர்ப்பத்தையடைந்து பத்தாவது மாதத்தில் குருஅனுக்கிரகத்தினால் ஒருபுத்திரனைப் பெற்றாள். அப்புத்திரனை அவர்கள் கவனித்துப் பார்க்கும்போது குருவின் சொற்படி சிற்சில சடைகளோடுகூட இருந்ததால் அவர்கள் மகா சந்தோஷத்தையடைந்தார்கள்.

பிறகு குழந்தை பிறந்த பதினாறுவதுதினத்தில் குருஸ்வாமிகள் லோக உபகாரத்தின்பொருட்டு ஈஸ்வரதரிசனார்த்தம் வீதிசுற்றிக்கொண்டுபோகும்போது குருஸ்வாமிகளின் முன்னேபோகும் ஆடானது குருக்கேதிரும்பினதைப்பார்த்து குருஸ்வாமிகளும் அதன்பின் தொடர்ந்தார். அந்த ஆடு குருவின் அனுக்கிரகத்தினால் சடையோடு புத்திரனை பெற்றவளின் வாசற்படியில் நின்று ஒருதரம் சிலிர்த்து "மே" என்று கர்ச்சித்தவுடன் உள்ளிருந்தவன் கவனியாமல் என்ன சப்தம் என்று பார்க்க ஆட்டையும் குருஸ்வாமிகளையும் பார்த்து பயந்து நடுநடுங்கி குழந்தையை அவரிடம் சேர்ப்பிக்காத அபசாரத்தை நினைந்து குழந்தையை எடுத்து வந்து, தங்களிடம் நான் செய்த அபராதத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று கெஞ்சி, இக்குழந்தையை எங்கே கொண்டு வந்துவிடுகிறது என்று கேட்க, "அந்த மாமரத்தடியில் கொண்டு வந்து விடுவாய்என்று சொல்லித்திரும்பி வீதிசுற்றி ஈஸ்வர தரிசனம் செய்து ஆட்டுடன் மாமரத்தடிக்கு வந்தார்.

அவ்விருவரும் குருசொல்லைக் கேட்டவுடன் அக்குழந்தைக்கு மங்களஸ்நானம் செய்வித்து மஞ்சள் வஸ்திரத்தினால் குழந்தையை அலங்கரித்து எடுத்துக்கொண்டு, குருவின் பாதகாணிக்கையாக சத்குரு சன்னதியில் மாமரத்தடியில் குழந்தையை வைத்துவிட்டு தாய்தகப்பன் இருவரும் பஞ்சனத சாஸ்திரிகளுடன் இருக்கிற குருஸ்வாமிகளைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து குருவின் அனுக்கிரகத்தால் வீடுவந்து சேர்ந்து கிரமப்படி புத்திரர்களையடைந்து குருஸ்வாமிகளை தினந்தோறும் தியானம்செய்து சுகமாக வாசம்செய்துகொண்டிருந்தார்கள்.

மாமரத்தடியிலிருக்கும் அந்தக் குழந்தையின் பசியை அறிந்து அந்தப் பெண்ஆடு பாலைக் கொடுக்கும். வெய்யில் வரும்போது தன்னிழலைக் கொடுக்கும். அழும் சமயத்தில் தான் குதித்தும், முகத்தை அசக்கிக்காட்டியும் விசித்திரமான தொனிகளினாலும் சந்தோஷப்படுத்தியும்வர அக்குழந்தையானது சுகமாய் வளர்ந்து வந்தது.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 18

அனந்த வைத்தியநாதர் இன்னும் என்னநடந்தது என்று கேட்க ஸ்தாணுசிவன், "சொல்லுகிறேன் சாவதானமாய்க்கேள்" என்று சொல்லுகிறார்.

அப்படியிருக்குங்காலத்தில் தேசாதிபதியாயும், தஞ்சை நகரத்திற்குச் சிரோரத்னமாயும்விளங்கின துளஜாஜி மகாராஜரின் இராணி முதுகில் கிளம்பியிருந்த ஸ்போடகமென்னும் மகாரோகத்தினால் சகிக்கமுடியாத உபத்திரவத்தை மூன்று வருஷகாலமாக அனுபவித்துக்கொண்டிருந்தாள். அதைப்பார்த்த அரசன் மனவருத்தங்கொண்டு இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்குங்காலத்தில், "இந்த ராஜ்ஜியத்திற்கு நாம்அதிபதியாயிருந்தும் இந்த சகிக்கமுடியாதஉபத்திரவத்தை மணிமந்திர ஔஷதங்களினால் நிவர்த்திக்கக்கூடிய மகான்கள் நம் இராஜ்ஜியத்தில் ஒருவராவது இல்லையா?" என்று அரசனைப்பார்த்துக்கேட்க, அரசனும் அதைக்கேட்டு அதிகமனவருத்தமடைந்து என்னசெய்யலாம் என்று யோசித்து வெளியில் பார்த்தார். அத்தருணத்தில் ஒரு பிராமணன் அங்கு நின்றுகொண்டிருந்ததைக்கண்டு அவனைக் கூப்பிட்டு உட்காரவைத்து நீங்கள் எந்தவூர், இங்குவந்து நிற்கக் காரணமென்ன? என்று கேட்க, அவர், "நானிருப்பது திருவையார் மகாதரித்ரன் அத்துடன் குடும்பியானபடியால் காலக்ஷேபத்திற்கு கதியில்லாமையாலும், வீட்டில் சம்சாரத்தின் உபத்திரவத்தினாலும் நான் ஹிமாசலமுதல் கன்னியாகுமரிவரை யாத்திரையை

வியாஜமாக்வைத்துக்கொண்டு ஆங்காங்குள்ள மகாராஜாவின் சத்திரங்களில் புசித்துக்கொண்டு ஆங்காங்கு என்னால் சம்பாதிக்கப்பட்ட திரவியங்களை என் மனைவிக்கு அனுப்பிக்கொண்டு வருகிறேன். இப்புவியில் நான் போகாத இடமில்லை. இவ்வளவுதூரம் சுற்றிக்கொண்டு வந்தும் என் தரித்ரம் என்னை விடவில்லை இந்த தஞ்சாவூரில் இந்த அரசன் சந்நதிக்கு வந்தால் என் தரித்ரம் என்னைவிட்டு நீங்கிவிடும் என்ற நிச்சயமான எண்ணத்தினால் ஏதாவது சம்பாதித்துக்கொண்டு போகலாம் என்று வந்தேன்," என்று சொன்னதைக்கேட்டமகாராஜா, "உங்கள் தரித்திரம் உங்களைவிட்டு நீங்கிவிடும் தாங்கள் போயிருந்த இடங்களில் நிக்ரகானுக்ரக சக்தியுடன் கூடிய மகான்கள் யாரேனுமிருக்கிறார்களா? என்று கேட்டார்.

அதற்கு அப்பிராமணன் திருவாதிக்கடுத்த திருப்பூந்துருத்தி என்னும் க்ஷேத்திரத்தில் ஒரு பெரிய மகான் விசித்திரமாயும், அற்புதமாயும், அமானுஷமாயும், அவருடைய செய்கையைக் கேட்க அத்யந்தப் பிரியமுள்ளதாயுமிருக்கிற நிக்ரகானுக்கிரக ரூபமான காரியங்களைச்செய்து மகாகீர்த்தியுடன் சுகமாயிருக்கிறாரென்றும் அவர் செய்கையையும் ஆதிமுதல் விஸ்தாரமாகச் சொல்ல, ராஜா அதைக்கேட்டு சந்தோஷமடைந்து இதைத்தெரிவித்த குடும்பியான பிராமணனுக்கு எதேஷ்டமான திரவியத்தைக் கொடுத்து அவனுடைய தரித்திரத்தை நீக்கி சந்தோஷத்துடன் "ஹே! பிராமணோத்தமா தாங்கள் மகானின் கதையைப் பேசினமாத்திரத்தில் வெகு நாளாக இருந்த உம்முடைய தரித்திரம் நீங்கி விட்டது, அம்மகானுடைய கதையினாலே தாங்களும் தனவானாக ஆய்விட்டீர்கள். நான் பரம திருப்தனாகவும், தன்யனாகவும் ஆய்விட்டேன்;" என்றுசொல்லி அந்தபிராமணோத்தமரைவிடைகொடுத்தனுப்பினான். பிறகு அந்தப்பிராமணன் சத்குருவின் நினைப்பினாலேயும் கதா பிரசங்கத்தினாலேயும் இவ்வளவு தனம் கிடைத்ததே. அவருடைய தரிசனமும் அனுக்கிரகமும் ஏற்பட்டால் நமக்கு இன்னும் என்னதான் கிடைக்காது, எல்லாம் கிடைக்கும் என்று மனதில் எண்ணி, நானும் அந்த ராஜாவும் அம்மகானுடைய கதையைப்பேசினதாலேயே இவ்வளவு பெருமை உண்டானதே என்ற சந்தோஷத்தோடு அரசனிடம் விடை

பெற்று வீடுவந்துசேர்ந்து பத்தினி புத்திரர்களுடன் எதேஷ்டமான ஐசுவரியங்களோடு கூட சுகித்திருந்தான்.

பிறகு அரசன் தன் ராஜ்யத்தில் அதிசமீபத்தில் வந்திருக்கும் மகானை இத்தனைநாளாக தரிசிக்காமலிருந்தது மிகவும் தெரியாத்தனம். இனி ஒரு நிமிழங்கூட தாமதியாமல் போக வேண்டும் என்று நினைத்துத் தன் மனைவியிடம் தெருவித்து தன் சதுரங்க சேனைகளோடு மனைவியையும் அழைத்துக் கொண்டு மந்திரிகளோடு கூடப்புறப்பட்டு திருப்பூந்துருத்தியின்சமீபம் வந்தான். பெரியோர்களிடம்போகவேண்டுமானால் சேனைகளோடும், வாகனத்தோடும், டாம்பீகமாகப் போகக் கூடாது என்ற சாஸ்திரத்தையறிந்து தன்னுடன் வந்தஎல்லாச் சேனைகளையும் நிருத்திவிட்டுத் தான் மந்திரியுடன் பாதசாரியாககுரு சமீபம் வந்து மாமரத்தின் அடியில் வீற்றிருக்கும் அஜமென்ன, பஞ்சனத சாஸ்திரிகளென்ன, சடைப்பிள்ளையென்ன இவர்களோடு ஸ்ரீ அனந்த பத்மநாபநாராயண குருஸ்வாமிகளைப் பார்த்து பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து பார்ச்வத்தில் வணக்கத்துடன் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு நின்றான். அப்பொழுது குருசுவாமிகள் அவனை அறிந்து, "நீயார்? எங்கு வந்தாய்?" என்று கேட்க அவ்வரசன், "என்னை இந்த ராஜ்ஜியத்திற்கு அதிபதி யென்று சொல்லுவார்கள். இவ்விடத்தில் மகான் வந்திருப்பதைத்தெரிந்துகொண்டுதரிசித்து அனுக்கிறகம் பெற வேண்டுமென்று வந்தேன்" என்று சொன்னான் அதைசத்குருஸ்வாமிகள் கேட்டு, உன் சமாசாரம் முழுவதும் அறிந்து கொண்டேன். மூன்று வருஷகாலமாய் முதுகில் ஸ்போடகம் என்ற மகாரோகத்தினால் அவஸ்த்தைப்படும் உன் சம்சாரத்தை இங்கு அழைத்துவா" என்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் நடுநடுங்கி மகாபயத்தோடு, இது என்ன ஆச்சரியம். நம்முடைய சமாசாரம் முழுவதும் நேரிலிருந்து பார்த்தது போல் சொல்லுகிறாரே யென்று நினைத்து இவர் ஈசுவரனாகத்தானிருக்க வேண்டும் என்று ஆச்சர்யமடைந்து நமது காரியம் அனுகூலமாய் விட்டது என்றுமகாசந்தோஷத்தில் மூழ்கி பயபக்திசிரத்தையோடு வணக்கமாய் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு குருஆக்ஞையின்

பேரில் பனிவியைத் தூக்கிக்கொண்டு வாச்சொல்லிகுரு வின்சன்னதியில் வைத்தான். பிறகு நமதுகுருஸ்வாமிகள் கிருபை கூர்ந்து தன்கண்ணால் பார்த்து விபூதியை எடுத்து குரு பரம்பரையைஸ்மரித்து அவளுடைய தேகமாத்யந்தப்போட்டு விட்டு,“ இந்த மகாரோகமானது உன்னிடம்விட்டு நீங்கிவிட்டது. எழுந்திரு” என்று சொன்னார்.

பிறகு அந்த அரசியும், அந்த மகாரோகம் வருவதற்கு முன் எப்படியிருந்தாளோ அதைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு ரூபலாவண்யத்தோடும் புஷ்டியோடும் கூடிய சரீரத்துடன் பரபரப்புடன் எழுந்திருந்து அஞ்சலிபந்தம் செய்துகொண்டு மகாசந்தோஷத்தில் மூழ்கி குருவிடத்தில் உறுதியானபக்தியுடன் அவரை பதினொரு பிரதக்ஷணம் செய்து அநேக நமஸ்காரங்களைச்செய்து, “ஹே குருநாதா! நான் இதுவரையில் அனுபவித்த கஷ்டமானது இப்படிப் பட்டதென்று சொல்ல முடியாது. இப்பவும் அதை நினைத்தாலும் சரீரமுழுவதும் நடுக்குகிறது. ஒருவன் வெண்ணையை கையில்வைத்துக்கொண்டு நெய்க்குஅலைந்து அவஸ்தைபடுவதுபோல்நமதுராஜ்ஜியத்திற்கு அதிசமீபத்தில் ஈச்வரரூபியான உள்ளங்கையிலிருக்கும் நெல்லிக்கனி போல் தாங்களாகிய மகானை வைத்துக்கொண்டு இவ்வளவுகாலம் கஷ்டப்பட்டது என் காலவித்தியாசமே தவிற வேறில்லை. ஆனால் மகாராஜாவாக இருந்தாலும் மகாதரித்திரனாயிருந்தாலும் எதுவரையில் கஷ்டபடவேண்டுமோ அதுவரையில் கஷ்டப்பட்டுத்தான் தீரவேண்டும். நிவர்த்தியாகும் காலத்தில்தான் தாங்களைப்போன்ற மகான்களுடைய தரிசனம் ஏற்படும். தரிசனமாத்திரத்தினாலே சகலகஷ்டங்களும்நிவர்த்தியாய் அளவிடக்கூடாததான பரமசௌபாக்கியமும் க்ஷேமமும் உண்டாய்விடும். ஒருவராலும் நீக்க முடியாததான எப்பேர்ப்பட்ட மகா கஷ்டமாக இருந்தாலும்கூட மகான்களுடைய தரிசனத்தினாலே எல்லாக்கஷ்டங்களும் நிவர்த்தியாகும். மகானுடைய தரிசனமானது உலகத்தில் எந்த விதமான காரியத்தைத்தான் செய்யாது. ஆகாயம் பூமியாயும் பூமிஆகாயமாயும் பர்வதம் துரும்பாயும், துரும்பு பர்வதமாயும ஜலம் மணலாயும், மணல் ஜலமாயும் செய்யப்படவில்லையா? மகான்களுடைய தரிசனமானது எல்லாக்காரியங்களையும் செ

ய்யத்தான் செய்யும். கொஞ்சமேனும் சந்தேகமில்லை" என்று பலவாராக ஸ்தோத்திரம்செய்து "அதற்குசாக்ஷியாக நானே இருந்து அனுபவித்தேன். கிருபாமூர்த்தியான ஹே! குருநாதா! எனக்குப்பாதி விருத்தியதர்மத்தில் தீவிரபுத்தியும் என் பர்த்தாவுக்கும் எனக்கும் தங்கள் சரணாரவிந்தங்களில் பரமபக்தியும் க்ஷேமமும் உண்டாகும்படி எனக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும் என்றுபலவாராகப் பிரார்த்தித்துக்கொண்டு தனது பர்த்தாவான ராஜாவின் பக்கத்தில் வணக்கத்தோடு நின்றாள்.

இந்த ஆச்சரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அரசன் சத்குருவை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலிபந்தம் செய்துகொண்டு, "இந்த சன்னிதானத்திற்கு ஏதாவது என் அடையாள கைங்கர்யமாக இருக்கவேண்டும் என்று அபேக்ஷிக்கிறேன். அதைமருக்காமல் அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். நமது குருஸ்வாமிகள், "ஒருபதார்த்தத்தினாலும் எனக்காவது ஒன்றுமில்லை. ஆகையால் எனக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் ராஜ்யத்திற்குச் சென்று நீதியாக ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டு சுகமாக இருங்கள்" என்று சொன்னார்.

அவ்வசனத்தைக் கேட்ட அரசன், "தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. எப்படியாவது என்னை அனுக்கிரகம்செய்ய வேண்டும்" என்று மறுபடியும் பிரார்த்திக்க நமது குருஸ்வாமிகள், "ஆனால் அப்படி உனக்குஇஷ்டமாயிருந்தால் இந்த ஆடு சுற்றிவருகிற இடத்தைக் கொடுத்தால் போதும்" என்று சொல்லி அந்த ஆட்டைத்தன் கையினால் தட்டிக்கொடுத்தார் அவ்வஜமானது தட்டினவுடன் நான்கு வேலி நிலத்தைச் சுற்றிக்கொண்டு வந்தது. ஆட்டின் குளம்படி தோறும் முளையடித்து விடும்படி அரசன் உத்திரவிட அப்படியே முளையடிக்கப்பட்டது. உடனே அரசன் சத் குருவைப்பார்த்து "இதை யார் பேரில் சிகா செய்கிறது."; என்று கேட்க அதற்கு குருஸ்வாமிகள் "இந்த பஞ்சநத சாஸ்திரிகளுக்கு இரண்டு வேலியும், சடைச்சாமியாருக்கு இரண்டு வேலியும் கொடுத்து விடுங்கள் என்று" சொன்னார் அரசனும் அப்படி

யேசெய்கிறேன் என்று சொல்லிவிட்டு, "தங்களுக்கு ஒன்றும் இல்லையே" என்று பிரார்த்தித்தான் சத்குருஸ்வாமிகள், "அப்படியானால் நான் இவ்விடத்திலேயே சமாதியிருக்கலாமென்று நினைத்திருக்கிறேன். அதற்கு எனக்கு இருப்பிடமான சமாதிக்கு யோக்யமான ஓர்இடம் தயார் செய்துவிடு," என்று ஆக்ஞாபித்தார்.

பிறகு அவ்வாசன் மகா சந்தோஷத்துடன் சமாதிக்கு யோக்கியமான கர்ப்பகிரகமும், அர்த்தமண்டபம், மகா மண்டபம், பிராகாரம் முதலானவைகளும் கோபுரங்களோடு கூட வெகு அழகான ஓர் ஆலயத்தை நிர்மாணஞ்செய்து அபிஷேக சஞர்த்தம் அமிர்தத்துக்கொப்பான தீர்த்த முள்ள ஓர் கூபத்தையும் கர்ப்ப கிரகத்து வாயு மூலையில் நிர்மாணம் செய்து குருவினிடம், "இவைகளைத்தவிர இன்னும் என்ன ஆக்ஞை" என்று கைகட்டி வாய்பொத்திப் பிரார்த்திக்கும் போது சடையோடு பிறந்த பிள்ளையான சிதம்பர நாதன் குருவைப்பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து, "மாதா பிதாவான ஹே சத்குருவே! எனக்கு இந்த இரண்டுவேலி நிலமும் வேண்டாம். இவ் ஆலயத்தின் தீபம் முதலான கைங்கர்யங்களுக்கு உபயோகமாயிருக்கிறவைகளை நான் பரிபாலனம் செய்து அனுபவித்து வருகிறேன். இதைத்தாங்கள் மறுக்காமல் என்னை அனுக்கிரகித்து ராஜாவுக்கு அப்படியே செய்யும்படி உத்திரவு கொடுக்க வேண்டும்" என்று பலவாறு பிரார்த்தித்தான்.

உடனே சத்குருவும் இவன் வைராக்கியத்தைப் பார்த்து சந்தோஷித்து ராஜாவைப்பார்த்து ஆலயத்தின் பேரில் சிகா செய்யும்படிஉத்திரவுகொடுக்க அவ்வரசனும் இரண்டுவேலி நிலத்தையும் ஆலயத்திற்கே சிகா செய்து இன்னும் என்ன செய்யவேண்டு மென்று வணக்கத்தோடுநின்றான். அப்பொழுது குரு அரசனைப்பார்த்து வருகிற மாசி மாதம்சுக்கிலபக்ஷம் குருவாரம் அஷ்டமிகிருத்திகை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பகல் பதினைந்துநாழிகை வேளையில் அபிஜின் முகூர்த்தத்தில் யோகசமாதியில்உட்காருவதாக உத்தேசமிருப்பதால் அன்று தினம்வந்து பூஜை நடத்தி தரிசித்துப்போகலாமென்று சொல்

லி அவ்வரசனை அனுக்கிரகித்து விடைகொடுத்தனுப்பினார் அவ்வரசனும் பத்தி சமேதராய் குருவை நமஸ்கரித்து மகாசந்தோஷத்துடன் மந்திரிகளோடும் சதுரங்கசேனைகளைஅழைத்துக்கொண்டு தஞ்சை நகரத்தின் அரண்மனைவந்தடைந்து தன் மனைவியுடன் கூட சுகமாக குரு பக்தியுடன் ராஜ்ஜியத்தைநீதியாக நடத்திக் கொண்டு வாழ்ந்திருந்தார்கள்.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 19.

அனந்தவைத்தினாதா! நமது பஞ்சனத சாஸ்திரிகள் மகிமையைச் சொல்லுகிறேன் சாவதானமனதுடன் கேள்.

பிறகு நமது பஞ்சனத சாஸ்திரியள் சத்குருஸ்வாமிகளைப்பார்த்து நமஸ்கரித்து, "ராஜாவால் கொடுக்கப்பட்ட இந்த ஸ்தலமானது எனக்கு அபேக்ஷை இல்லை. இது ஆலயத்திற்கே இருக்கட்டும். என்னைக் கிருதார்த்தனாக ஆகும்படி அனுக்கிரகிக்க வேண்டும்," என்று பலவாராக பிரார்த்திக்கும் போது, சத்குருஸ்வாமிகள் இவனுக்கு வைராக்கியம் நன்றாக இருக்கிறது என்று சந்தோஷித்து, "நான் கொடுத்தது கொடுத்தது தான் அதைநீ அவசியம் வைத்துக்கொள்ளவேண்டியது தான்" என்று சொல்லிவிட்டு இந்த கர்பக்கிரஹத்தின் மத்தியில் சமாதியிருக்க யோக்யமாக சதுரச்ராகிருதியாய் ஒரு குழியை உண்டு பண்ணு" என்று சொல்லுங் காலத்தில் அப்படியேசெய்கிறேன் என்று சொல்லி ஸ்நானம் செய்து சுசியாய் விதிப்படி மந்திரங்களினால் உதங் முகமாக உட்கார்ந்து அகோக்ஷணம் முதலானதும் செய்து குழியைத் தோண்டுங் காலத்தில் ஒரு ஸ்படிக லிங்கமும் லக்ஷ்மீநரசிம்ம மூர்த்தமான ஒரு சாளிக்கிராம சிலையும் அகப்பட்டது. குழியைப்பறித்து சிலாக்கியமாக முடித்துவிட்டு அந்தசாளிக்கிராம ஸ்படிக லிங்கங்களை எடுத்துகொண்டு வந்து குருவின் சமீபத்தில் வைத்து அவர் சரணாரவிந்தங்களில் சாஷ்டங்கமாக நமஸ்கரித்து சமர்திக்காக கனனம் செய்யும்போது இவ்விரண்டும்

அகப்பட்டது. என்று தெரிவித்து தனக்கு அனுக்ரகிக்க வேண்டுமென்று மறுபடியும் பிரார்த்தித்தார்,

ஸ்ரீ மத் சத்குரு இவர் பிரார்த்தனையைக் கேட்டு இவன் இத்தனை சோதனைகளுக்கும் மனதில் கொஞ்சம் கூட வெறுப்பில்லாமல் நம்மை இப்போது தான் வந்தடைந்தது போல் உறுதியான பக்தியோடும் நமக்கு குருசிச்ருஷை செய்யும் படியான பாக்கியம் கிடைத்ததென்று மகா சந்தோஷத்தோடு பணிவிடை செய்வதைப் பார்த்து உள்ளம் மகிழ்ந்து புன்னகை யுடன், பயப்படாதே" என்று அபயம் கொடுத்து ஆலயத்திற்குக் கீழ்புறத்திலுள்ள தடாகத்தில் பரிசுத்தமான கங்கா நதிபுண்ணிய தீர்த்தங்களை ஆவிர்ப்பவிக்கச்செய்து தான் குரு பரம்பரையில் ஆதி குருவான ஸ்ரீ ஹரதத்தாசாரியாளையும், அவாளால் உபாஸ்யமான அக்னீஸ்வர மகாலிங்க மூர்த்தியைத் தியானம் செய்து, "இப்புஷ்கரணீ தீர்த்தமானது பாபங்கள் என்ன மகாரோகங்கள் என்ன புத்திரபிரதி பந்தகாதி தோஷங்களென்ன இவைகளைப் போக்கடிக்கிற விஷயத்தில் அக்கினியாகவே இருக்கட்டும் என்று ஆக்ஞாபித்து எவரெவர்களுக்கு எதெது இஷ்டமோ அதை தக்கொடுக்கிற விஷயத்தில் சிந்தாமணி கல்பகவிருக்ஷம் காமதேனு இவைகளாகவே இருக்கட்டும் என்றும் இது முதல் அக்னி தீர்த்தம் என்ற பெயர் வழங்கட்டும் என்றும் அனுக்கிரகித்து நமதுபஞ்சனத சாஸ்திரிகளை இவ்வக்னி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யச் சொல்லித் தன்கையில் தீர்த்தத்தை எடுத்து குருப்ரம்பரையினால் அபிமந்தரித்து சிரசில் புரோக்ஷித்து விபூதியை எடுத்து அவர்மேல் பிரக்ஷேபித்து தன் நேத்திரங்களினால் வீக்ஷா தீக்ஷைசெய்து பரம்பரையாக வந்த அஜபாகல் பங்கள் முதலான மகா மந்திரங்களையும் ஹரதத்தசந்தியாவந்தன பூஜாவிதானங்களையும் உபதேசித்து இந்த சாளிக்கிராம ஸ்படிகலிங்கங்களையும் கொடுத்து "இவைகளை ஹரதத்த சந்தியாவந்தன கல்ப பூஜாவிதானப்படி பூஜை செய்து அந்தப்பூஜா தீர்த்தத்தை எவரெவர்களுக்கு எப்படியெப்படியாக வேண்டுமோ அப்படியாகவேண்டுமென்று குரு பரம்பரையின் ஸ்மரணத்தினால் அபிமந்திரணம செய்து முகத்தில் புரோக்ஷித்து ப்ராசனமும் செய்துவைத்தால் எப்பேர்ப்பட்ட காரியமாக இருந்தபோதிலும் அனுகூல

மாகிவிடும்" என்றும் "இவைகளை சித்திசெய்து கிருதார்த்தனாக ஆய்விடுவாய்" என்றும் பூஜா தீர்த்தத்தினால் சமஸ்த ஜனங்களுக்கும் சகல ரோகபரி காரம்முதலான காரியங்களையும் சித்திசெய்து வைக்கப்போகிற படியால் ஜனங்களினால் "தீர்த்தம் பஞ்சநத சாஸ்திரிகள்" என்ற பெயரோடு வழங்கப் போகிறாய்" என்றும பூர்ணமாக அனுக்கிரகித்துவிட்டு வருகிற வருஷம் மாசி மாதம் சுக்லபக்ஷம் அஷ்டமி குருவாரம் கிருத்திகா நக்ஷத்திரம் அபிஜின் முகூர்த்தத்தில்நான்ஜீவனோடுயோகசமாதியில் உட்காருவதாக நிச்சயித்திருப்பதால் சங்கரன் முதலான நமது வெகு சிஷ்யர்களோடு குப்த சிவன்என்ற சிஷ்யன் வருவான். அவனோடுகூட மூடுபாறையால்மூடி சிரஸ்தானத்தில் சமாதி வேதியில் பூஜை செய்து விடுங்கள்" என்று ஆக்ஞாபித்தார்.

அப்படியே நமது பஞ்சநதி சாஸ்திரிகள் சத்குருவால் செய்யப்பட்ட அனுக்கிறகத்தைப் பூர்ணமாகப் பெற்றுக் கொண்டு நாம் கிருதார்த்தனாக ஆய்விட்டோம் என்று மகா சந்தோஷ சாகரத்தில் மூழ்கி ஆனந்தபாஷ்பத்தை பெருக விட்டு சந்தோஷ அதிகத்தினால் தழதழத்த கண்டத்தோடு தன் குருவை அநேகதடவை ஸ்துதி செய்துகொண்டு ஆனந்த நர்த்தனம் செய்துகொண்டு பிரதக்ஷண நமஸ்காரங்களை அநேகதடவைசெய்து அஞ்சலிபந்தம்செய்து கொண்டு குருவின்வலதுபார்சுவத்தில்நின்று வெகுவினயத்துடன் லோகக்ஷேமத்தின்பொருட்டு குருவிடத்தில்பிரார்த்தனை செய்தார்.

"அகண்டசச்சிதானந்த கனப்பிரகாசவடிவே? ஹிருதயத்தில் விளங்கும் ஆத்மப்பொருளான பரப்பிரும்மஸ்வரூபமே, லோகரக்ஷணார்த்தம் மூர்த்தீகரித்துவந்த ஹே சத்குரோ. உலகத்தில் ஜனங்கள் ஜென்மாந்தர்யத்தில் செய்திருக்கும் பாவங்களினால் புத்திரசந்தான மில்லாதவர்களும் பிறந்து இறக்கும் துர்ப்பாக்கியத்தை உடையவர்களும் தாரித்திரியத்தினால் வருந்துபவர்களும் க்ஷய, அபஸ்மார, குஷ்ட, குன்ம, பாண்டு, காமிலா, உன்மாதி நேத்திரரோக சிரோபாதாகர்ணரோக, கிரந்திரோக, சூலரோக, சர்வமகா ரோகங்களினால் பீடிக்கப்பட்டவர்களும் பூத, பிரேத, பிசா

பிரும்மராக்ஷஸவேதாள கூச்மாண்ட, யக்ஷ, யமதூத, சாகினி டாகினி, மோகினி ரக்தகிருக, ருத்ரக்ரஹ, துஸ்தானஸ்தித நவக்கிரஹதோஷ பரகிருத மந்திர தந்திரயந்திர ஆபிசார கிருத்திய ஏவல் பில்லி சூன்யம் முதலான சர்வ க்ஷுத்ர துரிதங்களினாலும்மிகவும் கஷ்டப்படுகிறவர்ளுமான சமஸ்த ஜனங்களின் பாபரூபங்களான சர்வ கஷ்டங்களும் நிவர்த்தியாகும்படியாகவும் அரோக திடகாத்திராளாயும் தீர்க்காயுஷ்மான்களாயும் ஜன்மவந்தியை காகவந்தியை கதலிவந்தியை, மிருத வந்தியை மிருதபிரஜா வந்தியை பூதவந்தியை ஸ்ராவவந்தியை முதலான சர்வ வந்தியைகளுக்கும் புத்திர சந்தானமுண்டாகும்படிக்கும் தரித்திரர்களுக்கும் யதேஷ்டமான ஐசுவரியம் உண்டாகும் படிக்கும் தங்கள் தரிசனத்தை விரும்புவோர்க்கும் ஜோதிமயமான பிரும்மஸ்வரூபமாய் ஜீவசமாதியில் விளங்கப்போகிற தங்களுடைய இந்த திவ்ய ஸ்வரூபத்தை தரிசிக்கும் படியாய், இன்னும் வாதி பிரதிவாதிகளிடமிருந்து ராஜநியாய சபையில் வியவகாரத்திலிருந்து ஜயமடையும் படியாகவும் இன்னும் எந்தெந்த இஷ்டங்களை விரும்புகிறார்களோ அந்த மனோபீஷ்டங்கள் நிறைவேறும்படியாயும் எந்தவிருதரூபமான புண்யகர்மாக்களைச் செய்தால் கிழே நான் தங்களைப் பிரார்த்தித்த பிரகாரம் சர்வஜனங்களும் பரிபூர்ணமான பலத்தை அடைவார்களோ அப்பேர்பட்ட விருதருபமான புண்ணியசெய்கைகளை லோகோபகாரத்தின் பொருட்டு எனக்கு உபதேசித்து பூர்ணமாக அனுக்கிரகிக்கும்படி பிரார்த்திக்கிறேன்" என்று பலவாராக வேண்டினார்.

பத்தொன்பதாவது அத்தியாய முற்றிற்று.

## அத்தியாயம் 20.

"அனந்தவைத்தியநாதா! உலகதன்மையின் பொருட்டு குருவின் தயையான அனுக்கிரகத்தைக்கேள்" என்று ஸ்தாணு சிவன் சொல்லுகின்றார்.

கருணாநிதியான நமது சத்குரு மகாசந்தோஷமடைந்து சிஷ்யனான பஞ்சநதசாஸ்திரிகளைப் பார்த்து "நீகேட்ட பிரச்

ளம் மிகுந்த சிலாக்கியமாயும், லோகோபகாரமாயும், சிரேயஸ்கரமாயும், சாதுர் வர்ண்யமான சமஸ்தஜனங்களுக்கும் க்ஷேமத்தை உண்டுபண்ணுவதாயுமிருப்பதால் அவைகளை அடையும்படியான பிரகாரங்களைச் சொல்லுகின்றேன். சாவதானத்துடன் கேள்," என்று ஸ்ரீமத் அனந்தபத்மநாப நாராயண குருஸ்வாமிகள் சொல்லுகிறார்.

புத்திரனை விரும்புகிறவர்களும், விவாகத்தை விரும்புகிறவர்களும் 11 குருவாரம் சுசியாய் பக்தி சிரத்தையோடு நமது சமீபம் வந்து சமஸ்த துரிதங்களென்ன, பாபங்களென்ன, ரோகாதிகளென்ன, இவைகளைப் போக்கடித்து சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடிய இந்த பரிசுத்தமான அக்னி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஆலயத்துள் வந்து புருஷர்கள் சன்னதியில் 8அங்கங்களும் படும்படியாய் பூமியில் ஸாஷ்டாங்கமாய் 11 நமஸ்காரங்கள் செய்து 3பிரதக்ஷிணம் 3அடிபிரதக்ஷிணம், 3 அங்கபிரதக்ஷிணம், 2பிரதக்ஷணமுகமாக 11 பிரதக்ஷணங்கள் செய்து மறுபடியும் முன்போல் சாஷ்டாங்கமாய் 11நமஸ்காரங்கள் செய்யவேண்டும், ஸதிரீகள் செய்யவேண்டியவிதி 11 நமஸ்காரம்செய்து பின்பு 11பிரதக்ஷணமும் 11 அடிப்பிரதக்ஷிணமும் செய்து மறுபடியும் 11நமஸ்காரம் செய்யவேண்டும். புருஷஜனமென்ன ஸ்திரீஜனமென்ன இவர்கள் எல்லோரும் நாளிகேர பூர்ண பலத்துடன் தரிசனம் செய்து இஷ்டத்தைப்பிரார்த்தித்து 3பிரதக்ஷிணங்களும் 5நமஸ்காரங்களும் செய்து வருபவர்களுக்கு ஜென்மவந்தியாதி ஸர்வ வந்தியைகளும் நிவர்த்தியாகி புத்திரபாக்கியத்தை யடைந்து சுகித்திருப்பார்கள் விவாகத்தைவிரும்புகிறவர்களும் இவ்விதமே பிரார்த்தனை செய்தால் விவாகமாகும், தனத்தை விருப்புகிறவர்களும் இவ்விதமே 22 குருவாரம் பக்திசிரத்தையுடன் செய்தால் தனவிருத்தியையடைவார்கள். வித்தையைவிரும்புகிறவர்களும் மேற்சொல்லியபடி 22குருவாரம் பக்திசிரத்தையுடன் செய்தால் வித்வானாவார்கள். தீர்காயுளை விரும்புகிறவர்களும் டன் சொல்லியபடி 22குருவாரம்செய்தால் தீர்காயுளை அடைவார்கள். க்ஷயரோகம், அபஸ்மாரரோகம், 18குஷ்டரோகங்களும், சுவாசம், காசம், உன்மாதக்கிரந்தி, நேத்ர ரோக குன்ம பாண்டு முதலான மகாரோகங்களுள்ளவர்களும்

முன்னமே சொல்லியபடி 2மண்டலம் 90 நாட்கள் தொடர்ச்சியாய் பக்தி சிரத்தையுடன் நடத்திவருபவர்களுக்கு கர்மரோகமான கீழேசொல்லிய மகாரோகங்களும் நிவர்த்தியாகி அரோகதிடகாத்திரர்களாக இருப்பார்கள். ஏவல் பில்லி சூன்யம், பூதப்பிரேத, பிசாச பிரும்மராக்ஷஸவேதாள, கூச்மாண்டாதி ரக்தக்ரக, துரூரக்ரக துஷ்தானஸ்தித நவக்கிரகாதிரூபமான ஸர்வக்ஷுத்ரக்ரஹ பாதையுடையவர்களும் முன்சொன்னபடி பிரார்த்தனை செய்து பக்திசிரத்தையுடன் 2மண்டலம் செய்துவருபவர்களுக்கு கீழேசொல்லிய சர்வ பாதைகளும் இன்னும் இதில் சொல்லப்படாததான சர்வரோகங்களும் சர்வக்ரகபாதைகளும் நிவர்த்தியாகி சௌக்கியத்தை அடைவார்கள் முன் சொன்ன பிரகாரம் ஒருமண்டலம் 45 நாட்கள் பக்திசிரத்தையுடன் நடப்பவர்களின் சகல ரோகங்களும் சகல துரிதங்களும் நீங்கி சகல சௌக்கியத்துடன் சுகித்திருப்பார்கள்:

முன் சொன்னபடி நடப்பவர்களில் ஒரே தடவையில் பூர்ணமான அனுக்கிரகத்தை அடையாதவர்கள் அனுகூலமாகிறவரையில் முன் சொல்லியபடி பக்தி சிரத்தையுடன் 2மண்டலம் 3மண்டலம் 4மண்டலம் வரையில் உறுதியாகச் செய்தால் மேலேசொன்ன சகல ரோகங்களும் நிவர்த்தியாய் பூரணமான அனுக்கிரகத்தை நிச்சயமடைந்து அரோகதிடகாத்திரர்களாய் சுகித்திருப்பார்கள். என் தரிசனம் நேரில்விரும்புவோர்கள் ஒருமண்டலம் அக்னி தீர்த்தத்தில் மூன்று காலமும் ஸ்நானம்செய்து முன் சொன்ன பிரகாரம் பிரதக்ஷிணநமஸ்கார தரிசனங்களை யதாவிதியாய் மூன்றுகாலங்களிலும் செய்துகொண்டு அபரான்னத்தில் எனக்கு க்ஷீரத்தை நிவேதனம் செய்து, அதேக்ஷீரத்தை ஒரேவேளையில் பிராசனம் செய்து கொண்டு நித்திரையை நீக்கி தியானத்தோடு சன்னிதானத்திலேயே கீழ்சொன்ன ஒருமண்டலம் உறுதியாய் வசிப்பவர்கள் எந்தக்காலத்திலும் நிச்சயமாய்என்னை தரிசிக்கலா மென்றும் மேலும் எனக்கு ப்ரீதிகரமாயும் மாத்ருகாக்ஷரபூஷிதமாயும் அதாவது அகாராதி க்ஷகாராந்தமாயுள்ள எனது அஷ்டோத்திரத்தால் யாரார்என்னைஸ்தோத்ரம் செய்கிறார்களோ அர்ச்சனைசெய்கிறார்களோ தினந்தோறும் யார் இந்தஅஷ்டோத்திரத்தை

பக்திசிரத்தையுடன் பாராயணம்செய்கிறார்களோ அவர்கள் அபமிருத்யு நவக்ரஹதோஷங்கள் ரணம் அதாவது கடன் தாரித்திரியம் இன்னும் பலவிதமான ரோகங்கள் பீடை முதலான கஷ்டங்கள் இவைகளை போக்கடித்துக்கொண்டு அரோகதிருடகாத்திரர்களாயும் தீர்காயுள் உள்ளவர்களாயும் தனதான்யபுத்ரமித்ரகளத்ராதிகளான சகலசம்பத்தையும் இஷ்டசித்தியையும் பெற்று எனது அனுக்ரகத்தால் மோக்ஷசாம்ராஜ்யத்தையும் அடைவார்கள் என்று உபதேசித்து அனுக்கிரகம் செய்தார்.

உலகநன்மையின் பொருட்டு உபதேசமான அனுக்கிரகம்பெற்ற நமது பஞ்சநதீஸ்வரர் மகா சந்தோஷமடைந்து குருவினது உபதேசத்தின் பிரகாரம் பக்தி சிரத்தையாக இடைவிடாமல் குரு சிச்ருஷையோடு குருவால் உபதேசிக்கப்பட்ட அஜபாகல்பம்: வாஞ்சாகல்பம், ஹாதத்தசந்தியாவந்தன கல்பம், மகாவித்யாகல்பம், இவைகளை குருசன்னிதானத்திலேயே யதாவிதியாக அனுஷ்டித்து வருங்காலத்தில் குருவினால் குறிப்பிட்ட மாசிமாதம் சுக்கிலபக்ஷம் அஷ்டமி குருவாரம் கிருத்திகா நக்ஷத்திரம் கூடிய சுபதினமானது வந்துசேர்ந்தது. குருவின் உத்திரவுப்படி பிரதம சிஷ்யனான குப்தசிவனும் குருவின் மற்றசங்கரன் முதலான சிஷ்யப்பிரசிஷ்யாளோடு சத்குரு ஜீவனோடு சமாதியிலுட்காருகிற மகோத்ஸவத்தை ஞானதிருஷ்டியினாலறிந்து குருவின் சமீபத்தில் பூஜார்தம் வந்து சேர்ந்தார்கள் பிறகு தஞ்சைநகரத்தையாளும் அரசனும் தன்னைச்சேர்ந்த ஆடல்பாடல் முதலான பரிவார சைன்யத்துடன்சுற்றிலுமுள்ள கிருமங்களிலுள்ள மகாஜனங்களும் அவர்களைச்சேர்ந்த புத்ர மித்ர களத்திராதிகளோடும் நமக்கு எல்லாருக்கும் க்ஷேமமுண்டாகப் போகிற தென்றசந்தோஷத்தோடும் கூட சத்குருதரிசனம் செய்ய அரசனுடன் வந்துசேர்ந்தார்கள்.

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று

## அத்தியாயம் 21.

ஹே அனந்தவைத்தினாதா! விசித்திரமான நமது குருவினது மகிமையைக்கேள்.

அத்தருணத்தில்சமீபத்திலிருந்த அஜமானது சத்குருவை பிரதக்ஷிணநமஸ்காரஞ்செய்து," அடியேனுக்குத் தங்கள் சமீபத்திலேயே எப்பொழுதும் தரிசித்துக்கொண்டிருக்கும் படியாயும், கிருதார்த்தனுதும் படியாயும் அனுக்கிரகம் செய்து ரக்ஷிக்க வேண்டும்" என்று குருசரணாரவிந்தத்தில் தலையைப் புரட்டுகிறதும், எழுந்திருந்து தன் முன்னங்காலை தன் சிரத்துக்கு மேல் சேர்த்துக்கொள்ளுகிறதும், பிறகு இரண்டு முன்னங்கால்களினுலும் குருவின் பாதத்தை தொடுகிறதும், மறுபடியும் தன் சிரசை குருவின் பாதத்தில் புரட்டுகிறதும் அனுக்ரகம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டுவலதுபார்சுவத்தில் நின்றிருக்கும் அஜத்தை சத்குரு பார்த்து மந்தகாசம் செய்து சந்தோஷத்துடன் கிருதார்தமாக ஆய்விடட்டும் என்று எண்ணி அவ்வஜத்தை தன் கையால் நக்ஷிக பரியந்தம் தடவிக்கொடுத்து என் முன்னிலையிலேயே நீகேட்டபிரகாரம் எப்பொழுதும்நீஎன்னை தரிசித்துக்கொண்டு என்முன்னிலையிலே விருஷபரூபமாக இருக்கக்கடவாய் என்று அனுக்ரகம் செய்தார். உடனே சத்குருவின் அனுக்ரகப்பிரகாரம் எதிரில் அவ்வஜமானது மகாஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே விருஷபரூபமாக அமர்ந்து விட்டது, இதைக்கண்டு ஜனங்கள் மகா சந்தோஷத்துடன் ஆச்சர்யமடைந்தார்கள்.

இதைப்பார்த்துகொண்டிருந்த குரு அனுக்கிரகத்தினுல் முதலியார் வம்சத்தில் ஜடையோடு பிரந்த குருவின் சிஷ்யனுன சிதம்பரநாதனென்ற சடைச்சாமி குரு அனுக்கிறகத்தினுல் மகோன்னத பதவியையடைந்திருக்கிற அஜத்தைப்பார்த்து சந்தோஷமடைந்து, நாமும் குரு அனுக்கிறகத்தினுல் கிருதார்த்தனுக வேண்டுமென்று நினைத்து குருவை அனேகதடவை பிரதக்ஷணங்கள் செய்து அடிக்கடிநமஸ்கரித்து குருசரணாரவிந்தங்களை ப்பிடித்துக் கொண்டு, ஆனந்தக்கண்ணீர் பெருகவிட்டுக் கொண்டு ஒன்றும் அறியாத இவ்வேழையை ரக்ஷிக்கவேண்டும் அனுக்ரகிக்கவேண்டும் சரணம் சரணம்," என்று, பலதடவை சொல்லிக்கொண்டு பார்சுவத்தில் வணக்கமாகக்கைகட்டி வாதுகையினுல் வாயைப்பொத்திக்கொண்டு நின்று குருவைபார்த்து இச்சரீரமுள்ளவரையில் அபோரகதிட காத்திரனுயி

ருந்து கொண்டு தங்கள் ஆலயத்தைச்சுற்றிச் சுத்திசெய்து கொண்டும் அலங்கரித்துக்கொண்டும் தீபம் முதல்ான பணி விடைகளைச் செய்துகொண்டும் தங்கள் பூஜைக்கு சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் முதலான கைங்கர்யங்களைச்செய்து கொண்டும் ராஜாவினுல் நிவேதனர்த்தம் விடப்பட்ட பூமிகளை ரக்ஷித்துக்கொண்டும், அதனுல் இவ்வாலயத்தின் பூஜை முத லான பணிவிடைகளைச் செய்து கொண்டு வரும்படியாயும் எனது தேகத்தின் முடிவில் ஜனனமரணமில்லாத ஆனந்த ஸ்வரூபமான தங்கள் சாருரவிந்தமான சாயுஜ்ய பதவியை அடையும்படியாயும் அனுக்ரகிக்கவேண்டும் என்று அடிக்கடி சத்குருவைப் பிரார்த்தித்துக்கொண்டு நின்ருன்.

பிறகு கிருபாளுவான நமது சத்குரு மந்தகாசமான மலர்ந்த முகத்துடன் பிரார்த்திக்கும் சிஷ்யனைத் தன்கையினுல் சிரசு முதல் பாதம் பரியந்தம் தடவிக்கொடுத்து "உலகத்தில் பக்தி செய்தால் உன்னைப்போலல்லவோ செய்ய வேண்டும் என்று ஜனங்களுடைய முன்னிலையில் சொல்லிவிட்டு, உன்னு டைய பக்தியினுல் திருப்தியடைந்தேன். இன்னும் பணிவிடை ரூபமான பக்தியைச் செய்யவேண்டுமென்று கேட்பதாலும் சந்தோஷமடைந்தேன். நீ கேட்டபடி அநேக திடகாத்திர ருகவும், ஞானவைராக்கிய சம்பன்னனுகவுமிருந்து, இவ்வால யத்தின் சகலகாரியங்களின் பணிவிடைகளையும், பஞ்சநதீச்வர ரால் செய்துவரப்படும் பூஜைகளுக்கு சந்தனம் புஷ்பம் முதலான கைங்கர்யங்களையும், வெகுகாலம் செய்துக்கொண் டிருந்து, பிறகு நீ பிராமணுேத்தமனுகப் பிறந்து ஞானியாக யிருந்து சாயுஜ்ய பதவியையடைந்து சுகமாயிருப்பாய்" என்று அனுக்கிரகம் செய்தார்.

பிறகு சிஷ்யர்களுக்குச் செய்த அனுக்கிரகமான இவ்வாச் சர்யங்களைப் பார்த்துக்கொண்டிருந்த நமது சத்குருஸ்வாமிக்கு நிழலைக்கொடுத்ததாயும், சாய்வதற்கு ஆதாரமாயும், உட்காரு வதற்கு தனது மூலமாகிற வேரையே ஆசனமாகச் செய்த தாயுமிருந்த இந்த நல்ல மாமரமானது, நாமும் கிருதார்த்தனுக வேண்டுமென்று எண்ணி, சத்குருவைப் பிரதக்ஷிணம் செய் வதுபோல் தன்கிளைகளைக் காற்றில் அசைத்தும், தாழ்ந்தும்

சுற்றிக்கொண்டும், நமஸ்காரம் செய்வதுபோல் அடிக்கடி தன் கிளைகளை பூமியில் புரட்டிக்கொண்டும் தான்வேரோடு பிடுங்கிக் கொண்டு பூமியில் விழுந்து விடுவதுபோல் வேரோடுகூட கிளை களுடன் பூமிவரையில் சாய்கிறதும் நிமுருகிறதுமான செய்கை களைச் செய்துகொண்டும், "தங்களுக்குச் சிஷ்யனான என்னைச் சிலகாலம் தங்களுக்கு எதிரிலேயே இருக்கும்படி அனுக்கிர கித்து என்னைக் கிருதார்த்தனாகச் செய்யவேண்டும்" என்று வாக்கினால் பலவாராக ஸ்துதித்துப் பிரார்த்தித்து, "சரணம், சரணம், ரக்ஷிக்கவேண்டும்" என்று சொல்வதுபோல் பெருத்த ஓசையைச் செய்துகொண்டு ஆனந்தக்கண்ணீர் வடிப்பதுபோல் சரகுகளை உதிர்த்துக்கொண்டு நின்றது.

நம் முன்னிலையில் இப்படிப் பிரார்த்திக்கிறதாயும், நமக்கு இது பரியந்தம் நிழலைக்கொடுத்து வாசத்திற்கு இருப்பிடமா யிருந்த அம்மாமரத்தைப்பார்த்து அதனுட்கருத்தை அறிந்து சர்வாந்தரியாமியாயும் மகாதயாளுவாயுமிருக்கிற சௌந்தரிய லக்ஷ்மீவிலாசம் போன்ற புன்னகையுடன் நமது குருஸ்வாமிகள் "ஹே! புண்ணியவிருக்ஷமே! பயப்படாதே" என்று அபயம் கொடுத்து, "உன்னிஷ்டப்படி வெகுகாலம் என் முன்னிலை யிலேயே சகல ஜனங்களுக்கும் சர்வ இஷ்டங்களையும் கொடுக் கின்ற விஷயத்தில் கல்பக விருக்ஷம்போல் இருந்து கொண்டும், உன்னிடத்தில் பாமபக்தியோடு உனக்குத்தீர்த்தம் விடுகிறதும் பிரதக்ஷிணம் முதலான பூஜைகளை எவர்கள் செய்கிறார்களோ அவர்களுக்கும், என் சன்னதியில் உன்னுடைய நிழலில் சமஸ்த ஜனங்களும் கிழக்கு முகமாகப் பரிசுத்தர்களாக உட் கார்ந்து எந்தெந்த மனோபீஷ்டங்களை உத்தேசித்து எந்தெந்த ஜெபம் செய்கிறார்களோ அவர்களுக்கும் என் அனுக்கிரகத் தினால் ஜபசித்திகளையும் சர்வாபீஷ்டங்களையும் அடையும்படி செய்து வைத்து நீயும் அந்தியத்தில் பிராமண ஜென்மாவை அடைந்து குருபக்தியோடு என் அனுக்கிரகத்தினால் கிருதார்த் தனாக ஆகிவிடுவாய் என்று சொல்லி பூரணமாக அனுக்கிர கித்தார்.

பிறகு மாமரம் முதலானவர்களுக்கு குருஸ்வாமிகள் செய்த அனுக்கிரகமான இவ்விசித்திரங்களை யெல்லாம் பார்த் துக்கொண்டிருந்த தஞ்சை அரசன் நமது சற்குருவை பிர

தக்ஷிண நமஸ்காரம் செய்து கையை அஞ்சலிபந்தம்செய்துக் கொண்டு பார்சுவத்தில் நின்று வணக்கத்தோடு தயாமூர்த்தியான சத்குருவை நோக்கி, "ஹே சக்குரோ! அடியேனுக்கு எதாவது அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க அதற்குக் கிருபைகூர்ந்து ஸ்ரீமத் சத்குருஸ்வாமிகள் மந்தகாசத்துடன் அரசனைப்பார்த்து, "இவ்வாலயத்தையும் இவ்வாலயத்தின் பூஜார்த்தமாக சடையோடு கூடப்பிறந்த சிதம்பரநாத முதலி பரிபாலித்துவரும் பூமிகளையும் காவலராக இருந்து காத்து ரக்ஷித்துக்கொண்டும் உன் ராஜ்ஜியத்திலிருக்கும் பிரஜைகளிடத்தில் அநீதியான அதிகவரி முதலான திரவியங்களைக் கிரகிக்காமலும் மனுநீதிசாஸ்திரப்படி ராஜ்ஜியங்களை பயபக்தியோடு ஜாக்கிரதையாய் நீதி தவறாமல் நடத்திக்கொண்டும், குடும்பத்தோடு இகத்திலிருந்து பரம சுகங்களை வெகுகாலம் அனுபவித்து மங்களஸ்வரூபமான சாயுஜ்யத்தை அடைவாய் என்று பூரணமாக அனுக்கிரகித்தார்.

பிறகு இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் முதலான சமஸ்த ஜாதிகளான ஜனங்களும் இந்த சத்குருவை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து நாங்களெல்லோரும் சகல க்ஷேமங்களையும் அடைந்து சுகித்திருக்கும்படியாய் அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவர்களைப்பார்த்து ஸ்ரீமத் அனந்தபத்மநாப நாராயண குருஸ்வாமிகள் மன மகிழ்ச்சியடைந்து புன்சிரிப்போடு "மகா ஜனங்களே! குருபக்தி இருக்கிறவரையில் உங்களுக்கு ஒரு குறைவும் வரமாட்டாது. வருஷந்தோறும் ஜீவசமாதியில் உட்காருகிற இவ்வஷ்டமி தினத்தில் தரிசித்து வாருங்கள் அப்படி தரிசித்து வந்தீர்களேயானால் நீங்கள் கேட்டபடி உங்களுக்குப் புத்திர மித்திர களத்திர தனதான்யங்களும், பசுக்கள் க்ஷேத்ராதிகளான சமஸ்த மங்களங்களுமுண்டாய் சுகஜீவியாயிருப்பீர்களென்று அனுக்கிரகித்தார்.

இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம். 22.

அனந்தவைத்தியனாதா! குருஸ்வாமிகளின் விசித்ரமான மகிமையைக்கேள் என்று அனந்தநாராயணர் சொல்லுகிறார்.

அச்சபையில் மகாஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போது குப்தசிவன் இடது புறத்திலும், பஞ்சநதீஸ்வரர் வலது புறத்திலும், சங்கரசிவன் கிருஷ்ணசிவன் முதலான அனேக சிஷ்யர்களோடு அஞ்சலிபந்தத்துடன் ஸ்தோத்திரம் செய்து கொண்டு நிற்க, தன் கர்பகிரகத்தில் சமாதியினுக்குத்தகுந்த மூன்று முழம் ஆழமுள்ள ஸ்தானத்தில் ஜடாமகுடதாரியாயும் உத்தாளன, அவகுண்டன, திருபுண்ட்ராங்கிதமஸ்தகராயும், உபவீத விபூதி ருத்ராக்ஷ மாலாலங்கிருதராயும் கௌபீனதாரியாயுமிருக்கிற நமது அனந்த பத்ம நாராயண குருஸ்வாமிகள் இறங்கி நின்றுகொண்டு இந்த லோகத்திற்கே க்ஷேமத்தை உண்டுபண்ண வேண்டுமென்று தீக்ஷை செய்துகொண்டவர் போல் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு பிரதக்ஷிணமாகத் தன்னைத்தானே ஒருதடவை சுற்றி வடக்கு முகமாக ஆத்மானு சந்தானம் செய்துகொண்டு தான் ஜீவனோடு சர்வ பிராணிகளுக்கும் மங்களத்தை உண்டுபண்ணுவதற்காகவே உலக க்ஷேமத்தின் பொருட்டும் தீக்ஷை செய்துகொண்டவர்போல் சத்குரு ஜீவனோடு சமாதியிலமர்ந்தார்.

பிறகு குரு சொன்னபடி உடனே குப்தசிவனும், பஞ்சநதீஸ்வரரும் மூடுபாறையால் மூடி லிங்காகிருதியாயிருக்கிற சிரஸ்தானமான சதுரஸ்ரமாய் விளங்கும் சமாதி வேதிகையில் இரண்டுபேரும் பூஜை செய்ய யத்தனிக்கும்போது ஆனந்த சாகரத்தில் மூழ்கி ஆனந்தபாஷ்பத்தைப் பெருகவிட்டுக் கொண்டு, புளகாங்கிதர்களாயிருந்துகொண்டு பக்தி சிரத்தையோடு ஸ்ரீமத் சத்குருவை அச்சமயம் சத்குருவால் தங்களுக்கு உபதேசம் செய்த ஹாதத்தாச்சாரிய சந்தியாவந்தன கல்ப பூஜாவிதானப் பிரகாரம் யதாவிதியாய் பூஜித்தார்கள். அச்சமயத்தில் அஷ்டாதச வாத்தியங்களும் முழங்க தேவர்கள் புஷ்ப வருஷம் வருஷிப்பதுபோல் மகரிஷிகளும், ராஜாக்களும், பிராஹ்மணோத்தமர்களும், சமஸ்த ஜாதிகளான சர்வஜனங்களும், புஷ்பங்களையும் அக்ஷதைகளையும் சந்தனக் குழம்பையும் வாரியிறைத்தார்கள். ரிஷி பத்னிபோல் விளங்கும் அநேக பிராமணஸ்திரீகள் முதலானவர்களும் பூர்ணகும்பம் முதலான வஸ்துக்களை வைத்துக்கொண்டு லாஜாங்களை (பொரியை) வாரி இறைத்தார்கள். சர்வ ஜனங்களும் தங்கள் தங்களுக்கு க்ஷேமம் உண்டாயிற்று. கிருதார்த்தனை ஆய்விட்டோம்

என்று நினைத்துத் தரிசித்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம்செய்து பிரசாதம் பெற்றுக்கொண்டு அவரவர்கள் இருப்பிடம் சென்றார்கள். தேவலோகத்தில் தேவர்கள் பூலோகத்தின் சேமத்தின் பொருட்டு குரு அமர்ந்த மஹோத்ஸவத்தை சந்தோஷத்துடன் துந்துபி முதலான கோஷிக்க, புஷ்பவருஷங்கள் வருஷிக்க அப்சரசுகள் நர்த்தனம் செய்தும், கந்தர்வர்கள் கானம் செய்தும் சந்தோஷத்துடன் கொண்டாடினார்கள்.

குப்தசிவன், சங்கரசிவன் முதலானவர்களுடன் பிரதக்ஷிண நமஸ்காராதிகளான பூஜைசெய்து ஸ்தோத்திரங்கள்செய்து அனுக்ரகம்பெற்று உலகத்தை ஆசீர்வதித்து, மகா மங்கள ஸ்வரூபமாய் சென்றார்.

பஞ்சநதீஸ்வரர் குருவின் ஆக்ஞாபிரகாரம் குருவின் சன்னிதானத்திலிருக்கும் விநாயகரையும், விருஷபரூபமான அஜத்தையும், ஸ்ரீ அனந்தபத்மநாப நாராயண குருவையும் பிரதி தினமும் லோகாரக்ஷார்த்தம் மகா பக்தி சிரத்தையோடு பூஜை செய்து வந்தார்கள்.

குருவின்சிஷ்யனான ஜடாசாரியும் வெகுகாலம் ஆலயத்தை வெகு பரிஷ்காரமாய் சுத்தம்செய்து அலங்கரித்து பூஜைக்குப் பூ முதலான கைங்கர்யங்களை பக்தி சிரத்தையுடன் நடத்தி, தீபம் முதலானதுகளும்போட்டு குருவின் பூஜார்த்தமாக ராஜாவினால் விடப்பட்ட பூமிகளையும் ரக்ஷித்து ஆலய கர்மத்தைப் பரிபாலனம் செய்து வந்து குருவின் அநுக்கிரகத்தினால் குரு பிரசாதத்தை அடைந்து கொண்டிருந்தான்.

அந்த குரு அமர்ந்த தினம் முதல் எந்த தினத்திலும் வருஷந்தோறும் குரு அமர்ந்த தினமான மகா புண்ணிய தினத்திலும் சமாதியை தரிசிப்பவர்களுக்கு இந்த குருவின் சரித்திரத்தை கேட்கிறவர்களுக்கும், படிக்கிறவர்களுக்கும், கேட்கும்படி செய்கிறவர்களுக்கும், பக்தி சிரத்தையோடு குரு கைங்கர்யத்தையே பிரதானமாகச் செய்கிறவர்களுக்கும் சத்குருவின் அனுக்கிரகத்தினால் இகத்தில் அரோக திடகாத்திரர்

களாயும், தீர்க்காயுஷ்மான்களாயும் புத்திர மித்திரகளத்திர பந்துபரிஜன தனதான்ய பசுக்கிரகக்ஷேத்ராதி சர்வ சம்பத்துகளுடன் சுகஜீவிகளாயிருக்கும்படி அனுக்கிரகித்துக்கொண்டு விஷ்பவன க்ஷேத்திரத்தில் ஜீவனோடு சமாதியில் ஸ்ரீமத் அனந்தபத்மநாப நாராயண குருசுவாமிகள் மங்களஸ்வரூபராக இருந்துகொண்டு தன்னையாச்சிரயித்த பக்த ஜனங்களுக்கு சர்வாபூஷ்டமான மங்களத்தையும் கொடுத்துக் கொண்டும் அத்யாபி வழங்கிக்கொண்டே வருகின்றார்.

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் 23

ஹே! அனந்தவைத்தியநாதா! நீ கேட்டபடி குருஸ்வாமிகளின் சரித்திரத்தை விஸ்தாரமாய் சங்கரசிவன் தனது சிஷ்யனை கிருஷ்ணசிவனுக்குச் சொன்ன பிரகாரம் உனக்குச் சொன்னேன் ஆகையால் நீயும குருபக்தி செய்து வந்தால் குருவின் அனுகிரகத்தால் குருவைப்போலிருந்து ஆத்மசாக்ஷாத்காரத்தை அடைந்து சர்வேஸ்வரனாக ஆய்விடலாம் இன்னும் கொஞ்சம் ரகஸ்யம் சொல்லுகிறேன கேள் இந்த குருஸ்வாமிகளின் சரித்திரத்தை பக்தியோடு சர்வ ஜனங்களுக்கும் உபதேசிக்கிறவர்களென்ன, இந்த சரித்திரத்தை பக்தியோடு ஏகாக்கிரசித்தமாய் வேறு இடத்தில மனதை செலுத்தாமலிருந்து கொண்டு நன்றாகக் கேட்கிறவர்களென்ன, இந்த சரித்திரத்தை குருசன்னிதானத்திலும், ஈஸ்வர சன்னிதானத்திலும், மடாதிகளிலும் தீர்த்தக்கரையிலும் புண்ணியக்ஷேத்திரங்களிலும் வீடுகள் முதலான பரிசுத்தமான இடங்களிலும் சர்வஜனங்களும் நன்றாக கேட்கும்படி புராணங்களை அறிந்த மகான்களான பெரியோர்களைக்கொண்டு புராணத்தின் கதாப் பிரசங்கத்தை நன்றாக நடத்திவைப்பவர்களென்ன அப்படி நடத்திவைப்பவர்களுக்கு உதவியாய் இருந்து திரவியத்தாலும் வாக்கு சகாயத்தாலும் உபகாரம் செய்கிறவர்களென்ன இவர்களை கீழ்ச்சொல்லிய பிரகாரம் பொருள் முதலான ஒருவித உதவியும் செய்யாமற்போனாலும் உதவி செய்பவர்களையும் முதன்மையாக இருந்து பக்தியாக நடத்திவைப்பவர்களையும் கதாப்பிரசங்கம்

செய்யும் பெரியோர்களையும் பலவர்று இகழ்ச்சியாகப் பேசுகிர
வனும் புண்ணியத்தைக் கொடுக்கக்கூடிய கதைமுதலான சகல
தர்மகாரியங்கள் பூர்த்தியாக நிறைவேறுமலிருக்கும்படிசெய்கிற
வனும் தனக்கு ஒருவித பிரயோஜனமன்னியில் அவைகளைத்
தடுத்து முடிவு அடையாமலிருக்கும்படி செய்துவிடுகிறவனும்
இப்படிப்பட்டவன் குருமுதலான சர்வதேவதைகளாலும் தான்
மாத்திரம் நாசத்தையடைவதுமல்லாமல் தன் பெண்டு பிள்ளை
கள் முதலான வம்சத்துக்கும் இன்னும் தன்னைச்சேர்ந்தவர்
களுக்கும் நாசத்தை உண்டுபண்ணிவிடுகிறுன். இப்படிச்செய்
யாமல் இந்தப்பொதுவான தர்மகாரியங்களுக்கு பலவிதமான
உதவி செய்பவர்களையும் நடந்து வருகிற தர்ம காரி ங்களைய
புகழ்ந்து பேசுகிறவர்களென்ன மனசுக்கு ஆனந்தமாய பாரா
யணஞ் செய்வதற்கும் சர்வஜனங்களும் கிருதார்த்தர்களாக
ஆகும்படி சொல்லுகிறதற்கும் சுரோத்திரானந்தமாய்க் கேட்
பதற்கும் வீடுகளில் குருவின் சரித்திரமான புஸ்தகத்தை
வைத்து பூஜிக்கிறதற்கும் யோக்கியமான இந்தக்குருவின் சரித்
திரத்தை நன்றாக எழுதுகிறவர்களென்ன எழுதியெழுதி
தானம் செய்கிறவர்களென்ன இந்த புஸ்தகத்தை வீட்டில்
வைத்து பூஜிப்பவர்களென்ன இவர்களான எல்லோரும் அவர்
களின் குடும்பங்களும் குருவின் அனுக்கிரகத்தால் ஆதியாகிற
மனக்கவலைகள் முதலான பீடைகளென்ன வியாதியாகிற சரீ
ரத்திலுள்ள சர்வரோகங்கள் முதலிய பீடைகளென்ன பூதப்
பிரேத பைசாச நவக்கிரக ஆபிசார கிருத்திய ஏவல் பில்லி
சூன்ய அகாலமிருத்யு புத்திர பிரதிபந்தக சத்ருஜன உபத்திர
வங்கள் முதலான சமஸ்த பீடைகளென்ன சர்வ தோஷங்க
ளென்ன சமஸ்த பாபங்களென்ன இவைகளினின்றும் அடி
யோடு நிவர்த்தியடைந்து இகத்தில்புத்திர மித்திர பௌத்திர
களத்திர பந்துஜபரின தனதான்ய பசுக்கிரக க்ஷேத்திரங்கள்
முதலான சகல சம்பத்தோடு அரோக திடகாத்திரர்களாயும்
தீர்க்காயுஷ்மான்களாயும் வாழையடி வாழையாக மிக்க சுகஜீவி
களாயும் வெகுகாலம் இல்லற வாழ்க்கையில் வாழ்ந்திருந்து
கடைசியில் குருவின் பிரசாதத்தால் இல்லற வாழ்க்கையாகிறது
இந்த சம்சாரமான பிரபஞ்ச முழுவதும் பொய்யென்றறிந்து
வைராக்கிய சம்பத்தோடு ஞானியாய் மௌனம் சாதித்து
சரீரத்தோடு ஜீவன் முக்தர்களாயிருந்து விதேகமுக்தியென்கிற

சரீரமில்லாமலும் ஆத்மஸ்வரூபத்தைத் தவிர வேறு இல்லாத தாயிம் எங்கும் நிறைந்தகாகும் சர்வபிராணிகளுடைப் ஹிருத் குகையில் வசிப்பதாயும் மலை, ஜலம், கொடி, புல், பூண்டு, விருக்ஷங்கள் முதலான எல்லா இடங்களிலும் சர்வாந்தரியாமி யாய் வசித்திருப்பதாயும், ஆகாயம்போல் எங்கும் வியாபித் திருப்பதாயும் ஸ்வப்பிரகாசமாய் ஒரே பரஞ்ஜோதியாய் வழங்காநின்ற பரம்பிரம்ம வஸ்துவான பரம்பொருளாகவே ஆய்விடுவார்கள்.

அதாவது மறுபடியும் மாதாவின் வயிற்றில் வாசக்தோடு ஜனன மரணமென்ற இந்த சம்சாரமாகிய பெரியசுழலில் அகப் படாமல் எப்பொழுதும் அழிவில்லாத நித்யானந்த ஸ்வரூப மாய் எந்த பரபிர்ம வஸ்துவானது விளங்குகின்றதோ அந்த பரபிர்ம வஸ்துவான மோக்ஷமென்கிற சாக்ஷாத்காரமாகவே ஆய்விடுவார்கள் இது சத்தியம் சத்தியம் சத்தியம் என்று சிரசில் கையைக் கூப்பிக்கொண்டு சங்கரசிவன் மூன்று தடவை சொன்னார். அங்கிருந்த எல்லோரும் பயபக்தியோடு சந்தோ ஷத்தில் மூழ்கினார்கள்.

பிறகு யாகசாலையிலிருந்த சகல ஜனங்களோடு ஆனந்த சாகரத்தில் மூழ்கி நாம் எல்லோரும் புனிதர்களாக ஆனோம் என்று சொல்லிக்கொண்டு மகாசந்தோஷத்தோடு இந்தகுரு வின் புண்ணிய சரித்திரத்தையும், வெகுவித தர்மங்களையும் உபதேசித்த மகானை சங்கரசிவனே கந்த புஷ்பாதிகளால் பூஜித்தார், மகாஜனங்களும் அவரவர் சக்திக்குத்தகுந்தபடி வஸ் திராபரணங்கள் முதலான திரவியங்களால் நன்றாக பூஜித்தார் கள்.

"ஹே! அனந்த வைத்தியநாதா! நீ ஆதியில் கேட்டபிர காரம் உலகில் சர்வ ஜனங்களுக்கும் எவ் விதமான சிரமமுமன் றியில் வெகு சுலபமாய் இகத்தில் புத்திரமித்ரர்கள் முதலான சகல சம்பத்துக்களோடு சுகஜீவிகளாக வாழ்ந்திருந்து கடைசி யில் நித்யானந்தஸ்வரூபமான மோக்ஷத்தை யடைவதற்கு குரு [illegible] தவிர வேறுமார்க்கம் கிடையாது நிச்சயம்.

ஆகையால் உலகில் சகல ஜனங்களுக்கும் குரு பக்தியைச் செய்தால் குருவின் அனுக்கிரகத்தால் சகல சித்திகளையும் பெற்று தர்மார்த்த காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களோடும் சுகமாக வாழ்ந்திருந்து பிறகு பிர்மானந்தமான மோக்ஷமென்ற நான்காவது ருஷார்த்தத்தை அடைந்து மங்கள ஸ்வரூபராகவே வழங்கிவருவார்கள்" என்று தனது சிஷ்யனை அனந்த வைத்தியநாத சிவன் என்பவரை நோக்கி அனந்த நாராயணரென்ற ஸ்தாணுசிவன் புண்ணியங்களைக் கொடுக்கக் கூடிய சத்குருவின் சரித்திரமான மங்களத்தைச் சொன்னார்.

பிறகு அனந்த வைத்தியநாத ரென்பவர் இஷ்டசித்திகளைக் கொடுக்கக் கூடிய பரிசுத்தமான வாஞ்சாகல்பலதாஹோமமென்ற யாககார்சனார்த்தம் வந்திருந்த சர்வமகாஜனங்களுடன் நாம் கிருதார்த்தர்களாக ஆனோமென்று சந்தோஷத்தில் மூழ்கி ஆனந்தத்தோடு பலவித தர்மங்களையும் ஸ்ரீமத் அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமிகளின் அற்புதமான புண்ணிய சரித்திரத்தை உபதேசித்த மகானை அனந்த நாராயண ரென்ற ஸ்தாணுசிவனை மகா விஷ்ணு ஸ்வரூபமான வியாசபகவானென்று நினைத்து புஷ்பாதிகள் முதலானவைகளால் நன்றாய் பூஜித்தார் அங்கிருந்த சர்வமகாஜனங்களும் தனது சக்தியை அனுசரித்து பக்திசிரத்தையோடு வஸ்திராபரணங்கள் முதலான திரவியத்தால் விசேஷமாக பூஜித்து சமஸ்த மங்களத்தையும் அடைந்து சுகித்திருந்தார்கள்.

சத்குருவான ஸ்ரீ அனந்த பத்மநாப நாராயண குருஸ்வாமிகளின் சரித்திரம் முற்றிற்று.

லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோபவந்து சமஸ்த மங்களானிஸந்து.

HARAJAH SERFOGI'S SARAS

## குரு பரம்பரை.

சிவ ஸ்ரீ மகாகைலாஸாதிபவையே, சிவ ஸ்ரீ மேதாதக்ஷிணாமூர்த்தா சர்யேந்திர ஸ்வரூபாயா, சிவ ஸ்ரீ நாராயணா, சிவ ஸ்ரீ பஞ்சநதீஸ்வா, சிவராமசுப்பிரமணிய, சிவ அனந்த வைத்திஞத, சிவ அனந்தநாராயண, சிவ பஞ்சநதீசுவா, சிவ குப்தசிவ, சிவ அனந்தபத்மநாப, சிவ சித்பானந்த, சிவஞானபோத, சிவ ஹாதத்த நமசிவாய, சிவாசார்யஸ்வரூபாய, ஓம் நமசிவாயைச் நமசிவாயா.

| | குரு பரம்பரை. | நாமதேயம். | ஊர் பெயர். |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஹாதத்தசிவாசார்யாள் | ஸுதர்சனுச்சாரியாள் | கஞ்சனூர். |
| 2. | சிவக்ஞானபோதர் | ஹாதத்தர் | ஷை |
| 3. | சிவசித்பாநந்தர் | ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் | திருவிடைமருதூர். |
| 4. | சிவ அநந்தபத்மநாப | நாராயண குருஸ்வாமிகள் | கிரிதுர்கம், திருப்பூந்துருத்தி. |
| 5. | குப்தசிவர் | குப்புசிவன் | தஞ்சாவூர். |
| 6. | சிவபஞ்சநதீஸ்வரர் | பஞ்சநத சாஸ்திரிகள் | திருவையார். |
| 7. | சிவ அனந்தநாராயணர் | ஸதாணுசிவன் | கச்சுக்கட்டு. |
| 8. | அனந்தவைத்தினுதர் | வைத்தினுதசிவன் | ஷை |
| 9. | சிவராமசுப்ரமண்யர் | சுப்ரமண்யசிவன் | ஷை |
| 10 | சிவபஞ்சநதீஸ்வரர் | சுவாமிநாத சிரௌதிகள் | திருவையார். |
| 11 | [illegible] | [illegible] | ஷை |
| 12 | [illegible] | [illegible] | ஷை |